உ

கடவுள் துணை.

V.49577
T·11575

# புரூரவச்சக்கிரவர்த்திகதை.

இஃது,

திருமயிலை வித்வான்

சண்முகம்பிள்ளையவர்கள் மாணாக்கர்

**ம-இராமலிங்கமுதலியாரால்**

சுத்தப்பிரதியாகப் பரிசோதிக்கலுற்று,

சிட்டத்தூர்,

**செங்கல்வராயமுதலியாரது**

சென்னை:

சிற்றம்பலவிலாசம் பிரெஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

மகாராசா சத்தியதரும நீதிகள் தவறாமல் அரசுசெலுத்தி வருங்காலத்தில் ஒருநாள் வனத்தில் வேட்டைக்குப்போகக் கருதித்தாமும் தமது மந்திரிகளும் ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனைகளோடு வனத்தில் பிரவேசித்து ஆரண்யங்களெல்லாந் திரிந்து நானாவித அஸ்திர சஸ்திரங்களினால் விசித்திரமாகிய வேட்டைகளாடிக் கொண்டுவெகுதூரஞ் சஞ்சரித்தூர் சந்தோஷித்துக்கொண்டு இவ்வரசன் முதலிய யாவருந் தங்களூழ்வினையைக் கடக்கசக்தியற்றவர்களாய் ஸ்ரீஅம்பிகாதேவி சாபசம்பந்தமான குமாரவனத்திற்பிரவேசித்தனர்கள். வராய் அரசனே அவ்வனத்தில் நுழைந்தமாத்திரத்தில் விந்தசுததியும்னமகாராஜன்முன் தானந்தயாகத்திற் ஜென்மித்த சுவரூபமுமாகிய இளாதேவி உருவமாகாது தோற்றி பெண்ணுருவமாய் விட்டனர். தன் மந்திரிகளுமவ்வனத்தில் நுழைந்து சதுரங்கசேனைகளும் பெண்ணுருவங்களாய் விட்டனா. சில புருஷர்கள் நடந்தவைகள்கண்டு மிகவும்வியாகூலப்பட்டு நகரம்போய்ச்சேர்ந்து அவ்விடத்திலுள்ள ராசபத்தினிகள் முதலியயாவருக்கு மறிவித்தனர்கள். அவர்களுடனே மனுமுதலிய வசிஷ்டர்களுக்குத் தெரிவித்து விருத்திஷ்டைகளை யாசரித்துக்கொண்டிருந்தனர்கள். வாராப்ராஜனே! இவ்விடத்திலிருந்த சுத்தியும்னன்விஸ்வரூப இளாதேவியானவள் தானொருராஜகன்னியாகவும் மற்றவர்களெல்லாந்தனக்குத்தோழிமார்களாகவும்விளங்கச்செய்தது ந் தவிர்வதுந்தோற்றாமல் பிராந்தசித்தர்களாய்ச சஞ்சரித்துக்கொண்டு புதபகவானுடைய ஆசிரமத்தில்வந்து சேர்ந்தனர்கள். இந்த இளாகன்னிகையும் தனதுதோழிமார்களு மவ்வனத்திற் சஞ்சரித்துக் கந்தமூலபலாதிகளைப் பட்சித்துப்பெண்டு நாதனில்லாதவர்களாய்ப் பகற்பொழுதெல்லாம் மகாவிருட்சங்களின் நிழல்களிலுஞ் சோலைகளிலுந் தங்கியிருந்து இரவுகளில் வியாக்ரப சார்த்தூலாதி மிருகங்களுக் கஞ்சி புதபகவானுடைய பர்ணசாலையில் வந்து வாசஞ்செய்து கொண்டிருந்தனர்கள்.

அந்த புதபகவானானவர் நவக்கிரகங்களில் தானொரு ஆதிபத்தியம் வேண்டி தவஞ்செய்து நிஷ்டையிலிருந்து ஒருநாள் நிஷ்டைகலைந்து தெய்வீகமாகத் தனது ஆசிரமத்தை யடைந்திருக்கின்ற இந்தசுந்தரவதிகளான பெண்களைக்கண்டு ஆச்சரியமானவராய் இந்திரியங்கள் சலித்து உள்ளங்கலங்கி இவர்களைநயமாக அழைத்துவாருஞ்சுகுமாரிகளாகிய கன்னியாமணிகளே! நீங்களார்? இவ்விடத்திற்கேன்வந்தீர்கள்? உங்களுக்கு வேண்டுவதென்னவென்று அன்புடனேவினவ, அவர்களுந் தங்கள் விருத்தாந்தங்களைச் சொல்லி நாதனற்றவர்களாய் ஆதரவில்லாமலலைந்துகொண் டிருக்கிறோமென்று வியாகூலமாகச்

சொல்லிக்கொள்ள அவருந்தயாளுவாய் அவர்களையாதரித்து இளாக்கன்னிகையைத்தான் காந்தருவமா யங்கீகரித்துச் சிலகாலம் அவளுடன்கூடிச்சுகபோகங்களை யனுபவித்து மகாகுணசாலியான புரூரவநாமதேயமான ஒருபுத்திரனைபெற்று அந்த புத்திரனுக்குச்சகலகலை ஞானங்களையும் தனுர்வித்தியாப்பியாசங்களையும் கற்பித்து மிகவும் யோக்கியனாகச்செய்து பின்பு எப்போதும்போலத் தவஞ்செய்யத் தொடங்கித் தவநிஷ்டை யடைந்து இவர்களை விட்டுக் காலசக்கிரகதியில் புதமண்டலாதி பத்தியத்தை யடைந்தனர்.

அதன்பின்பு இந்த இளாதேவியானவள் தனக்கொன்றுந் தோற்றாமல் வியாகூலத்தை யடைந்து பூர்வஞாபகங்கள் தோற்ற மகாபுத்திசாலியான புரூரவபுண்ணிய புத்திரனை யழைத்துக்கொண்டு ஸ்ரீவசிஷ்டபகவானுடைய ஆசிரமத்திற்குவந்து அவருக்குச்சாஷ்டாங்கமாகத் தெண்டன்பண்ணித் தனதுவிருத்தாந்தங்களைச் சொல்லிவியாகூலப்பட்டு எங்களையும் இரட்சிக்கவேணுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிற தருணத்தில் வைவசுவதமனுவு மிந்தப்பெண்ணாகிய சுத்தம்னருடைய பத்தினிகளும் அவிடம்வந்து இவர்களைப்பார்த்துச் சிந்தாக்கிராந்தர்களாய் விசனப்பட்டு ஸ்ரீவசிஷ்டபகவானைப் பிரார்த்தித்தமாத்திரத்தில் அவர்மிகவுந் தயாபரிபூரணராய் மகாயோகநிஷ்டையைவகித்து ஸ்ரீமகாதேவராகிய பரமசிவனைத் துதித்துத் தியானஞ்செய்ய அப்பரமசிவனனவர் மிகுந்த கிருபையுடனே இருவருக்கும் பிரசன்னமாகத் தோற்றிநின்றனர்.

அப்போது ஸ்ரீவசிஷ்டரும் இம்மனுவும் ராசபத்தினிகளும் இந்த இளாதேவியும் ஆனந்தத்தையடைந்து துதித்து ஓ எங்கள்கடவுளே எங்கள்மனோரதங்க ளீடேற இந்த இளாதேவியினுடைய பெண்ணுருவதோஷந்நீங்கி ஆணுருவாகி சுத்தியும்ன ஸ்வரூபத்தையடையும்படி வரந்தந்து இரட்சிக்கவேணுமென்று பிரார்த்தித்தமாத்திரத்தில் பரமசிவனனவர் மிகவுங்கிருபாநிதியாய் வாரீர்ஸ்ரீவசிஷ்டரே உமது தவத்திற்குமனமுவந்து ஓர்மாதமளவு மெப்போதும்போல சுத்தியும்னமகாராசனாகவிருந்து இப்பூமி பரிபாலஞ்செய்து இராச்சியசுகபோகங்களை அனுபவிக்கக்கடவன் அந்தவனத்திற்கு ஸ்ரீஉமாதேவியினுடைய சாபமாகையாலந்த திவ்வியவாக்குப் பங்கமில்லாமல் மாசாந்திரத்தில் மூன்றுநாள் பெண்ணுருவத்தையடைந்து அந்தச்சாபத்தையனுபவிக்கக்கடவனென்று வரங்கொடுத்து இரட்சித்து யாவருந்துதிக்க அந்தர்த்தானமாய்விட்டார்.

பின்பு ஸ்ரீவசிஷ்டபகவானுடைய அனுகூலத்தினால்யாவரும் பிரதிஷ்டானபுரம் வந்துசேர்ந்து இந்தசுத்தியும்ன மகாராசனைராச்சியாதி.

காரத்தில் ஸ்தாபித்து இராச்சியசுகபோகங்களை வெகுகாலமனுபவி
த்திருப்தியடைந்து-உதகலன்-கெவயன்-விமலன்-என்று சொல்ல
படுகின்றமூன்றுநற்குணப் புண்ணியபுத்திரர்களைப்பெற்று அந்தபுத்
திரர்கள் விர்த்தியடைந்து சகலவித்யாபாரங்கதர்களாய் சுத்தவீரபலப
ராக்கிரமசாலிகளாய் விளங்கக்கண்டு இவ்வரசனனவன் அவ்வரசாட்சி
க்குஉட்பட்டராச்சியங்களை மூன்றுபாகமாகச்செய்து அவர்களைநியமி
த்துஇம்மூன்றுபிள்ளைகளுக்குங்கொடுத்துபட்டாபிஷேகஞ்செய்து அ
வர்களைநியமித்துவிட்டுத் தான் ஆண்டுகொண்டிருந்த பிரதிஷ்டானிபுர
த்தை இந்த புரூரவருக்குப் பட்டாபிஷேகஞ்செய்து நிலைநிறுத்திச்சரு
வகாமியார்த்தங்களில் நின்றும்மனம்வெறுத்து யாவரையுமழைப்பித்
துப் புண்ணியநீதிகளையும் இராச்சியதருமங்களையும் பிரஜாபரிபாலன
விதிகளையுஞ்சொல்லி இவர்களிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு தன
துபூர்வகருமவினைகள் நசித்துப் புண்ணியலோகங்களையடைய மன
தைத்திடப்படுத்தியடைந்து தவஞ்செய்ய வனத்திற்சென்றனர்.

வாராய் தருமராஜனே! இந்தப் புரூரவன் சவுரியதைரிய புஜ
பலபராக்கிரமனுகிர் சுத்தவீரதருமகுணங்களாலும் மகாராஜ சுபலட்
சணமும் கம்பீரமும் சத்தியமும் தருமமும் ராசநீதியும் மகாகுணங்க
ளினாலும் தான்சக்கிரவர்த்தியாய்ச் சகலவைபவங்களையும் ஒருதவளச்
சக்கிரநீழலில்செங்கோல்நடாத்தித்திக்குவிஜயங்கள்செய்து மகாராஜா
திராஜாக்களெல்லாந் தனக்குக்கப்பங்கள் செலுத்தித் தன்னுக்கினையி
லிருக்கும்படி யிசைவித்து விஜயசாலியாய் இராச்சியபோகங்களை யனு
பவித்துக்கொண்டு மகாகீர்த்தியடைந்து வாழ்கின்றதருணத்தில் இந்
திரலோகமாகிய சுவர்க்கமகாசபையிலேதேவேந்திரனனவன் திரிலோ
காதிகாரங்களைச் செலுத்தித் தேவமாதர்களாகிய - ரம்மை - ஊர்
வசி-திலோத்தமை முதலிய அப்சரஸ்திரீகளினுடைய தெய்வநடனம
துரமான இசைகளைக்கேட்டுநேத்திரோச்சவமாக நடனங்களைப்பார்த்
துக்கொண் டிருக்கும்போது சமஸ்தமானதேவதைகளும்வந்து நிறை
ந்திருக்கின்ற அங்கச்சபைக்கு மித்திராவருணனென்கிற தேவதைகள்
வந்தனர்கள் அப்போதுசகலமான கந்தர்வர்களும்ஊர்வசியைத்தவிர ம
ற்ற அரம்பையர்களும் மரியாதைசெய்ய அங்கீகரித்துச் சந்தோஷித்
தனர்கள் இந்தஊர்வசியானவள்நடனஞ்செய்து அலுத்து ஆயாசந்தீர்
த்துக்கொண் டிருக்கும்போது இவர்கள் வந்தமையைக்கண்டிருந்து
ம் தனதுரூபசவுந்திரிய கர்வத்தினாலும் ஊழ்வினைப்பயனாலும் பார்
த்தும் பாராவதனைப்போ லிருந்தபடியினாலே இவர்களுக்குக் கோப
ம்வந்து அந்த ஊர்வசியைப் பார்த்து நீ சிலகாலம் மனுஷியரூபத்
தையடைந்து மனிதபோகங்களை யடையக்கடவாயென்று சபித்தனர்

கள்உடனே அந்த ஊர்வசியானவள்வியாகூலத்தையடைந்து சிந்தித்துக்கொண்டிருக்கும்போது சர்வலோகத்திற்கும் சர்வபிராணிகளுக்குமுபகாரியான ஸ்ரீநாரதபகவானனவர் இந்தச்சபைக்குவந்து பூலோகத்தில் மகாகுணவந்தராகிய புரூரவச் சக்கிரவர்த்தியினுடைய பலபராக்கிரம தேஜோவைபவாதி சயங்களையும் மகாசுபலட்சணங்க ளோடுங்கூடிய அவருடைய சவுந்தரியாதி விசேஷகம்பீரங்களையுஞ் சொல்லிக்கொண்டு யாவருஞ் சந்தோஷித்துக்கொண்டிருந்தனர்.

பின்பு சபைகலைந்து அர்கள் தங்களிருப்பிடம்போய்ச் சேர்ந்தனர்கள் இந்தஊர்வசியானவள் ஸ்ரீநாரதரால் தேவசபையில் கேட்டுக்கொண்டிருந்த கியாபகத்தை நினைத்துச் சாபகாரணமோட்சத்தையடைந்து உடனேபூவுலகில்வந்து சஞ்சரித்து இந்தபுரூரவச் சக்கிரவர்த்தியினுடைய ஏகாந்த தரிசனத்தைக் கோரிக் காத்திருந்தனள்.

வாராய் பாண்டுகுலாதிபனே! புரூரவசசக்கிரவர்த்தியானவர் ராஜநீதிகளைச் செலுத்திக்கொண்டு வருங்காலத்தி லொருநாள் தனது உத்தியானவனத்திற்குவந்து சுகித்து மனோவல்லாசாயும் ஏகாந்தசீலராயு முலாவிக்கொண்டே புட்பங்களின் விகசிதங்களையும் பார்த்து அதன்பரிமளங்களை யனுபவித்துக்கொண் டிருக்குங்காலையில் ஊர்வசியானவள் நாரதபகவான் வசனப்படிக்கு பிரத்தியட்சத்திலவருடைய ஸ்வரூபலாவண்யாதிசயங்களைக் கண்டு மனமகிழ்ந்து பின்னுமதிக மோகத்தை யடைந்து எதிரில் தோற்றுகின்றவளை அவ்வரசன் கண்டு ஆச்சரியமானவனாய் மனந்திகைத்து இந்த கன்னியானவளாரோ தெரியவில்லையே இவளுடைய சவுந்தரியஸ்வரூபாதிசயங்களை யோசிக்குமளவில் தேவ அரம்பையோ மோகினிதேவதையோ மன்மதனுக்கொரு மங்கலதீபமோ மின்னற்கொடியோ புட்பபஞ்சபாணங்களி னுருவமோவென்று மோகிந்து மனங்கலங்கிச் சிலநேரத்தில் தனதுசித்தத்தை நிலைநிறுத்தி வாராய் திவ்யகன்னியே நீயாரெங்கிருந்துவந்தனை யென்னெதிரில் தோற்றி நிற்கவேண்டிய காரணமென்னவென்று வினவ அந்தஊர்வசியானவள் வாரும்மகாராசனே நான்மற்றொருவளுமல்ல தேவசபாரஞ்சனவதியாகிய ஊர்வசிதான் நான்உமது மகாகுணங்களை நாரதமுனிவரால் கேள்விப்பட்டு மிக ஆவலோடும் வந்தனனென்றனள்.

அப்படியானால் நாமிருவருங்கூடிச் சுகானந்தாநுபவங்களை அடைவதற்குப் பிரமனுடைய சங்கல்பமேயாகுமென்று நினைக்கிறேனென்றனர் அத்தருணத்தில் வாரீர்சக்கரவர்த்தியே எனக்கோர் விரதநியதியுண்டு அதென்னவெனில் எந்தகாலத்தில் நீர்வஸ்திரவினராய் திவாணியாகத்தோன்றுகின் றீரோ அக்காலத்தி லும்மைவிட்டுப் பிரிந்து

காரத்தில் ஸ்தாபித்து இராச்சியசுகபோகங்களை வெகுகாலமனுபவித்துத்திருப்தியடைந்து-உதகலன்-கெவயன்-விமலன்-என்று சொல்லப்படுகின்றமூன்றுநற்குணப் புண்ணியபுத்திரர்களைப்பெற்று அந்தபுத்திரர்கள் விர்த்தியடைந்து சகலவித்யாபாரங்கதர்களாய் சுத்தவீரபலபராக்கிரமசாலிகளாய் விளங்கக்கண்டு இவ்வரசனானவன் அவ்வரசாட்சிக்குஉட்பட்டராச்சியங்களை மூன்றுபாகமாகச்செய்து அவர்களைநியமித்துஇம்மூன்றுபிள்ளைகளுக்குங்கொடுத்துபட்டாபிஷேகஞ்செய்து அவர்களைநியமித்துவிட்டுத் தான் ஆண்டுகொண்டிருந்த பிரதிஷ்டானிபுரத்தை இந்த புரூரவருக்குப் பட்டாபிஷேகஞ்செய்து நிலைநிறுத்திச்சருவகாமியார்த்தங்களில் நின்றும்மனம்வெறுத்து யாவரையுமழைப்பித்துப் புண்ணியநீதிகளையும் இராச்சியதருமங்களையும் பிரஜாபரிபாலனவிதிகளையுஞ்சொல்லி இவர்களிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு தனதுபூர்வகருமவினைகள் நசித்துப் புண்ணியலோகங்களையடைய மனதைத்திடப்படுத்தியடைந்து தவஞ்செய்ய வனத்திற்சென்றனர்.

வாராய் தருமராஜனே! இந்தப் புரூரவன் சவுரியதைரிய புஜபலபராக்கிரமனாகிச் சுத்தவீரதருமகுணங்களாலும் மகாராஜ சுபலட்சணமும் கம்பீரமும் சத்தியமும் தருமமும் ராசநீதியும் மகாகுணங்களினாலும் தான்சக்கிரவர்த்தியாய்ச் சகலவைபவங்களையும் ஒருதவளச்சக்கிரநீழலில்செங்கோல்நடாத்தித்திக்குவிஜயங்கள்செய்து மகாராஜாதிராஜாக்களெல்லாந் தனக்குக்கப்பங்கள் செலுத்தித் தன்னாக்கினையிலிருக்கும்படி யிசைவித்து விஜயசாலியாய் இராச்சியபோகங்களை யநுபவித்துக்கொண்டு மகாகீர்த்தியடைந்து வாழ்கின்றதருணத்தில் இந்திரலோகமாகிய சுவர்க்கமகாசபையிலேதேவேந்திரனானவன் திரிலோகாதிகாரங்களைச் செலுத்தித் தேவமாதர்களாகிய - ரம்மை - ஊர்வசி-திலோத்தமை முதலிய அப்சரஸ்திரீகளினுடைய தெய்வநடனமதுரமான இசைகளைக்கேட்டுநேத்திரோச்சவமாக நடனங்களைப்பார்த்துக்கொண் டிருக்கும்போது சமஸ்தமானதேவதைகளும்வந்து நிறைந்திருக்கின்ற அந்தச்சபைக்கு மித்திராவருணனென்கிற தேவதைகள் வந்தனர்கள் அப்போதுசகலமான கந்தர்வர்களும்ஊர்வசியைத்தவிர மற்ற அரம்பையர்களும் மரியாதைசெய்ய அங்கீகரித்துச் சந்தோஷித்தனர்கள் இந்தஊர்வசியானவள்நடனஞ்செய்து அலுத்து ஆயாசந்தீர்த்துக்கொண் டிருக்கும்போது இவர்கள் வந்தமையைக்கண்டிருந்தும் தனதுரூபசவுந்திரிய கர்வத்தினாலும் ஊழ்வினைப்பயனாலும் பார்த்தும் பாராவதுபோ லிருந்தபடியினாலே இவர்களுக்குக் கோபம்வந்து அந்த ஊர்வசியைப் பார்த்து நீ சிலகாலம் மனுஷியரூபத்தையடைந்து மனிதபோகங்களை யடையக்கடவாயென்று சபித்தனர்

களுடனே அந்த ஊர்வசியானவள்வியாகூலத்தையடைந்து சிந்தித்து க்கொண்டிருக்கும்போது சர்வலோகத்திற்கும் சர்வபிராணிகளுக்கு முபகாரியான ஸ்ரீநாரதபகவானுனவர் இந்தச்சபைக்குவந்து பூலோகத்தில் மகாகுணவந்தராகிய புரூரவச் சக்கிரவர்த்தியினுடைய பலபராக்கிரம தேஜோவைபவாதி சயங்களையும் மகாசுபலட்சணங்களோடுங்கூடிய அவருடைய சவுந்தரியாதி விசேஷகம்பீரங்களையுஞ் சொல்லிக்கொண்டு யாவருஞ் சந்தோஷித்துக்கொண்டிருந்தனர்.

பின்பு சபைகலைந்து அர்கள் தங்களிருப்பிடம்போய்ச் சேர்ந்தனர்கள் இந்தஊர்வசியானவள் ஸ்ரீநாரதரால் தேவசபையில் கேட்டுக்கொண்டிருந்த வியாபகத்தை நினைத்துச் சாபநாரணமோட்சத்தையடைந்து உடனேபூவுலகில்வந்து சஞ்சரித்து இந்தபுரூரவச் சக்கிரவர்த்தியினுடைய ஏகாந்த தரிசனத்தைக் கோரிக் காத்திருந்தனள்.

வாராய் பாண்டுகுலாதிபனே! புரூரவச்சக்கிரவர்த்தியானவர் ராஜநீதிகளைச் செலுத்திக்கொண்டு வருங்காலத்தி லொருநாள் தனது உத்தியானவனத்திற்குவந்து சுகித்து மனைவியில்லாசராயும் ஏகாந்தசிலராயு முலாவிக்கொண்டே புட்பங்களின் விகசிதங்களையும் பார்த்து அதன்பரிமளங்களை யனுபவித்துக்கொண் டிருக்குங்காலையில் ஊர்வசியானவள் நாரதபகவான் வசனப்படிக்கு பிரத்தியட்சத்திலவருடைய ஸ்வரூபலாவண்யாதிசயங்களைக் கண்டு மனமகிழ்ந்து பின்னுமதிக மோகத்தை யடைந்து எதிரில் தோற்றுகின்றவளை அவ்வரசன் கண்டு ஆச்சரியமானவனுய் மனந்திகைத்து இந்த கன்னியானவளாரோ தெரியவில்லையே இவளுடைய சவுந்தரியஸ்வரூபாதிசயங்களை யோசிக்குமளவில் தேவ அரம்பையோ மோகினிதேவதையோ மன்மதனுக்கொரு மங்கலதீபமோ மின்னற்கொடியோ புட்பபஞ்சபாணங்களி னுருவமோவென்று மோகித்து மனங்கலங்கிச் சிலநேரத்தில் தனதுசித்தத்தை நிலைநிறுத்தி வாராய் திவ்யகன்னியே நீயாரெங்கிருந்துவந்தனை யென்னெதிரில் தோற்றி நிற்கவேண்டிய காரணமென்னவென்று வினவ அந்தஊர்வசியானவள் வாரும்மகாராசனே நான்மற்றொருவளுமல்ல தேவசபாரஞ்சனவதியாகிய ஊர்வசிதான் நான்உமது மகாகுணங்களை நாரதமுனிவரால் கேள்விப்பட்டு மிக ஆவலோடும் வந்தனனென்றனள்.

அப்படியானல் நாமிருவருங்கூடிச் சுகானந்தானுபவங்களை அடைவதற்குப் பிரமனுடைய சங்கல்பமேயாகுமென்று நினைக்கிறேனென்றனர் அத்தருணத்தில் வாரீர்சக்கரவர்த்தியே எனக்கோர் விரதநியதியுண்டு அதென்னவெனில் எந்தகாலத்தில் நீர்வஸ்திரவினராய் திகம்பரியாகத்தோன்றுகின்றீரோ அக்காலத்திலும்மைவிட்டுப் பிரிந்து

நீங்கிவிடும்படியா யிருக்கும் அப்போது நீர் மனவருத்தமுறாமல் எனக்
குச் செலவுகொடுக்க வாக்குதத்தஞ் செய்வீரானால் நாமிருவரும்
காந்தருவமாகக் கூடிக்கலந்து சுகபோகங்களை யனுபவிக்கத் தகு
தியா யிருக்குமென்று பிரார்த்திக்க அவ்விதமாகவே சம்மதித்தி
ருவருஞ் சேர்ந்து சுகங்களை யனுபவித்தரசனுடைய அரண்மனை
யில் ப்ரவேசித்து இவளது இராஜதானியாகச்சகலசாம்பிராச்சிய ராச்
சிய வைபவாதிசயங்களை யடைந்து மாடமாளிகையைச் சேர்ந்த
மேற்கட்டு விதானங்களாக உப்பரிகைகளின்மீது சுவர்ணமயமாகிய
புஷ்பசயனங்களோடுங் கூடிய சுவர்ணசப்ரமகோடி மஞ்சங்களிடத்
திலும், புஷ்பவனங்களிலும், புண்ணியநதிதீரங்களிலும், குளிர்ந்
தசோலைகளிலும், அங்கங்கு பொன்னூசல்களிலும், இரத்தினசாலை
களிலும், பர்வதசிகரப்பிரதேசங்களிலும் இதுமுதலிய மனோரம்மிய
மான சுகுமாரஸ்தலங்களில் தங்களிஷ்டப்பிரகாரம மதனசாத்திரத்தில்
சொல்லியவிதி வழுவாமல் விசித்திரமாக தேவ-கந்தருவ-கின்னராதி-
லட்சணயுக்தமாயும், சிம்ம-சரப, சார்த்தூல சகோர-சக்கிரவாகாதி-
பசு-பட்சிகள்போல் லட்சணயுக்தமாயும், இன்னுமனேகவிசித்திரமா
கவுமிரவுபகல்தோற்றாமல் சிலகாலமமதனும்ரதியும்போல் கேளிவிலா
சக் கிரீடைகளாகச் சுகாதிசயங்களை அனுபவித்துக்கொண் டிருந்
தனர்கள்.

வாராய் தருமநந்தனா இவ்விதங்களாக ஏகாந்தங்களை யனுபவித்து
க்கொண்டிருக்கின்றகாலத்து தேவரம்பையான இந்த ஊர்வசியானவ
ள்தனது ஏகாந்தமாகிய மனோவிருத்தியிலிந்தப்பூமியில்வந்து வெகுநாளாச்
சுது அந்தத்தேவதைகளின் சாபமும் நிறைவேறுகின்றது அச்சனே
திருப்தியடையவில்லை இதற்கென்னவுபாயமென்று சிந்தித்து ஒரு கந்
தருவவித்தியாமாயையினால் இரண்டுசுந்தரமாகிய ஆட்டுக்குட்டிகளை
க்கற்பித்து மிகவும் வெகுபோகத்தோடுகாரியார்த்தமாய் வளர்த்துக்
கொண்டிருந்தனள் சுவர்க்கலோகத்தில் தேவேந்திரனுமவன் ஒருநாள்
கொலுவிருக்குஞ்சமையத்தில் ஊர்வசியைக் கண்டு வெகுகாலமாச்சு
தே இன்னமென்னவரவில்லைதேவசபைக்குஞ்சிக்கவில்லையென்று கந்தரு
வனையழைத்தவனெங்கிருந்தாலும்மறுநாள்கொலுவுக்கு அழைத்துக்
கொண்டுவாருங்களென்று ஆக்கியாபித்தனர் அந்தகந்தருவர்கள் ஊர்
வசிக்கு ஏகாந்தமாயறிவித்து ஒருநாளிரவில்வந்து இவள்வளர்த்துக்
கொண்டிருந்த சிறுமிருகங்களை அவிழ்த்துப் பிடித்துக்கொண்டுபோ
க இந்த ஊர்வசியானவள் அந்தச்சக்கிரவர்த்தியினுடைய கையணைக்
குளிருந்தபடி ஆமுறையோமுறையோவென்றரற்றுவாளாய் நாதனே
நான்மிகவும் அன்புடன்வளர்த்துக்கொண்டிருந்த மகாசுந்தரமாகிய சி

றுமிருகக்குட்டிகளை ஆரோ திருடிக்கொண்டு போகின்றார்கள் பாரும் பாருமென்று முறையிட்டுச்சொல்லியு மவ்வரசனானவன இவளுடைய மோகபரவசமான மனோன்மத்தனாயும் இவளுடையபோகங்களில்வெறுப்பில்லாதவனாயும் இதை எவ்வளவும லட்சியஞ்செய்யாமலிருக்கக் கண்டு ஆநாதனே இதென்ன அனியாயம் உமது அரசாட்சி யிதிதப்பிற்றோ உமது இராச்சியங்களில் சோரர்கள் மிகுந்திருக்கக்காரணமென்ன நீதியுள்ளவரசனாகிய நீர் இப்படிக்கொத்த சமான்யகாமியபோகத்தில் சிந்தையைலயிக்கச்செய்துளபரனைதப்பியிருக்கின்றதனாலல்லவா உமதரண்மனையின்மேல் திருடர்கள் பிரவேசித்தார்கள்.

இதனால் உமதாண்மையும ஆக்கினையும பொய்த்ததென்று நினைக்கின்றேனென்று பலவாறுக்ஷந்தித்துக கூக்குரலிட்டமாத்திரத்தில் அந்தச்சக்கிரவாத்தியினுடைய செவிக்கு நாராசமபோலத் தோன்றிட் பக்கத்திலவைத்திருந்த உடைவாளைக் கையிலேந்தி அலங்கோலமாகவோடி அக்காதகர்களைக்கண்டு துரத்திச்சமரிக்கப்போனவிடத்திலவர்களம்மிருகங்களை விட்டுவிட்டு ஓடிப்போய்மறைந்தனர்கள் உடனே அம்மிருகங்களைக் கொண்டுவந்து இடஞ்சேர்த்து வஸ்திரவீனராய் வருமபோது ஊர்வசியானவள்கண்டு கண்களை மூடிக்கொண்டு ஆ ராஜனேயென்று அப்புறம்போய்மறைந்து மாயமாயினள் அந்தச சமயத்தில் இந்தப்புரூரவசக்கிரவாத்தியானவர் தனக்குப் பிராணநாயகியாயிருந்து தன்னைவிட்டுப் பிரிந்தயாத்திரத்தில் அந்த ஊர்வசியைக்காணாமல் பித்துப்பிடித்தவனைப்போல மதிமயங்கிப்பூமியிற் படுத்துப்புரண்டுபுரண்டு தூக்கித்துப்ரூசித்துத்தெளிந்து ஆ-எனைபிரியமுள்ள மோகனாங்கியான பிராணநாயகியே யென்று பித்தமபிடித்தவனைப்போல சுற்றித்திரிந்துகொண்டு எங்குங்காணாமல் ஏங்கிப்பரதவித்துச்சரசுவதிபுண்ணியதீர்த்தத்திற்குவந்துசேர்ந்து அவ்வனமெங்குஞ்சுற்றிக்கொண்டிருந்தான்.

வாராய் தர்மபூபாலனே சரசுவதிநதிதீரத்தில் அந்தத் தேவகன்னிகையான ஊர்வசியானவள் இந்தச சக்கிரவாத்தியினுடைய துக்கத்தை நிவர்த்திசெய்யும்பொருட்டு எதிரில்வந்துதோன்றினன் அப்போது இவ்வரசனானவன் கனவிற்கண்டபொருள் கையிற் கிடைத்தாற்போலச் சந்தோஷித்து மிகவும முகமலர்ச்சியுடன் அந்த ஊர்வசியைப்பார்த்து ஆ பிராணநாயகியே என்னையேன் பிரிந்துவந்துவிட்டனை இது உனக்குத்தருமமா நாமிருந்த அன்னியோன்னியங்களைமறந்துமரியாதையையும் உரிமையான வார்த்தைகளையுங் தவறலாகுமோவென்று பலவாறு அன்பானமொழிகளைக்கூறி வியாகூலப்பட்டு [illegible] மேலாவது கிருபைவைத்து என்னைப்பிரியாமலிருக்கவேண்டு [illegible]

னுபிரார்த்தித்தனன் இத்தேவரம்பையானவள் இவ்வரசனுடையமோகபரவசமாகியமொழிகள்யாவுங்கேட்டு ஒருவார்த்தைசொல்லுகின்றனள். (ஊர்வசியினுடையவாக்கியம்)வாரீர்மண்டலாதிபதியாகிய புரூரவச்சக்கிரவர்த்தியே நீர்சகலதருமநீதிகளும் தெரிந்தவர் இப்போது என்னிடத்தில் வைத்தமோகபரவசத்தினால் சொல்லுகின்றீரல்லது வேறல்ல நான்தேவேந்திரன் ஆதீனமாகியதேவஸ்திரீ உமக்குத்தெரியாதா? காரணவசத்தினால் இப்பூமியிலுமக்கும் எமக்கும் சம்பந்தம் நேரிட்டது என்னைநீர் காந்தருமாக அங்கீகரிக்கும்போதுநானுமக்குச் சொல்லவில்லையா நீர் வஸ்திரசூனராய் எந்தக்காலத்தில்தோற்றுகின்றீரோ அக்காலையிலுமக்கும் எனக்கும்பிரிவுநேரிடுமென்று சொன்னதைமறந்துவிட்டீர் புருஷனாயிருந்து ஒருஸ்திரீயின் பொருட்டு புத்தியீனனாகியமனுஷபசுக்களைப்போல சாமான்யமாகிய போகவிஷயங்களில்அகப்படலாமோ மேலும் வரகாந்தைகளின் குணதருமங்க ளெவ்விதமெனின் ஈரமல்லாத நினைவுகளும் பாலுந்தேனும் கன்னற்கட்டியுங்கலந்தொழுகாநின்றவார்த்தைகளும் தனக்குநேரிட்டநாயகன்மதனைப்போலொத்தவனானபோதிலும் கையிற்றனமற்றால் த்ருணமாகநினைக்கின்றகாலமும் எண்ணமும் சார்வதாபிறர்மேலிச்சையும் விசுவாசஹீனகடினகுணமுடைய அனேகதுரோககுணசாம்பிராச்சியமடைந்திருக்கின்றவர்களுடைய போகசுகத்தைவிரும்பிராச்சியமடைந்திருக்கின்றவர்களுடைய போகசுகத்தைவிரும்பிவிவேகிகள் மனமழியார்களென்பது தமதுசித்தத்தில்நன்றாய்த் தெரிந்திருக்குமல்லவா நானோவென்றால் தேவதாதீனமேயல்லது வேறல்லவே நீரேன் வியாகூலப்படுகின்றீரென்று இத்தேவவாரகாந்தையானவள் பலவாறுதயிரியங்களைச்சொல்லி இன்னமோராண்டுசுகித்திரும் மறுபடிஓரிரவில்நானுமதிடத்திற்கு வந்துநற்குணசாலிகளான இலட்சண புருஷசந்ததிகளைத்தருகிறேன் மனவருத்தப்படாமல் உமதரண்மனையைச் சேருமென்று சொல்லி அரசனிடத்தில் விடைபெற்று சுவர்க்கத்திற்குப்போயினள்.

இந்தச்சக்கிரவர்த்தியானவன் மிகவுஞ்சவுந்தரவதியானஊர்வசியையனுப்பிவிட்டு இவளுடைய முகக்குறியினால் கொப்பணியாகநினைத்துக்கொண்டு தனதரண்மனையில் வந்துசேர்ந்து ஒருவருடத்தையும் ஒருமகாயுகமாகக்கழித்து அவள்சொல்லிப்போயின கெடுப்பிரகாரத்திற்குஅந்தசரசுவதிநதிதீரத்தில்வந்து காத்திருந்தனன் அப்போது அந்த ஊர்வசியானவள் அவ்விடத்திற்குவந்து இந்தச்சக்கிரவர்த்தியுடனுமாகச்சந்தோஷித்துச்சிலநாள் அன்னியோன்யசுகானந்தம் அனுபவித்துக்கொண்டிருந்து கிரமமாய் அந்தஊர்வசியினுடைய கெர்ப்பத்தினின்றும் ஆயுவு, சுருதாயுவு, அத்திபாயு, விரயன், ஜெய

ன், விஜயன் என்கிற மகாபலபராக்கிரமசாலிகளாயும், நீதிகோவிதர்களாயும், சத்தியதருமசீலர்களாகியும், மகாதீர சுந்தரபுருஷர்களாகியும் பிறந்தனர்கள்.

இப்படிக்கொத்த சுகுணதீரப்புத்திரர்களைப் பெற்றளித்துஇந்தப்புரூரவச் சக்கிரவர்த்திக்குமனத்திருப்தியாகும்படிசெய்துஇனியாவதுநான்சுவர்க்கலோகம் போய்ச்சேரும்படி செல்வுகொடுமென்று கேட்க அதற்கிவ்வரசனவர் மனதுசம்மதியாம லிருக்கக்கண்டு ஒருவார்த்தைசொல்லினள் வாராய்மண்டலாதிபதியே நீர் சர்வதா வென்னையே அடையவேண்டுமென்று இச்சிக்கிறபடியினால் நான்சொல்லும்படியானகாந்தருவரூபவதிகளை மனதில்தியானித்து தியானஞ்செய்வீரானல்என்னையடையத்தகுந்த வுபாயத்தையுமக்குத்தந்துகிருபைசெய்வார்களென்றுசமாதானஞ் சொல்லிச்செலவுபெற்றுக்கொண்டு அந்தரத்தானமாய்ச் சென்றாள்.

வாரீர்கௌவரதேயரே சிறிதுகாலஞ்சுகுணசாலிகளானபுத்திரர்களைநாளுக்குநாள் விர்த்தியடையச்செய்தும் சகலவித்யாபாரங்கதர்களாகச்செய்தும் பூமண்டலாதிகாரங்களைச் செலுத்திக்கொண்டிருந்து ஒருநாள் ஊர்வசியைநினைத்துக்கொண்டு சரஸ்வதிநதிதீரத்துக்கு வந்து ஒருநல்ல மங்கலகரமாகிய ஈகிர்தப்ர தேசத்தில் யோகாசனராயிருந்து கந்தருவபதிகளைக்குறித்து தியானித்துச்செபித்து சத்தேகத்தியான நிஷ்டரா யிருக்குஞ் சமயத்தில் அந்தக் கந்தருவபதிகள் பிரசன்னர்களாய் இவ்வரசன்முன் தோன்றி நின்றனர்கள். அப்போது இவ்வரசன் கண்டானந்தித்து நானவிதங்களாத் துதித்தமாத்திரத்தில் அக்கந்தருவபதிகள் சந்தோஷித்தொரு அக்கினிஸ்தாலியைக் கற்பித்துக்கொடுத்து இதனால் அத்தேவஸ்திரீயான ஊர்வசியை யடையக்கடவீரென்று அந்தரத்தானமாயினர்.

வாராய்பரமகுலோத்தமனே இந்தப்புரூரவச் சக்கிரவர்த்தியானவர் அந்த அக்கினிஸ்தாலியைப் பெற்றுக்கொண்டு இதனலூர்வசிலபிப்பாள் என்று நினைத்துச் சிலகாலம் அவ்வனத்தில் சஞ்சரிக்கவூர்வசிப்பிரசன்ன மில்லாததினல் மனஞ்சலித்து அந்த அக்கினிஸ்தாலியை ஒருபவித்திரமான சுசிப்பிரதேசத்தில் வைத்துவிட்டுத்தமது நகரத்துக்குவந்து சேர்ந்து உத்தமபுத்திரர்களாகிய சிறுவர்களுடன் கூடிவாழ்ந்துசுகித்திருக்குந் தருணத்தில் அந்நகரம்கிரகஸ்த தருமத்துக்குரிய விவாக அபேட்சைமனதில் செனித்து யோசித்துக்கொண்டிருந்தனர். கேளும் தருமநந்தன விசாலநகர மென்றொருநகரமுண்டு அந்தகரத்துக்கு சோமதத்தனென்றொரு அரசனுண்டு அவ்வரசனவன் ஆறுசாஸ்திரம் நாலுவேதம் அறுபத்துநாலு க[illegible]

யான மனுவிக்கியான முதலியவற்றை யதாந்திரிபற வுணர்ந்து சுந்தரத்தில் சூரியன் சந்திரன் அக்கினி இவர்களுக்கு சமமானகாந்தியும் பிரதாபமும் சௌரியமும் உடைத்தாகிச் செங்கோல் நடாத்திவருங்காலத்தில் பாக்கிய மெல்லாவற்றையும் பெற்று புத்திர பாக்கியமொன்றில்லாத படியினாலே கொலுமுகத்திலிருந்து கொண்டு மந்திரிகள்பிரதானிகள்-புரோகிதர்-மற்று முண்டான பெரியோர்களை யெல்லாமழைப்பித்து அவர்களைப்பார்த்து அரசன்சொல்லுகிறான்.

கேளுங்கள் மந்திரியார்களே மற்றுமுண்டான சபையோர்களே பூலோகத்திலே மனுஷர்களுக்குப் புத்திர னுண்டானால் புண்ணியலோகமுண்டென்றும் புத்திரனில்லாதவர்களுக்குப்புண்ணியலோக மில்லையென்றும் வேதாகமங்களிலே முறையிடுகின்றதாய்ப் பெரியோர்கள்சொல்லக் கேள்விப்பட்டோம் அதையினாலே புத்திரபாக்கியம் வேணுமென்கிற அபேட்சை யுண்டாயிருப்பதால் புத்திரசோபமெத்த பெரிதானபடியினாலே உலகத்திலே ஒருத்தனை யோகக்ஷேமம் விசாரிக்கும்போது தனதான்னியசம்பத்துக்களைவிசாரியார்பிள்ளைபெந்தளை பெண்களெத்தனை யென்றுகேட்பார் அதுவுமல்லாமல் குழந்தைகளினுடைய வார்த்தையைக்கேட்டால் என்காதுகளுக்கு வீணாதம்வேணுகாதம்போ லின்பமாயிருக்கிறது பிள்ளைகளைப் பெற்றவர்கள் சனவான்களானபடியினாலே நாங்கள் ஸ்திரீபுருஷர்கள் இருவருந்தவஞ்செய்யும்பொருட்டு இராச்சியத்தை மந்திரிகள் வசமாயொப்பித் தோட்டுக்குப்போகிறோம் அவர்கள் அக்கினையைக் கடவாமல் நீங்கள்நடந்துகொள்ளுங்களென்று நல்லோசனை தந்தினாலே உபகாரமாகச்சொல்லி அவரிடம் செலவு பெற்றுக்கொண்டு அரசனும் தன்னுடைய பெண்சாதியும் தானுமாகச் சடைமுடியும் மரவுரியுந்தரித்துக் கொண்டு நகரத்தைவிட்டு வனத்திற்சென்று மகாரிஷிகளுடைய ஆசிரமங்களை யாசிரித்து அவர்களுக்குப் பக்தியுடன் பணிவிடைகளைச் செய்துகொண்டிருக்கிற காலத்தில் அவ்வனத்திலுள்ள மகாரிஷிகள் யாவரும் ஒருகால்விசேஷத்தில் ஒன்றுப்சேர்ந்து சந்தோஷமாக லோகோபகாரார்த்தமான சிலஉத்தமகருங்களைப் பேசிக்கொண் டிருந்ததருணத்தில்வரசனும் அவர்பெண்சாதியும் வெகுகாலமாக இவ்வனத்தில் வாசஞ்செய்துகொண்டு நமக்குப் பணிவிடை செய்துவருகிறார்கள்.

இவர்கள் மனதிலென்ன குறையோவென்று தங்களுக்குள் யோசித்துக்கொண்டு இவ்வரசனை யழைப்பித்து வாராய் விசாலபூபதியே நீங்களிருவரும் நெடுநாளாக இங்குவந்து இருக்கின்றகாரணமென்னவென்று மிகவுமாதரவுடனே கேட்க இவர்களிருவரும் சாஷ்டாங்கமாய்த்தெண்டனிட்டுக் கைகூப்பிக்கொண்டு சொல்லுகிறார்கள். சுவாமிக

ளே இதுபரியந்தம் சந்ததியில்லாதவனு யிருக்கிறபடியினுலே இராச்சியசுகபோகங்களை வெறுத்து உங்களனுக்கிரகம்பெறுவதற்குவந்து காத்திருக்கிறேனென்றனர்க ளப்போதவர்கள் மிகவும்பரமதயானிதிகளாய் யாவருங்கூடி ஓர்யாகத்தைசசெய்ய அந்தயாகத்தினின்றும் பிரசன்னமாய்த்தோன்றின அக்கினிபகவானிட கரத்திலிருக்கின்ற பாயசான்னத்தைத் தாங்கள்பெற்றுக்கொண்டு அவனைப்பூசித்து அனுப்பிவிட்டு இந்தபாயசான்னத்தை இராசனுக்குக்கொடுத்து வாராய் அரசோத்தமனே இப்பிரசாதத்தை உமதுபத்தினிக்குக் கொடுப்பீராஞல் ஒருமகாசுகுணமுள்ள சுத்தவீர பிரதாபசாலியான ஆண்குழந்தையும் ஒருதிவ்ய சுந்தரவதியுமாகிய பெண்குழந்தையுமுண்டாகுமென்று ஆசீர்வதித்தனர்க ளவ்வரசனப்படியே மகாரிஷிகளுடைய அனுக்கிரகங்களைப் பெற்றுக்கொண்டு அந்த பாயசான்னத்தைத் தமதுபத்தினிக்குக்கொடுக்க அம்மகாபதிவிரதை மிகவும் பக்தியுடனே வாங்கியுண்டனள்.

பின்பு அம்மகாரிஷிகளினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன்நகரத்தைசசேர்ந்து அரசுசெலுததிகொண் டிருக்குங்காலத்தில த்தினம் மகாபதிவிரதையுமஙுவே கொபமாகவிருநது அப்புண்ணிய கெர்பமானது நாளுக்குநாள் விருததியடைநது பத்துமாதமுஞசென்றுநல்ல சுபமுகூர்த்தகாலத்திற் சுபபிரசவமாக ஆண்பெண் இரண்டு சுந்தரமான குழநதைகளைப் பெற்றனளப்போது சோமதத்தமகாராஜனவா சீக்கிரமாக விதிப்பிரகாரம ஸ்நானஞ செய்து திவ்யவஸ்திரங்களை யுடுத்திக்கொண்டு உத்தமவேதியர்களை யழைப்பித்து விதைபொன்முதலிய அனந்தவிதமாகத் தானங்கள்செய்து சத்தகருமங்களைச் செய்யச்சொல்லி நியமிக்குஞ்சமயத்தி லந்தவனத்திலுள்ள அமமகாரிஷிகள்யாவரும் விசாலபூபதியின் சபையில் வந்து நிறைந்தனர் களப்போதவ் வரசனனவா அம்மகாரிஷிகளியாவருக்கு முசிததாஸனங்களைக்கொடுத்து அர்க்கபாத்தியாதி மங்கலதிரவியங்களினுற் பூசித்துபசரித்துச் சாஷ்டாங்கமாகத் தெண்டன்சமர்ப்பித்து நிற்கின்ற இவ்வரசனைப்பார்த்து அந்தரிஷிகள்யாவரும் மிகவும் சந்தோஷத்தையடைந்து பொற்றும்பாளத்தில் குழந்தைகளை யெடுத்துவரச்சொல்லி அக்குழந்தைகளைக் கொண்டுவந்தமாத்திரத்தில் யாவருங்கண்டு கண்களித்துச் சுபாசூதைகளா லிறைத்து ஆசீர்வதித்து ஓமங்களா லக்கினிபகவானுக்குத்திருப்திசெய்துசாதகருமங்களைஏற்படுத்தி அத்திவ்யகுழந்தைகளுக்கு சுபதீஞ்சனென்றும் ஜெயப்பிரதையென்றும நாமகரணஞ் செய்தபின்பு வாராய்ராஜனே உமதுதவப்புத்திரனுகிய இந்த சுபதீஞ்சனனவன் ஒருமண்டலாதிபதி சகாயத்தை யுடையவனுதல்

த்துருக்களாகிய ராஜாக்களுக்குப் பராக்கிரமமுள்ள விருஷசிம்மனைய்
ச் சத்தியதருமாதி சகலசாஸ்திர நற்குணவிவேக தயாபுருஷனைய் மூ
ன்றுலகமும் போற்றும்படியான கீர்த்திவந்தனைய் இராஜ அரசோத்த
மனைப் பூரண ஆயுளடைந்து அந்தராச்சியாதி காரங்களைச்செலுத்தி ஒ
ற்றைகுடை நிழலின்கண் அரசுசெய்வானென்று சொன்னார்கள்.

இந்த மகா புண்ணியவதியான ஜெயப்பிரதையென்னும் பெண்
குழந்தையானவள் உபயகுலபரிசுத்தனை மகாமண்டலாதிபதியை
மணம்புரிந்த மகாபதிவிரதையாய் தீர்க்கசுபமங்கிலியாய் மகத்தா
னகீர்த்தியுடைய சுத்தவீரர்களைப் பெற்றுத் தீர்க்காயுளுடன் வாழ்ந்
திருப்பாளென்று அசீர்வதித்து அரசனிடத்தில் விடைபெற்றுக்கொ
ண்டு மகாரிஷிகளியாவருந் தபோவனத்திற்குச் சென்றனர்கள்.

சோமதத்த மகாராசனைவர் இக்குழந்தைகளை நாளுக்குநாள்
சுக்கிலபட்ச சந்திரனைப்போல விருத்தியடையச்செய்து வித்
தியாபுத்தி சகலசாஸ்திர சம்பன்னர்களாகச்செய்தும், தனுர்வேதா
திவித்தியாப்பியாசங்களையும் ராஜநீதிகளையுங்கற்பித்துத் தினேதினே
மகிழ்ந்துகொண்டிருந்த காலத்தில் மகாசுகுமாரங்கியான தனது
அருமந்த பெண்ணாகிய செயப்பிரதை பேதுமைப்பருவம்நீங்கி ம
ங்கைப்பருவம்வந்துவிட்டதென்று கருதி அப்பெண்ணுக்கு நவரத்தி
னகசிதமயமான ஒருகன்னியா மாடமுங் கட்டிவைத்து அநேகசெவி
லித்தாய்மார்களும் அநேகதாதியர்களுட செயப்பிரதையை அக்
கன்னியாமாடத்தில் வைத்தனர் சிலநாள் சென்றபின்பு ஒருநாள் வ
சந்தகாலத்தில் பூரண சந்திரோதயமானவேளையில் சிலதாதியர்களு
டனே சிங்காரவனத்திற்சென்று சிலவினோதங்களைப் பேசிவிளையாடி
க்கொண்டிருக்கும்போது அதில் ஒருதாதியானவள் சிலதேசத்து அ
ரசருடைய பெருமைகளையுஞ் சொல்லிப்பின்பு பிரதிஷ்டானபுரத்தை
யாளுகின்ற சக்கிரவர்த்தியாகிய புரூரவச்சக்கிரவர்த்தியின் ரூபசவுந்த
ரியத்தையும் புஜபல பராக்கிரமமும் கெம்பீரமும் தருமகுணமு
ம்சீலமும் உடையவனாகவும் அரசர்களிலிவ்விதமான புருஷர்களில்
லையென்று பலவாறாகப் புகழ்ந்துசொல்லி விளையாடிக்கொண்டிருக்
கிறகாலத்தில் தாதியர்கள் சொன்னவார்த்தைகளை இன்பமாகக் கே
ட்டிருந்த செயப்பிரதையானவள் அதிகமோகாந்தகாரத்தினால் மன
ம்பூரித்து அந்தப்புரூரவச் சக்கிரவர்த்தியை நான்மணம்புரிந்து இஷ்
டகாமியபோக போகங்களையடைந்து சுகித்திருக்க வேணுமென்று
நினைத்து கடவுளைக்குறித்துத் தான்கொண்ட கருத்தின்படி நிறைவே
ற்றவேணுமென்று தியானித்துக்கொண்டு கன்னியாமாடத்தையடை

ந்து நாளுக்குநாள் செயப்பிரதையானவள் காமவிகாரத்தினால் தேக மெலிவுற்று வெறுப்புடன் மவுனமுற்றிருந்தனள்.

அவ்விடத்தி லிருக்கின்ற செவிலித்தாய்மார்களு மந்தப்பெண்ணுக்கிருக்கிற மனோபீஷ்டத்தை யறியவேணுமென்று செயப்பிரதையைப்பார்த்து வாராய்சுகுண ரத்தினமே எங்களுடன்கூடி விளையாடியிருந்த நீ நாளுக்குநாள் மனவெறுப்புடனிருக்க வேண்டியதென்னவென்றுகேட்க அவர்களுக்கு ஒருஉத்தரமுஞ்சொல்லாமல் மவுனமுற்றிருந்ததையுணர்ந்து செவிலித்தாய்மார்கள் முதலியயாவருமே கோபித்துயோசிக்குமளவில் தோழிகளிலொருத்தி சிங்காரவனத்தில்சில அரசர்களுடைய குணாதிசயங்களை பேசினநாள்முதல் இவ்விதமான குணங்கள் அபிவிர்த்தியாகிறதென்று சொல்லவே அதையங்கீகாரங்கொண்டு அநேகசயித்திய உபசாரங்கள்செய்தும் காமவிகாரபடங்காமலதிகப்பட்டு உண்ணாள் - உடுக்காள்-குளியாள்-உறங்காள்-பேசாள்-தாதியர்களுடன் விளையாடாள் நகைசெய்யாள்-ஆபரண முதலியனபூணாள் புரூரவசக்கிரவர்த்தி பெயரைமறவாளாயிடிபாக நாளுக்குநாள்தேககாந்தி குறைவுபடுவதுமன்றி செய்கைகள்மாறுபாடாக விருக்கிறதைப்பார்த்து யாவருங்கூடி எப்படியிருக்குமோவென்று பலவாறுகயோசித்து ஒன்றுந் தோன்றாமையால் இனிநாம சும்மாவிருந்துவிட்டாலரசனது ஆக்கினைகிடைக்குமென்று கருதி செவிலித்தாய்மார்களரசனிடத்திலு மரசன் மனைவியிடத்திலும் சொல்லவேண்டியதென்றுநினைத்து உடனேபோ யரசனிடத்திலு மரசியினிடத்திலும் வந்தனைவழிபாடுடன் வணங்கிச் சொல்லுகிறார்கள்.

கேளும மகாராசசேகர தேவரீருடைய குமாரத்தியை கன்னியாமாடத்திலிருக்க எங்களிடத்தில் ஒப்புவித்தீர்கள் நாங்களு மிதுவரைக்கும பாதுகாத்துக்கொண்டிருந்தோம. இப்போது காமவிகாரத்தால் சரீரமிளைத்துச் சந்தனசீதளமும பன்னீருமபொறுக்க வில்லையென்றும சும்மாவைத்திருக்க லாகாதென்றும் சொல்லக்கேட்டு அரசனும தன்பத்தினியுமாக இருவருங் கன்னியாமாடத்திற்சென்று தன் தவப்பெண்ணாகிய செயப்பிரதையின் தாயானவள் வாராய்சுபத்திரிகாரத்தினமே நீயேன்வியாகூலத்துடன் ஒருவிதமா யிருக்கவேண்டியதெனனவென்று பலவாறுகக்கேட்கத் தன்தாயினிடத்தில் தனக்கு விவாகம் வேண்டியதென்று குறிப்பாகக்காட்ட அரசனும் அரசியும் இரண்டுபேருமாகப் பெண்ணுக்குத் தக்கவுபசரணை செய்துவிட்டுப் பின்புஅரசன்தனது கொலு மண்டபத்திற்குச்சென்று மந்திரியைப் பார்த்து தன்குமாரத்திக்கு மணஞ்செய்ய வேண்டுமாகையினால் ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கு மணவோலை யெழுதும்படிகட்[illegible]

யிட மந்திரிசம்பிரதியை அழைப்பித்து விசாலநகரத்துச் சோமதத்த மகாராசாவின்குமாரத்தியாகியசெயப்பிரதையானவள் ஒருசங்கேதத்துக்கு விடைகொடுத்தாலந்த அரசனை மணம்புரிவாளென்று ஐம்பத்தாறுதேசத் தரசர்களுக்கும் மணவோலையெழுதி யனுப்பிவிட்டு செயப்பிரதைக்குச் சுயம்வரமென்று பேரிகையறைவித்தான்.

அதுகேட்டு-அங்கம்-அருணம்-அவந்தி-ஆந்திரம்-இலாடம்-யவனம்-ஒட்டியம்-கஞ்சம்-கலிங்கம்-கன்னடம்-கர்ன்னடம்-காசம்-காஸ்மீரம்- காம்போஜம்-குருகு-குடகம்-காசம்-குந்தளம்-குரு-புலிந்தம்-கூர்ச்சரம்-கேகயம் - கேரளம்-கொளம்-கொல்லம் - கோசலம்-சவ்விரம்-சாலவம்-சிங்களம்-சிந்துசீனம்-சூரசேனம்-சோழம் - சோனகம்-திராவிடம்-துளுவம்-தெங்கணம்-நிடகம்- நேபாளம்-பாஞ்சாலம்-பப்பரம்-பாண்டியம்-புலிந்தம்-போடம்-மகதம்-மச்சம்-மராடம் - மலையாளம்-மாளவம்-யுகந்தரம்-வங்கம்-வங்காளம்-விதற்பமுதலான ஐம்பத்தாறு-தேசாதிபதிகளாகிய அரசர்களும் தங்கள் தங்கள் ரதகஜதுரக பதாதிகளுடனே வஸ்திராபரண அலங்கிருதராய் குடைகொடிச்சிலை ஆலவட்டங்கள் வெண்சாமரைகளுடனேயும் நாகசுரமேளங்கள் முதலான பதினெட்டுவாத்தியங்களுடனேயும் ஜெயத்தொனிகளுடனே வெவ்வேறே தண்டுவிட் டிறங்கினார்கள்.

அப்போது புரூரவச்சக்கிரவர்த்தியானவர் மணவோலையைக்கண்டதிசயித்து நானே அக்கன்னியை மணம் புரிவேனேயல்லது வேறேயொருவரும் மணம்புரியார்களென்று நினைத்துக்கொண்டு தனது ரதகஜதுரகபதாதிகளோடு கூடி சேனா சமுகத்துடன் பிரயாணமாய் வருகின்றதைக் கேள்வியுற்று இந்தசோமதத்த மகாராசனும் தனது ரதகஜதுரகபதாதிகளோடு எதிர்சென்று உபசரித்து அழைத்துக்கொண்டுவரும்போது அந்நகரத்திலுள்ளவர்களும் இந்தரூப சவுந்தரியமான அரசனை நமது அரசன்குமாரத்தியைமணம்புரியவேண்டுமென்று பலவாறுகஈஸ்வரனைத் துதித்தனர்கள் மிகவும்பிரதாபசாலியான புரூரவச்சக்கிரவர்த்தியும்மற்ற அரசர்களுடன் நகரத்தையடைந்தவுடன் திவ்விய அலங்கிருதமாகிய விடுதிகளேற்படுத்தி அவரவருக்கு அவருடைய சைனியங்களுக்கும் யாதொரு குறைவுமின்றிச் சந்தோஷிக்கும்படி ஆதரித்தும் பூசித்தனர் இவ்விதங்களாகச் சகலமண்டலாதிபதிகள் யாவரும்வந்து சேர்ந்தார்கள்.

மறுநாள்சூரியஉதயத்தில் அனேகரத்தின சிம்மாசனங்களும் உசிதாசனங்களும் அமைத்து அலங்காரங்கள் செய்திருக்கின்ற சுயம்வரமண்டபத்தில் தனதுஅருந்தவப் புத்திரியான செயப்பிரதையையும் செவிலித்தாயார்களையும், தோழிமார்களையும்அழைத்து வரும்ப

டியாக ஆக்யாபிக்க அவர்கள் அந்தப்பெண்ணை மஞ்சனச்சாலையில் அ
ழைத்துப்போய் மங்களஸ்நானஞ் செய்வித்து திவ்வியவஸ்திரங்களை யு
டுத்தி அளவில்லாத திவ்வியாபரணங்களை யணிவித்துக் களபகஸ்தூரி
சந்தனாதி பரிமளதிரவியங்களைத் திருமேனியெங்கும் பூசிக்கரத்தில்
திவ்வியபுஷ்பமாலையைக் கொடுத்துநானாவித திவ்வியமங்களவாத்திய
ங்கள்சப்திக்க வேதவேதியர்கள் பூரணக்கலசமெடுத்துச்செல்ல மங்க
ளஸ்திரீகள் மங்களம்பாட அனேகம்தாதியர்கள் புடைசூழ அன்னத்
தைப்போல நடைநடந்து சகலதேசாதிபதிகளும் அம்மகாமண்டபத்
தில் வந்துசேர்ந்து சுகாதினராய்ச் சிம்மாசனத்தில் வீற்றிருக்குந் த
ருணத்தில்ஜெகன் மோகனமோகினி தெய்வப்பெண்ணுருவம்போன்
ற இந்தசசுந்தரவதியானசெயப்பிரதையென்கிற கன்னிகை அந்தசுய
ம்வரமண்டபத்தைச் சேர்ந்தனள் அந்தருணத்தில் சகலமான ராசா
திராசர்களும் ரத்தினங்களிழைந்த சொர்ணமயமாகிய சிம்மாதனத்தி
ராநின்ற ஒருநன்மலரின்மீது இனமினமாய்க் கூடிமொய்த்துக்கொள்
ளும்வண்டினங்களைப்போல இவ்வரசர்களுடைய கண்விழிகளான
து அந்தப் பெண்மலரின்மீதுபாய்ந்து சித்திரப் பாவைகளைப்போல
யாவரும் பிரமித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறபோது செவிலித்தா
ய்களும் மகாஎச்சரிக்கையுடன் அந்தந்த அரசர்களுடைய வம்சபூர்
வோத்தரங்களையும் விரப்பிரதாபசவுந்தரியத்தையும் விவேகாதி குண
ங்களையுங் குறித்து யாவரையுந் தெரிவித்தனர்கள்.

அப்படியிருக்க சுமதீஞ்சராசன் தன்சகோதரியாகிய செயப்பிர
தைசொன்ன சங்கேதத்தை ஐம்பத்தாறு தேசத்து அரசர்களைப் பா
ர்த்து யானொருசங்கேதம் கேட்கிறேன் அந்தச் சங்கேதத்துக்
கு விடைகொடுப்பவர்களுக்கு என்சகோதரி ஜயப்பிரதை மாலையிடு
வாளென்றுகூற அரசர்கள்யாவரும் அந்தச் சங்கேதத்தை வெளியிடு
மென்றுகேட்க அப்போ சுமதீஞ்சராசனானவன் அரசர்களைப்பார்த்து
ஓஅரசர்களே இவ்வுலகத்தில் மகானுபாவாளாகிய தாய்தந்தைகளின்
மனோபீஷ்ட மந்திரபேதங்களினால் ஆண்பெண்ணுருவமாகச் செனி
த்து பெண்மேனை ஆணாகிப் பெண்ணாகி ஆணும்பெண்ணுமாய்விளங்கிய
வம்சவிர்த்திகளைச்செய்துமகத்தானகீர்த்தியடைந்த அவ்வாணேபெ
ண்ணாகிய கருப்பத்திற்பிறந்து விருத்தியடைந்து சத்தியதருமாதிசக
லசாஸ்திரவிருத்தியடைந்து சத்தியகருமாதி சகலசாஸ்திரவிதிப்படி
நடந்து மகாசுத்தவீரப் பிரதாபசாலிகளாகச் சகல திக்குவிஜயங்க
ளையும்செய்து மண்டலாதிபதியாய் பெண்ணையேவேண்டித்தவங்கள்
செய்தும் இராச்சியாதிகாரங்களைச்செய்து சகலராச்சியாதிபதிகளுக்
கு இருதய பேதியானசுத்தவீரனாகிய மகாசூரனெவனோ அப்படி

கொத்த வீரத்தையுடைய அரசனை என்சகோதரி மாலையிடுவாளென்றுகூற அவர்கள்யாவருங்கேட்டு மவுனமுற்றிருந்தனர்கள்.

அந்தச்சமையத்தில் புரூரவச்சக்கிரவர்த்தியானவர் முற்றுங்கேட்டுசகலராசாக்களையும்பார்த்துக்கெம்பீரத்துடன் தன்வம்ச பூர்வோத்திரங்களை நினைத்துயாவருக்குந் தெரியும்படி மனுசரித்திரத்தையும் மனுவின்யாகப்பெருமையினையும் வசிட்டகுருசெனங்களி னனுக்கிரகத்தையும் அரியராதி கடவுளினுடையகிருபையின் அதிசயத்தையும் சூரியசந்திரவம்சத்தின் விளக்கத்தையும்தனதுதந்தைகளின் வரலாற்றையும் தனதெண்ணங்களின் கருத்தையுஞ்சொல்லி இதுகளையெல்லாங்கேட்டிருந்த அரசர்கள் யாவரும் மகா ஆச்சரியமடைந்திருக்கிறக்ஷணத்தில் இந்தமகாசுந்தரியான ஜெயப் பிரதையென்கிற கன்னியாரத்தினமானவள் எல்லாரும்பார்த்து அதிசயிக்கும் சுந்தர நடைநடந்து வந்து இந்த மண்டலாதிபதியாகிய புரூரவச்சக்கிரவர்த்தியின் அருகாமையிற் சென்று தன்கையிலிருந்த புஷ்பமாலையைச் சூட்டினுள் அப்போது ஆகாயத்தில்தேவதுந்துபிகள் திமிதிமென்றுமுழங்கினதுகள் தேவர்கள்பாரிசாத புஷ்பம்வருஷித்தார்கள் வீணைமீட்டி நாரதர்பாடினுர் கந்தருவர்கள் கொண்டாடினுர்தேவஸ்திரீகள் நாட்டியம்பண்ணினுர்கள் சகலதேவர்களும் அந்தப் பெண்ணுக்குத் தகுமானநாயகன் இந்தச்சக்கிரவர்த்தியே யல்லாமல் மற்றொரு அரசர்களுந் தகாதென்றுசொல்லிச் சந்தோஷப்பட்டுக்கொண்டு அவரவாகள் நகரத்துக்குச்சென்றனர்கள்.

கேளுந்தருமநந்தன சோமதத்தமகாராசா மிகவும்சந்தோஷப்பட்டு புரூரவச்சக்கிரவர்த்தியைச் சலகசப்பிரமத்துடனேயும் பதினெட்டு வகைமேளவாத்தியங்களுடனேயும் அழைத்துக்கொண்டு தன்னுடைய அரண்மனைக்குப்போய்த் தனதரண்மனைகளெல்லாம்வேடிக்கையாகவும் வெகுவிநோதங்களாகவும்நவரத்தின மயமாகவலங்கரித்துப்பார்க்கப்பதினுயிரங்கண்கள்வேணுமென்று சகலருஞ்சொல்லிக்கொள்ளத்தக்கதாகக் கலியாணப்பந்தலிலே நவரத்தினபீடமொன்று நியமித்து அதில்புரூரவச்சக்கிரவர்த்தியும் தன்குமாரத்தியாகிய செயப்பிரதையையும் நல்லசுபமுகூர்த்தத்தில் மணவறையில் உட்காரவைத்து மங்கலஸ்திரீகளால் நலங்குமுதலிய சடங்குகளை நிறைவேற்றி வேதவேதியர்களைக்கொண்டுசடங்குகள் செய்துமந்திரங்கள்கூறி காளம் எக்காளம்-துத்தாரி-சின்னம்-முரசு முதலிய வாத்தியங்கள்ஒலிக்க ஜெயப்பிரதையின் கழுகைநிகர்த்த கழுத்தில் புரூரவச்சக்கிரவர்த்தியின் மங்கிலியத்தைத் தரித்து மங்களஸ்திரீகளால் நவரத்தினசேஷையிட சாம்பமூர்த்தியும் பார்வதா தேவியும் ஸ்ரீமகாவிஷ்ணுவும் ஆதிலட்சு

யியும் பிரமதேவரும் சரஸ்வதியும் தேவேந்திரனும் இந்திராணியும் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிக ளும் சத்தரிஷிகளும் திக்குப்பாலகர்களும் அவரவர்கள் தங்கள் தேவிமார்களுடனே வந்து சேவைசெய்து அகண்ட ஐஸ்வரிய போக பாக்கியத்தையனுபவிக்கும்படி ஆசீர்வாதம் பண்ணிப்போயி னர்கள் பின்பு சகலமான பிராமணர்களுக்கும் தட்சணைதாம்பூலங்கள் கொடுத் தனுப்பிவிட்டு மற்றவர்களுக்கெல்லாம் அறுசுவைபதார்த் தங்களுடனே அன்னம்பகிர்ந்து சந்தனபுஷ்ப தாம்பூலங்களுங் கொடு த்து வாமிசர்கள் பாடகர்கள் புகழ தேவதாசிகள் நாட்டியம் பண் ணச் சகலசம்பிரமத்துடனே இருவரும்சந்தோஷத்தை யடைந்து பின்பு அந்தப்புரத்திற்குச்சென்று மதனசாத்திர விதிப்படி காமல் கூடி இன்பத்தை யனுபவித்துச் சுகித்திருக்குங்காலத்தில் ஒருநாள் புரூர வச்சக்கிரவர்த்தி தன்மனையாளாகிய ஜெயப்பிரதையைப்பார்த்து ஒ ருவார்த்தை சொல்லுகிறான்.

கேளும் பெண்ணே நாமிவ்விடத்திற்குவந்துநெடுநாளாச்சுதுநம் முடைய இராச்சிய மெவ்விதமாக இருக்கின்றதோ தெரியவராது நகரத்திற்குச் செல்லவேணுமென்கிற கியாபகம் உனக்குச்சற்றாகிலு ம்நினைவுபிறக்கவில்லையே நம்முடையதேசம் என்னபாடுபடுகின்ற தோ பிரஜைகள் என்னவிசாரப் படுகிறார்களோ தெரியாது எத்த னைகாலமானாலும் நம்முடைய பட்டணத்தைவிட்டு இவ்விடத்திலே யிருக்கலாமா ஆகையால் நாம் இனி இங்கே யிருக்கக் கூடாது நீபோய் உன் தாய் தந்தையர்க்கு இக்காரியங்களைத் தெரிவித் து அவரிடம் சந்தோஷமாகச் செலவுபெற்றுக்கொண்டு வந்தா ல் பட்டணத்துக்குப் போவோமென்று சொன்னவுடனே ஜெய ப்பிரதை கேட்டு எழுந்திருந்து தெண்டனிட்டு தேவரீர்கட்டளையி ன்படியே என் தாய்தகப்பனிடத்திற் செலவுபெற்றுக் கொண்டுநம்மு டைய தேசத்திற்கு நாம் போகவேண்டியதேயல்லால் அன்னியதேச த்திலிருப்பது தருமமல்ல இப்போதே நான்போய்ச் செலவுபெற்று க்கொண்டு வருகிறேனென்று சொல்லிவிட்டு ஜெயப்பிரதை யானவள் தன் தாயாரண்டைக்குப் போய் அவளுக்கு தயவு வரும்படிக்கு கொஞ்சின வார்த்தைகளாகப் பேசிப் பயபக்தியுடனே சேவித்துச் சொல்லுகிறாள்.

அம்மா இவ்வுலகத்திலே பெண்ணாகப் பிறந்தால் பிறந்த வீடு சொந்தமில்லையென்ற வார்த்தையானது இன்றையதினந்தான் தெரி யவந்தது அது எப்படியென்றால் என் நாயகர் பட்டணத்திற்குப் போகவேணுமென்று உங்களிடத்திற் செலவுபெற்றுக் கொண்டு

ரச்சொல்லி என்னை யனுப்பிவித்தாரென்று குளிர்ந்த வசனமாகச்
சொல்லி இரண்டு கண்களிலேயும் முத்துகள் உதிர்ந்தாற்போல நீர்
சொரிய துக்கித்துச்சொன்ன குமாரத்தியைப் பார்த்துத் தாயானவள்
கண்களிலேயும் நீர் சொரியத் துக்கித்துச் சொல்லுகிறாள் அம்மா
மகளே என்கட்டிக்கருணைக்கடலே என்தாயே இன்றைக்கு என்னைப்
பிரிந்து போகும்படி ஆச்சுதே நான் பட்டணத்திற்குப் போய்வருகி
றேனென்று சொல்லுகிறையே உன்னைவிட்டு அரைநிமிஷமாகி
லும் பிரிந்திருக்க மாட்டேனே இதற்கெப்படியென்று புத்திரசோ
பம் சகிக்க மாட்டாமல் அடியுடனே வெட்டிச சாய்ந்த மரம்போ
ல் நிலத்திலே தொப்பென்று விழுந்து மூர்ச்சையடைந்தாள். ஜெய
ப்பிரதையும் தன்தாயைப்பார்த்து வியசனத்தைப் பொறுக்கமாட்டாம
ல்தானும் மூர்ச்சையாய் விழுந்துவிட்டனள் அதைப்பக்கத்திலிருந்த
தாதியர்கள்செய்த சைத்தியஉபசாரத்தினாலே இருவரும் மூர்ச்சை
தெளிந்தெழுந்திருந்து உட்கார்ந்துகொண்டு வியசனப்படுகிறதைப்
பாங்கியர்கள்கண்டு அவர்களுக்கும் மனபொறுக்க மாட்டாமல் பரி
தாபப் பட்டுக்கொண்டிருக்கசசே சோமதத்தமகாராசா அவ்விடத்தி
ற்குவந்து அவர்களிரண்டுபேரும் துக்கப்படுகிறதைப் பார்த்துத் தா
னுஞ்சற்றே புத்திகலங்கி விசாரப்பட்டு உடனே தன்மனதைத்தானே
ஒருவாறாகத் தேற்றிக்கொண்டு தன் குமாரத்தியையும் பெண்சாதி
யையுந் தேற்றி அவர்கள் துக்கத்தைநீக்கிச சந்தோஷப்படுத்தி பின்
புமருமகனான சக்கிரவர்த்தியாகிய புரூரவசசக்கிரவர்த்தியை யழைப்
பித்து அவருக்குத்தகுந்த மரியாதைகள்பண்ணித் தனகனவஸ்துவா
கனாதிகளும் கொடுத்து ரதகஜதுரகபதாதி சதுரங்கசேனைகளும் தண்
டிகைமுதலான வஸ்துக்களெல்லாம் குறைவில்லாமல் வெகுமானமா
கக்கொடுத்துத் தன்குமாரத்திக்கும் நவரத்தினமயமான ஆபரணங்க
ளும் தங்கமயமான வஸ்திரங்களும் பின்னையு மனேகவரிசைகள் சீத
னமாகக்கொடுத்துச் சோமதத்தமகாராசன் தன்குமாரத்தியைப்பார்
த்து அம்மா நீ ஐம்பத்தாறு தேசத்துராஜாக்களுக்கும் அதிபதியான
புரூரவச்சக்கிரவர்த்தி யுனக்குப் புருஷனாகக் கிடைத்தார் நாங்களுன்
னைத் தபசுபண்ணிப் பெற்றதனால் ஐம்பத்தாறு தேசத்தரசர்களையும்
கண்டோம் மகாகீர்த்தியையும் படைத்தோம் எத்தனைகாலமானாலும்
நீயுன் தாய்வீட்டிலேதானே யிருந்தால் தருமமல்லவம்மா நீஉன்மாமி
யார்வீட்டிற்குப் போகிறதேநலம் அடிக்கடிநான் விசாரணைசெய்து
கொண்டு வருகிறேனென்று சோமதத்தமகாராசன் சொல்லிவிட்டுத்த
ன்குமாரத்தியாகிய ஜெயப்பிரதையைத் தங்கப்பல்லக்கின்மீ தேற்றி
வைத்துத் தன்மருமகனாகிய சக்கிரவர்த்தியை நவரத்தினமிட்டிழைத்

தரதத்தின்மேலேற்றுவித்துத் தானும் தன் சேனைகளும் ரதகசதுரக பதாதிகளுடனே பட்டணத்தைவிட்டு வெளிப்பட்டுச் சகலமேளவாத்தியங்கள்முழங்கப் பிராமணர்களாசிர்வாதம்பண்ண வெகு ஆடம்பரத்துடனே சிறிதுதூரம்வந்து ஓராஜேந்திரா சகலலோகதுரந்தரா பஞ்சாசகோடி பூமண்டலத்தைப் பரிபாலனம்பண்ணப்பட்ட சக்கிரவர்த்தியேயென்று கொண்டாடிப் பலவிதங்களாகத் தன்குமாரத்தியைக் குறித்துச்சொல்லித் தானுந்தன்குமாரனும் அவர்களுக்குச் செலவு கொடுத்து அவர்களிடத்தில் தாங்களும் செலவுபெற்றுக் கொண்டு திரும்பினார்கள்.

பின்பு சக்கிரவர்த்தியும் செயப்பிரதையுடனே சகல சேனைகளும்புடைசூழ்ந்துவரச் சிறிது தூரஞ்சென்றபின்பு தண்டிகையிலிருக்கிற பெண்ணைப் பாங்கிமாருடனே கூடத் தன்ரதத்தின்மேலேற்றிக்கொண்டு இருவருந் தாமபூலமணிந்து சந்தோஷமாகச் சகலமானமேளவாத்தியங்களும் முழங்கவெகு உற்சாகத்துடனே காடுமேடுகள் ஆறுகள் மலைகள் செடிகள் பட்டணங்கள் முதலான நகரங்களையெல்லாம் கடந்து இந்திரபுரத்திற்குச் சமீபத்திலே வந்து தண்டுவிட்டிறங்கி மந்திரிகளுக்குத்தான்வந்த சமாசாரங்களைச் சொல்லியனுப்பிவைத்தார் அதுகேட்டு மந்திரிபிரதானிகள் சந்தோஷப்பட்டு பட்டணமெங்கும் வேடிக்கையாயலங்காரஞ்செய்து தங்கத்தட்டில் பழங்கள் புஷ்பங்கள் தாமபூலங்கள் கெந்தாட்சதைகள் இதுமுதலான வஸ்துக்கள்காணிக்கையாக எடுத்துக்கொண்டு மேளவாத்தியத் தொனியுடனே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுவந்து புரூரவச்சக்கிரவர்த்தியைக் கண்டு நமஸ்காரங்கள்செய்து கைகட்டிக்கொண்டு நின்றார்கள்.

அப்போது சக்கிரவர்த்தியாகிய புரூரவச்சக்கிரவர்த்தி சந்தோஷத்துடனே மந்திரிமுதலானபேர்களை ஆதரணைபண்ணி அவர்கள் கொண்டுவந்த வஸ்துக்களையெல்லாம் பிராமணர்களுக்குக் கொடுத்துவிட்டு அவர்களுடனே கூடச் சக்கிரவர்த்தி சகலசம்பிரமத்துடனேபட்டணத்தில் நல்லசுபமுகூர்த்தத்தில் பிரவேசித்து வீதிகளில் அலங்காரமாய்ப் புறப்பட்டு வருகிறபோது அந்தப்பட்டணத்திலே பொற்கோபுரங்களும பொன்னுப்பரிகைகளும் பொற்கோட்டைகளும் நவரத்தினங்களும தங்கத்தினாலே கட்டின வீடுகளும் நவரத்தினமயமாயிருக்கிற மாடமாளிகை கூடகோபுரங்களும் பொற்பிரகாசமான மதிள்களும் அநேக விந்தையான வேடிக்கைகளெல்லாம் புரூரவச்சக்கிரவர்த்தி செயப்பிரதைக்குக் காண்பித்துவரச்சேபட்டணத்துச் சனங்களெல்லாம் கும்பு கும்பலாய்க் கூடிக்கொண்டு கர்ப்பூரவிளக்குகளும் ஆலாத்திகளும் காட்டப் பிராமணஸ்திரீகள் கெந்தாட்சதைக ளி

க்கப் பிராமணர்க ளெச்சரிக்கைசொல்லி அவருடைய பராக்கிரமங் களைக் கொண்டாட இருபக்கத்திலும் அரசகூட்டங்கள் நெருங்கிவர மங்களஸ்திரீகள் புஷ்பசேஷைக ளிறைக்க பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் முதலானபேர்களு முத்துச் சேஷைகளிறைக்கச் சகலசெனங்களு மானந்தமாய் வேடிக்கைபார்க்க புண்ணியஸ்திரீக ளெல்லாம் முத்தாலாத்தி பவளாலாத்தி நவரத்தினத்திலாலாத்திகள் எடுக்கமகா உற்சாகத்துடனே புரூரவச்சக்கிரவர்த்தி இந்திரபுரத்தைப் பிரதட்சணம்பண்ணித் தானும் தன்பெண்சாதியும் அரண்மனைபோகப் புண்ணியஸ்திரீகள் சோபனம்பாடப் பிராமணர்களுக்கும் வித்துவாம்சருக்கும் மந்திரிகளுக்கும் பிரதானிகளுக்கும் மற்றுமுள்ள சேவகர்களுக்கும் அபரிமிதமாய் வெகுமானங்கள் கொடுத்துச் சகலசம்பிரமத்துடனே வேடிக்கையா யிருந்தார்கள்.

பின்பு செயப்பிரதை தன்நாயகன்கட்டிவைத்த அரண்மனை யந்தப்புரங்களை நன்றாகப்பார்த்துத் தன்மனிதனைவிட்டுப் பிரிந்துவந்ததும் நினையாமல் வெகுநாள் பழகினவளைப்போல சந்தோஷத்துடனே தானும்தன் நாயகனுங்கூடிச் சுகத்தை யடைந்தார்கள். ஒருவருக்கொருவர் பிரியாவிடையாய்ப் பிராணன்ஒன்று பொந்திஇரண்டுமாக ஒருமனதாய்க்கலந்து தங்களுக்கிச்சையானபடி கேளிவிலாசமாகப் புட்பவனங்களிலேயும் மேடைகளிலேயும் மன்மதகேளிவிலாசங்களை நடத்திக்கொண்டு தருமநீதிதவறாமல் செங்கோல்செலுத்தி உலகமெங்குந் தன்னைக்கொண்டாடத்தக்கதாக அரசாட்சி செய்துகொண்டிருந்தார்.

கேட்டீரோ தருமநந்தனா இதுவரைக்கும் நடந்தவற்றைச் சொன்னேன் இனிநடக்கப்போகிறதைச் சொல்லுகிறேன் கேளும் இப்படிசகலசம்பிரமத்துடனே அரசாட்சிசெய்து கொண்டிருக்கிற புரூரவச்சக்கிரவர்த்தியைச் சனீஸ்வரபகவானானவர் துக்கப்படுகிற நிமித்தம் ஒருநாள் புரூரவச்சக்கிரவர்த்தி தன்கொலுவீற்றிருக்கிற சமயம்பார்த்துச் சனீஸ்வரபகவான் பிராமணவேடமாகவந்து ஆசீர்வாதஞ்செய்யப் புரூரவச்சக்கிரவர்த்தி அந்தப்பிராமணனுக்கு நமஸ்காரங்கள்செய்து பொற்பீடமளித் துபசாரஞ்சொல்லி நீர் எந்ததேசம் எங்கேவந்தீரென்று வினவ அந்தப்பிராமணன் சக்கிரவர்த்தியே நான்சூரியபகவான்குமாரன் என்பேர்சனீஸ்வரன் உம்மண்டைக்குக்கொஞ்சங் காரியார்த்தமாய் வந்தேன் இந்தப்பிராமண னென்னத்தைக்கேட்கப்போகிறானென்று சிந்திக்கவேண்டாம்உண்டானவிசேஷமும் உடனேசொல்லுகிறேன் கேளும் அதென்னவென்றால் தேவர்கள் யக்ஷர்கள் கின்னரர்கள் மனுஷர்கள் முதலானபேர்சொன்னாலும் நமெங்கு

வார்க ளவர்களுடைய மதங்களையெல்லா மென்னுடையமாய்கையினா
லே யடக்குவேன் இப்படி சகலலோகத்தார்களையும் நடுங்கப்பண்ணி
வைக்கிறவன் சாயாதேவிக்கும் சூரியபகவானுக்கும் பிறந்தவன் நான்
சகலஜெயமுங்கொண்டவன் அனேகம் கீர்த்தியுள்ளவன் என்னையுந்
தமரான பெரியோர்கள் மிகவும கொண்டாடுவார்க ளானபடியினா
லே யுமமண்டைக்குவநதேன் உமமிடத்தில் வருகிறதறகு இளமை
நல்லதோ முதுமைநல்லதோ உமக்குசசம்மதியான காலத்தைச்சொ
ல்லுமென்று கேட்டதற்குப் புரூரவச்சக்கிரவர்த்தி வாருமையா சநீ
ஸ்வரரே முதுமையானகாலத்திலே யும்முடையகாலம் வநதுகூடினால்
உமது இடுக்கண்கள் பொறுக்கப்போகாது.ஆகையால் இளமையிலே
தாமே யும்முடைய கண்காட்சியைக்காட்டி எப்படியாகிலுமென்னை
இரட்சிக்கிறகடமை உமக்கேயல்லாமல் மற்றொருவருக் குண்டோ
வென்று பலவாறுக் தோத்திரஞ்செய்யச சநீஸ்வரன்நல்லது நீர்சொ
ன்னபடியே நாம்வருகிறோமென்று செலவுபெற்றுக்கொண்டு அநதர
ததானமாய்ப் போய்விட்டார்.

சிறிது காலததிற்குப்பின்பு சநீஸ்வரபகவானனவர் இநதப புரூ
ரவசசக்கிரவாத்தியை நாமசொல்ப அரசனென்றெண்ணி யவரிடத்தி
ற்செல்ல இப்போதவனைப பார்க்குமளவில் இநதவுலகத்திலிருக்கின்
ற அரசர்களுக்கெல்லாம மேன்மையான சக்கிரேஸ்வரனாகவும தரும
சொரூபனாகவும சிவபூசைஆசாரம நீதியாக்கங்களினும தயைதாட்
சண்யங்களிலும் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனங்களினும் குறைவி
ல்லாமல் செங்கோல்நடாததிவருகின்ற சக்கிரேஸ்வரனை நாம்எவ்வித
த்தில பிடிக்கலாமென்று மகா துயரத்துடன் சமயமபாாத்துக்கொண்
டிருந்தார்.

கேட்டீரா தருமநநதனா இப்படி சநீஸ்வரபகவான் சமயம்பார்
ததுக்கொண்டிருக்கிற புரூரவசசக்கிரவாத்திக்குத தெய்வகடாக்ஷத்
தினால் செயப்பிரதைவயிற்றில் இரண்டுபுத்திராகள் பிறந்தாாக ளப்பு
த்திராகள் பிறநதவுடனே சந்தோஷப்பட்டுப் பூதானம், கோதானம்,
கன்னிகாதானமா மெல்லாத்தானங்களுஞ் சந்தோஷமாகக் கொடுத்
துவிட்டுச சுகசீவியாய் ராச்சியபரிபாலனம்செய்துகொண் டிருக்கிற
போது தலைவிதியைத் தள்ளக்கூடாதபடியினாலே பயிர்களை மிருகங்க
ள்வந்து அழித்துப்போடுகிறதாய்க் குடிகள்முறையிட அப்போது
ஒரு சீவஇம்சையும் சொப்பனத்திலேயும் நினைக்காமலிருக்கிற சக்கி
ரவர்த்தியானவர் காட்டுக்கு வேட்டைமார்க்கம்போகவேணுமென்று
நினைவுபிறந்து மந்திரி பிரதானிகளுடனே ரதாரூடராய் வேட்டை
ர்களையழைத்துக்கொண்டு செயப்பிரதையையும் ரதத்தின்பேரி

ற்றிக்கொண்டு ரதகஜதுரகபதாதிகள் சூழ்ந்துவரச்சகலஜெனங்களும் வேடிக்கையாகப் பிரயாணப்பட்டுப் பேரிகை முழக்கத்துடனே காட்டிற்சென்று வேட்டையாட உத்திரவுசெய்தார்.

அவ்வேட்டைக்காரர்கள் அப்படியே வேட்டையாடி அனேக மிருகங்களைக் கொன்றுவிட்டோம் இனியெங்களால் முடியாதையாவென்று விண்ணப்பஞ்செய்யச் சக்கிரவர்த்தி யவர்களை இம்சை செய்யலாகாதென்று தன் வேட்டைக்காரருடனே கூடத் தானும் வேட்டையாடிக் குடிகளுக்கோர் துன்பமுமவரை விடாமல் பாதுகாத்து ரட்சித்துவருங் காலத்தில் ஒருநாள் சநீஸ்வரபகவான் [illegible] ராசகயிலிருந்த ராசசியத்தை [illegible] கொண்டு [illegible] கொள்ளுமென்று [illegible] போனென்று [illegible] புரத்திற்குப் பதினாகாக வழிக்கப் [illegible] கொள்ளாட [illegible] பரிக்கிரகம்செய்து [illegible] ஆலோசனைசெய்து [illegible] சக்கிரவர்த்திக்கு ஆணைக்கு [illegible] போகுமபொது [illegible] தெரியில் [illegible] செய்திருந்து செப்பியென்று [illegible] சக்கிரவர்த்தி [illegible] நகரத்தில் [illegible] திருநாள் [illegible] புரூரவச்சக்கிரவர்த்தி [illegible] வந்து சூழ்ந்தது [illegible] கொண்டு [illegible] சொல்லுகிறோமென்று [illegible] விட்டுத் தானும் அந்தப் பதிக்குப் போய்விட்டார்.

பின்பு மனைவியும் தானுமாகக் கூடி விசனமடைந்து கொலுவிருக்கையில் மனைவியானவள் புருஷனைப் பார்த்துச் சக்கிரவர்த்தியே நீர் யிப்போது வேட்டையிட்டு ஆலோசனை பண்ணுகிறதென்னென்னவினவச் சக்கிரவர்த்தி சொல்லுகிறார் வாராயபெண்ணே (குறள்) "சூழ்ச்சிமுடிவு துணிவெய்தலத்துணிவு தாழ்ச்சியுட் டங்குதல் தீது" என்றுதிபானஞ்செய்துகொண்டுவினையானது நம்மைவந்து சூழ்ந்துகொண்டால் அந்தவினை தீருகிறவரைக்கும் நாமென்ன உபாயம்பண்ணினாலும் தாழ்ச்சியாகக்காலங்

தாழ்வுபடுமேயல்லாமல் சவுக்கியத்தை யடையப்போகிறதில்லை வினை தீருகிறபோது ஆதித்தனைக்கண்ட பனிபோலவும் தீராதபோது இருளைப்போலவு மிருக்கும் பந்தம்பிடித்தாலிருள் நீங்குமோ ஆதித்தனுதயமான பிறகு இருள் நிற்குமோ இதுவெல்லாம்வினைக் கேதுவல்லவோ அதெப்படியென்றால இந்நாள்வரைக்கும் நாமொருதேவன்போலவும் மற்ற அரசர்களெல்லாம நம்மைத் தொழுபவர்கள்போலு மிருக்க இப்போதவர்கள் வதைக்க இச்சைகொண்டார்க ளதுநம்மைச்சூழ்ந்தவினையானது அவர்களைப் பகைக்கச்செய்ததினால நமக்குவெற்றிகொடுக்கமாட்டாது நல்வினையானகாலத்திலே யாவரும் பகைப்பாரோ நமக்குத்தீவினையானதாலையா லடுத்திருந்த அரசர்களேபகையானார்கள் (குறள்) "எட்பகையன்ன சிறுமைத்தேயாயினு முட்பகையுள்ளதாங்கேடு" என்றதும்போல எல்லாமட்டங்களுமறிந்த அரசர்களிப்போது நம்மையொருபொருட்டாக வெண்ணாமல் நகரத்தைவளைத்துக் கொண்டபோதே பொல்லாதவினையானது அவர்களைப் பகைக்கச்செய்ததேயல்லாமல் அவர்களிச்சையாகச் செய்ததல்ல ஆகையால் நம்முடைய ரதகெசதுரக பதாதிகளை வீணில்மாளக் கொடுப்பது தகுதியல்ல அவர் இப்படி மடிந்தகாலைதினும் நமக்குவெற்றி கொடுக்கமாட்டாது அதெப்படியெனில் இராவணனுக்கு வினைவந்து சூழ்ந்தபடியால் இரண்டாயிரம வெள்ளஞ்சேனை இராட்சதர்கள் படைத்துணையாக விருந்துமவர்களைச் செயம்பண்ணச் சத்தியற்றவனாய் மடிந்துபோனான் அவனுக்கு வினையில்லாதகாலத்தில் தேவர்களுக்குமெதிர்நிற்கமாட்டாமற் போனார்கள் அப்படிக்கல்லவா தேவியென்று சக்கிரவர்த்தி சொல்லிவிட்டு நித்திரைசெய்துவிட்டார் சிலநேரஞ்சென்று நித்திரைதெளிந் தெழுந்திருந்து தன்மனைவியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

கேளும்பெண்ணே நாம்வேட்டைக்குப் போனதாகவு மவ்விடத்திலே ஒருமானுங்கலையுமிரண்டுகுட்டிகளையுங் கண்ணினாலே கண்டதாகவு மந்தக்கலையை நாய்தொடர்ந்து துரத்தினதாகவும் மான்குட்டிகளும் போனவிடந்தெரியாமற் போனதாகவும் கலையின்முன்னங்காலை நாய்பிடித்ததாகவும பின்னையொருமான்வந்து கலையுடனேகூடிமேய்ந்ததாகவு மந்தக்கலைக்கொரு குறைவில்லாம லிருந்ததாகவும்முன்னோடிப்போன மானுங்குட்டிகளும்வந்துசேர்ந்ததாகவும்இரண்டுகுட்டிகளும் அந்தக்கலையுங் கூடிக்காட்டிலே தனது இனத்துடனே கூடிவாழ்ந்ததாகவு மிப்படிக்கெல்லாம் நான்கனவுகண்டேனென்று சக்கிரவர்த்திசொல்லத் தேவியானவள்கேட்டு மனவருத்தத்துடன் [illegible]

கித் துயரத்துட னிருக்கையில் புரூரவச்சக்கிரவர்த்தியானவர் தன்மனைவியைப்பார்த்துப் பெண்ணே என்மனவருத்தப் படுகிறாய் எலிய மூதால் பூனைவிடுமோ வந்தவிபத்தெல்லா மனுபவிக்கத்தான் வேண்டும் ஆகையால் நீகற்பு நிலைதவறாம லிருந்தால் எத்தனைவிபத்து வந்தபோதினும் என்னசெய்யப்போகிறது.

குறள்.

"இன்பத்துளின்பம் பயக்குமிகலென்னுந்
துன்பத்துட்டுன்பங் கெடின்"

என்பதுபோல இப்போதுவந்திருக்கிற துன்பத்துக்கு ஐசுவரியமென்கிற துன்பத்தைக்கொடுத்தா லின்பமென் றெண்ணிக்கொள்ள வேணும் அவரவர்வினையை அவரவ ரனுபவிக்கத்தான் வேண்டுமென்று சொல்லிவிட்டு எழுந்திருந்து ஸ்நானஞ்செய்து சிவபூசை முதலானதேவாராதனைகளை முடித்துக்கொண்டு கொலுச் சிங்காரமாய் நவரத்தினமிழைத்த கிரீடமும் வாகுவலயமுந் தரித்துக்கொண்டு புரூரவச் சக்கிரவர்த்தியானவர் தன்கொலு மண்டபத்திலே ஒற்றைக்குடைநிழற்ற உபயவெண்சாமரம்வீசச் சிங்காதனத்திலே வந்து உட்கார்ந்து கொலுவீற்றிருக்கின்ற வேளையில் மந்திரி முதலானவர்கள் வந்து அரசனுடைய சமுகத்தைக்கண்டு அவரவர் செய்யுந்தொழில்களைச்செய்துகொண்டு வருகிற தருணத்தில் சக்கிரவர்த்தியான புரூரவச்சக்கிரவர்த்தி தன்னருகில் இருக்கின்ற மந்திரியைப்பார்த்து இன்றைக்கு நம்முடைய ராணுவங்களுக்கெல்லாம்முன்சம்பளமும்பின்னுறு மாதத்துக்கு இனுமாகச் சம்பளமுங் கொடுத்துவிட்டுச் சிறையில் இருக்கப்பட்டவர்களுக்கும் பொக்கிஷத்தைத்திறந்து கொடுக்கும்படிகட்டளையிட அப்படியே மந்திரியானவர் சக்கிரவர்த்தியினுடைய கட்டளைப்பிரகாரஞ் சகலஜெனங்களுக்குங் கொடுத்தது மல்லாமல் பறையறைவித்துவந்து கேட்டபேருக்கு அபாரியாய் ஓர்குறைவில்லாமல் நடாத்திவருகையில் இந்தச்சமாசாரத்தை அந்தப்புரத்தைச் சுற்றிவளைத்துக்கொண்டிருக்கிற அரசர்களெல்லாருங் கேட்டுத்திடுக்கிட்டு இதற்கென்னசெய்குவோம் எல்லோரும் நாளையத்தினம் சக்கிரவர்த்திக்குச் சந்தோஷமாகும்படி காணிக்கைகொண்டுபோய் வைத்துச் சமாதானஞ் செய்துகொள்ளுவோ மில்லாவிட்டால் தெய்வலோகத்தைக் காத்தசக்ரேஸ்வரனுக்கு நாமொரு எதிரோவென்று ஆலோசனை பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க அன்று இராத்திரி சனீஸ்வரபகவானுடைய மாய்கையினால் சக்கிரவர்த்தி

குறள்.

"எண்ணித்துணிக கருமந்துணிந்தபி
னெண்ணுவமென்ப திழுக்கு.

என்கிறதுபோல எண்ணிக்கொண்டு தன்னுடைய தேவியைப் பார்த்துச்சொல்லுகிறார்வாரும்பெண்ணே இந்தஐசுவரியத்தின்பேரில் மறுமண்டலத் தரசர்களிச்சைகொண்டு கோட்டையைச்சுற்றி வளைந்திருக்கிறார்கள்ஆகையாலிந்த ஐசுவரியத்தைவிட்டு அகன்றுபோகவேணும்நமக்குஐசுவரியம்வரும்போதுதானேவரும் அதற்கிப்போஇராக்காலம்வந்தது நாமிந்தநகரத்தைவிட்டுப் போகவேணுமென்று சக்கிரவர்த்திசொல்ல செயப்பிரதையானவள் நீர்மகத்தாகிய கீர்த்தியைப் பெற்ற சக்கிரேஸ்வரராகையாலும்முடைய திருவுளத்துக் கேற்றபடி நடக்கிறேனென்றுசொன்ன தேவியைப்பார்த்துச சந்தோஷப்பட்டு இருவரும் ஆடையாபரணங்களைக்கழட்டிவைத்துப் போட்டு ஒருபழங்கந்தையைத்தரித்துக்கொண்டு இரண்டுபிள்ளைகளையும் பேருக்கொரு குழந்தையாக வெடுத்துக்கொண்டு அரண்மனையைவிட்டுப் புறப்பட்டுக் குதிரைக்குப புல்கொண்டுவந்தவர்கள் பிறகேதொடர்ந்து தன் நகரத்தைவிட்டு மறுதேசம போகையில் வழியில் சக்கிரவர்த்தியார் நாம்தப்பிவநதோம இன்னுஞ் சிலநேரஞ்சென்று வந்தால் தலையாரிகள் விசாரிப்பார்களதற்கு முன்னமே வநதுவிட்டோமென்று பேசிக்கொண்டு நடக்கையில் சனியீஸ்வரபகவானனவர் ஒருபிராமணனாக வழியேபோகிறவன் போலேவந்து நீங்களார் எங்கேபோகிறீர்களென்று கேட்கப் புரூரவச்சக்கிரவர்த்தி நாங்கள் பரதேசிகள் பிழைக்க வந்த விடத்திலே கலகமென்று சொன்னபடியால் மறுபட்டணத்திலேயாவது போய்ப்பிழைக்கலாமென்று புறப்பட்டோமையா வென்றார்களதற்கு சனீஸ்வரபகவானாகிய பிராமணன் ஐயோ இந்தச்சிறுகுழந்தைகளை யெடுக்கமாட்டாமற் போகிறீர்களே யென்று பச்சதாபப்பட்டுத் தானொருகுழைந்தையைவாங்கிக்கொண்டுநீங்கள்காட்டில்நடக்கமாட்டீர்க ளாகையால் நீங்கள் என்பிறகே நடப்பீராகில் இந்தக் காடுமலையுங் கடக்கக்கொண்டுபோய் விடுகிறேன் என்பிறகே தொடர்ந்துவாருங்களென்று பிராமணன்கூறச் சக்கிரவர்த்தி நமக்குநல்ல துணைகிடைத்ததென்று அந்தப்பிராமணன்பிறகே தொடர்ந்துபோக அந்தப்பிராமணன் அநேகதூரம்-காடு-மலை-ஆறுகள்கடந்து-ஓர்பட்டணத்தைக் காண்பித்து நீங்கள்போய்ப் பிழையுங்களென்று தன்கையிலிருந்த குழந்தையை அவர்கள்கையிற் கொடுத்துவிட்டுப் பிராமணனாகிய சனீஸ்வரபகவான் போய்விட்டார்.

பின்பு சற்று நேரஞ்சென்று சூரியனுதயமாச்சுது அப்போது புரூரவச்சக்கிரவர்த்தியினுடைய கண்ணுக்கு ஒருகுளமும் நந்தவனமும் சண்பகம்-கமுகு-அசோகு-தேவதாரி-சந்தனம்-தேக்கு-வாழைபலாமர முதலான விருக்ஷங்களும் நிறைந்ததோப்பும்-தாமரை-நீலோற்பலம் அல்லிமுதலான புஷ்பங்கள் நிறைந்திருக்கப்பட்ட தடாகத்தைக்கண்டு இராத்திரி நடந்துவந்த ஆயாசத்தைத் தீர்த்துக்கொண்டு சற்றுநேரஞ்சென்று ஸ்நானஞ்செய்து சிவபூசைமுடித்துக்கொண்டு சக்கிரவர்த்தி தன்பிள்ளைகளையும் மனைவியையும்பார்த்து இவர்கள் வருத்தப்படுகிற துன்பத்தைப் பார்க்கும்படியாய் விதித்தீரோ சிவசிவாவென்று பஞ்சாட்சரத்தைத் தியானித்துக்கொண்டு எழுந்திருந்து மகாதுயரத்துடன் பேருக்கொரு குழந்தைகளையெடுத்துக் கொண்டு நடக்கிறபோது அவ்விடத்தி லுண்டாகிய அதிசயங்களைத் தேவிக்கும் பிள்ளைகளுக்குங் காண்பித்து விநோதமாகப்பொழுது போக்கிக்கொண்டு நடக்கிறபோது பாலைநிலமுங் கடந்து நன்னிலமாகிய மருதநிலத்தில்வருகிறபோது வாழை-மஞ்சள்-இஞ்சி-தேக்கு-பலா நிறைந்த செந்நெல் மிகுந்தவிளைவுகண்டு இதுநல்லநாடு இவ்விடத்திலிருந்து பிழைக்கநடக்கும்போது மத்தியானகாலமாச்சுது அக்காலத்திலும் நடந்தயாதவர்களாகையால் இத்தினை மயக்கமுட நடந்துவந்த ஆயாசமும் பசிமிகுதியினால் நடக்கச் சக்தியற்று வழியிலே விழுந்துவிட்டனர்.

அப்போது அந்த இரண்டுபிள்ளைகளுடைய அழுகிறசத்தத்தை அடுத்தவயலிலே யுழப்பாறுக்கவந்த கூலியாளிலே ஆனந்தனென்கிற பெரியவனனேகம்பேருக்குபகாரியாயிருக்கிறவன் கண்டுயேதடா வழியொன்று போகவழிதப்பிவந்து விழுந்துவிட்டார்கள் சிறுகுழந்தைகளாக இரண்டு குழந்தைகளுடைய சத்தங் கேட்கிறபடியால் ஒருவனோடிப் பாருங்க ளென்றுசொல்ல அப்படியே ஒருவனோடிப்போய்ப்பார்த்து வெகு ஆயாசமாய்விழுந்து கிடக்கிறார்களென்று சொல்லக்கேட்டுத் தங்களுக்கு வந்திருக்கிற சாப்பாட்டை யவர்களுக்குப்போட்டு அவர்களாயாசந் தீர்ந்தபின்பு நீங்களாரென்றுகேட்க நாங்கள் புரூரவச் சக்கிரவர்த்தியினுடைய பட்டணத்தில் கணக்கெழுதிக்கொண்டிருந்தோம் அவரிடத்தில் கலகமானபடியினாலெல்லாப்பறிகொடுத்திப்படிவந்து விட்டனமையா வென்றார்கள்.

நல்லது நாங்கள் கூலியாள் யெங்களாலியன்றமாத்திரம் அன்னவஸ்திரம் கொடுக்கிறோம் எங்களுக்குப் பொதுவிலேயிருக்கிற கூலியை ஆள்விகிதம் பங்கிட்டுக் கொடுத்துக்கொண்டு வருகிறோமென்று கூற சக்கிரவர்த்தியும் நல்லது அப்படியே செய்கிறேனென்று சம்மதிக்க பொதுவில் ஒருஅவர்களாளுக்கு ஒருவஸ்திரமும்சேலையும்வாங்கி

ஒருவீடுங்கட்டிக்கொடுத்து அன்னவஸ்திரத்துக்குக் குறைவில்லாமல் வைத்திருக்கிறகாலத்தில் சக்கிரவர்த்தியானவர் சொல்லியது.

குறள்.

கறபித்தான்போனானே காக்கக்கடனில்லைபோ
ற்பனை வன்னைபரன்.

என்றதுபோலத் தியானித்துக்கொண்டு இதெல்லாம் ஆண்டவன்செயலல்லாமல் வேறொரு செயலுண்டோவென்று கேள்வியுடனே தருமார்த்த காமமோட்ச சக்திபல்யும் ஞானப்பிரசங்கமும் பேசிக்கொண்டிருந்த தேவியானவள்.

குறள்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

என்பதுபோல வுணர்ந்து நமக்குப்பாததாமே துணையல்லாமல் வேறெதெய்வமில்லையென்று தியானித்துக்கொண்டு பட்டணத்திலே சகலஐசுவரியத்துடனேயிருந்துவாழ்தலிலும்பதின்மடங் கதிகமாகத் தானேயெண்ணிக்கொண்டு பத்தாவுந்தானுமழுமேயிருந்தயமாகவந்தபரதேசிகளுக்கும உள்ளதுக்குள்ளே குறைவில்லாமற்செய்துகொண்டுவருகிறகாலையில் சோமபுரியென்கிறபட்டணத்திலேசோமேசனென்கிற அரசன் நீதிவழுவாமல் அரசாட்சிசெய்துகொண்டிருக்கிற பட்டணத்தில்நவகோடி நாராயணனென்கிறசெட்டியாரென்பவரொருவருண்டு அவருக்குமுன்னிருந்தசெல்வத்திற்கு இப்போதுகுறைவுவந்ததென்று.

குறள்.

அறத்தினூஉங் காக்கமுமில்லையதனை
மறத்தலினூஉங் கில்லைகேடு.

என்பதுபோல தருமத்துக்குமிஞ்சின ஆக்கமுமில்லை நாம்தருமஞ்செய்யா திருந்தபடியினால் நமதுசெல்வத்திற்குக் குறைவுவந்து நேரிட்டதென்று கருதி அப்பட்டணத்திலிருக்கின்ற சாஸ்திரபண்டிதர்களையழைப்பித்துத் தன்மனதிலிருக்கின்ற துயரத்தை யவர்களிடத்தெடுத்தோத அவர்கள்தருமசாஸ்திரங்களைப் பார்த்துச் செட்டியாரே ஆதுலர்க்குச்சாலை ஓதுவார்க்குணவு அறுசமயத்தார்க்குண்டி பசுவுக்கு வாயுறை சிறைச்சோறு தின்பண்டநல்கல் அரவைச்சோறு மகப்பெறுவித்தல் மகவுவளர்த்தல் மகப்பால்வார்த்தல் அறவைப் பிணஞ்சுடுதல் அறவைத்தூரியம் சுண்ணம் நோய்மருந்து வண்ணார்

தர் கண்ணாடி காதோலைகண்மருந்து தலைக்கெண்ணெய் பெண்போக
ம் பிறர்துயர்காத்தல் தண்ணீர்ப்பந்தல் மடம்நடம்சோலை ஆவுறிஞ்சு
தறி விலங்கிற்குணவு ஏறுவிடுத்தல் விலைகொடுத்துயிர்காத்தல் க
ன்னிகாதானம்சிவாலயங்களும் நந்தவனங்களு மிப்பேர்க்கொத்ததரு
மங்கள் வழுவாமல்நடாத்தி வருவீராகிலும்முடைய செல்வத்திற் கெ
ப்போதும் ஓர் குறைவும்வரமாட்டாதென்று சொல்லினர் அதுகளை
யெல்லாம் கேட்டிருந்த நவகோடி நாராயணனென்கிற செட்டியார்
அதுகளி லொன்றாகிலும் குறைவில்லாமல்கட்டிப் பின்பு திருக்கு
ளம்கட்டிவைக்கவேணுமென்று அப்பட்டணத்திலிருக்கின்ற கூலி
யாளாகிய அனந்தனென்கிறவனையு மவனைச்சார்ந்தவர்களையுமழை
ப்பித்து ஓர்திருக்குளம் கட்டவேண்டு மதறகென்ன சொல்லுகிறாயெ
ன்று கேட்டதற்கவர்களில் பெரியவனாகிய அனந்தனென்கிறவ னொ
ப்புக்கொண்டு குளம்வெட்டிக்கொண்டு வருகையில் செட்டியாருமவ
ர்களுக்குண்டாகிய கூலிவிகிதப்பிரகாரமளந்துகொடுக்க அக்கூலியாள
ர்கணக்கப்பிள்ளைகளுக்கும் ஒருபங்கு கொடுக்கச் செட்டியாருங்கொ
டுக்கச்சம்மதித்துக்கொடுத்துக்கொண்டுவருகையில்சனீஸ்வரருடை
யமாய்கையினாலே செட்டியார் புத்திமயங்கிக் கூலியாளைப்பார்த்து
இனிநீங்கள் கூலிக்குவரவேண்டியதில்லை அவரவர்கள் வீட்டுப்பெண்
டுகள்வந்து கூலியைவாங்கிக் கொண்டுபோகும்படி திட்டஞ்செய்தார்.

அதன்பிரகாரம் அக்கூலியாளர்களுடைய பெண்டுகள் வந்து
கூலியை வாங்கிக்கொள்ளும்போது உங்கள் கணக்கப்பிள்ளையினு
டைய பெண்சாதியாரென்று தர்மசிந்தனையுள்ள செட்டியார் சனீஸ்
வரன் மாய்கையினால்கேட்க இவள்தானென்று வந்தபெண்டுகள்
சொன்னார்கள். அவளைப்பார்த்து இவள்தானோ கணக்கப்பிள்ளைபெ
ண்சாதி யிவளைப்பார்த்தால் மானிடவடிவமாகக் காணவில்லை இவ்
வளவு சவுந்தரியமாகிய பெண்ணை நாம்கண்டதில்லை இவளழகோ மே
கம்போன்ற அளகபாரமும் பிறைபோன்ற நெற்றியும், வில்லுக்கு
ச் சமானமான புருவமும் சேற்கெண்டையைப்போ லொத்த நேத்
திரமும், வள்ளைபோல நாசியும் முத்துப்போலப் பற்களும், ப
வழத்தை யொத்தவதனமும் பூரணச்சந்திரனை யொத்த முகமும்
பொறகின்னத்தைப் போலும் ஸ்தனமு மிவ்விதமான பெண்ணை
நான்கண்டதில்லை இவள்தெய்வ கன்னிகைபோ அன்றோ இப்
படிப்பட்ட சவுந்தரியமுள்ள நாயகியை இவள்தாய்தகப்பன் இந்தக்
கணக்கப்பிள்ளைக்கு விவாகஞ்செய்து கொடுத்ததென்ன இந்தக்கூலி
க்காரனுக்கு வாய்க்கப்பட்டு மிகுதியும் வருத்தப்படுகிறாள் இவள்நம்
மிடம் உடன்படிக்கைக்குவருவாளோ வாராளோ வந்தால் ஓர்குறைவு

யில்லாமல் காப்பாற்றுவோமாக இவள் நம்முடைய வுடன்படிக்கைக்கு வராவிட்டால் ஒருவார்த்தைகேட்போம் அதற்குடன் பட்டாலாச்சு இல்லாவிட்டால் ஒருதந்திரஞ் சொல்வோமென்று யோசித்துக்கொண்டிருந்த மறுநாள் கூலியாள் பெண்டுகள் வந்துகூலிவாங்க அன்றையதினம் கணக்கப்பிள்ளை பெண்சாதிமாத்திரம் வராமையால் செட்டியார் கணக்கப்பிள்ளை பெண்சாதியெங்கேயென்றுகேட்டார் அவள் வரவில்லையென்று சொன்னார்கள்.

செட்டியாரவர்களுக்குங் கொடுக்கவேண்டிய கூலியையளந்து கொடுத்துவிட்டுக் கணக்கப்பிள்ளை கூலியைமாத்திரம் உட்கட்டில் வைக்கச்சொல்லித் தன்னுழியக்காரர்களுக்குக் கட்டளையிட்டுக் கணக்கப்பிள்ளை பெண்சாதி கூலிவாங்க வந்தால் என்கூலியைமாத்திரம் செட்டியாருட கட்டில்வைத்துப் போனார் எடுத்துக்கொண்டுபோவென்று சொல்லிக் கதவையடைத்துவிடுங்களென்று இரகசியமாகச் சொல்லியிருக்கக் கூலியாளான பெண்டுகள் அவரவர் கூலியைமாத்திரம் வாங்கிக்கொண்டு கணக்கப்பிள்ளை பெண்சாதியைப்பார்த்து அம்மா செட்டியார் இன்றைக்குக் கூலிபோட்டாரே நீ போய் வாங்கிக்கொள்ள வில்லையாவென்றுகேட்க அவள் செட்டியார் கூலி கொடுத்தது நானறியேனென்று சொன்னதைச் சக்கிரவர்த்தியாகிய கணக்கப்பிள்ளை மனைவியைப்பார்த்து நீபோய் அந்தக் கூலியைவாங்கிக்கொண்டுவாவென்றுசொன்னபடியால் கணக்கப்பிள்ளை பெண்சாதியாகிய செயப்பிரதை தனியேபோய்ச் செட்டியார்வீட்டிலே காவலாகவிருக்கிற பெயர்களைக்கேட்க அவர்கள் நீ கூலிகொடுக்கும்போது வராமையால் செட்டியார் உட்கட்டில் கூலியளந்து போட்டுப்போனார் நீபோயெடுத்துக்கொள்ளென்றுசொல்ல அந்தப்புண்ணியவான் நம்முடையகூலியை வெளியேவைத்துப் போட்டுப்போகக் கூடாதாவென்று உள்ளே போனாள் முன்னே செட்டியார் சொல்லியிருந்தபடி அவ்விடத்திலிருந்தவூழியக்காரர்களெல்லாம் இரண்டாங்கட்டு வாசற்படிகடந்தபின்பு கதவைச்சாற்றினார்கள் அந்தசத்தங் கேட்டவுடனே ஜெயப்பிரதை அவ்விடத்திலொருவரையுங் காணாமையாலந்த அறையின்வீட்டுக்கதவையடைத்துக்கொண்டு இதேதோகபட மார்க்கமாயிருக்கின்றது நாமே தனியேவந்து மோசம்போனோம் வெளியேயில்லாமலறைவீட்டிலேயேன் புகுந்தோம் நம்முடைய வினையின் செயலென்று சக்கிரவர்த்தியையும் பிள்ளைகளையும்வெறுக்கி நாமும் அறைவீட்டிலே [illegible] பட்டுக்கொள்ளும்படி நேரிட்டபடியால் இனிநாமென்ன செய்வோ[illegible] மென்று தன்னுடையபத்தாவை நினைத்துக்கொண்டந்த [illegible]

டைப் பார்க்குமிடத்தில் ஒருபேழை பூட்டில்லாமலிருக்க அப்பேழையைக்கண்டு சீக்கிரமாயதிலேபுகுந்து மூடிக்கொண்டு இந்தப்பேழையை என்பத்தாவந்துதீண்டினகாலத்தில் திறக்கவுமற்றப்படி நீரிலேபோட்டாலும் அக்கினியிலேபோட்டாலும் ஆயுதங்களினாலேவெட்டினாலும் ஓர்சலனமில்லாமலிருக்கும்படி தன்பத்தாவையே தியானித்துக்கொண்டு நானுண்மையாக என்நாயகனுக்கோர் குறைவில்லாமல் நடந்துவந்தது மெய்யாகில் நான்சொன்னசபதத்துக்கு ஓர்குறைவில்லாமல் நடக்கவேணுமென்று நினைந்துமறுபடியும் நான்பத்தாவைக்காண்கிறவரைக்கும் ஆகாரம் நித்திரைபசியில்லாமலிருக்கவேணுமென்று சபதமிட்டுப் பேழையை மூடிக்கொண்டாள்.

நவகோடி நாராயணசெட்டியார்வந்து தன்வூழியக்காரனையழைத்துக் கணக்கப்பிள்ளை பெண்சாதி வந்தவுடனே இரண்டாங் கட்டுக் கதவைச் சாத்தும்படி சொல்லியிருந்தேனே யவளெங்கே யிருக்கிறாளென்று கேட்க ஐயா அந்த அறைவீட்டிலே தானே போனாள் அவள்போய் நுழைந்தபிறகு அந்தக்கட்டுக் கதவைச் சாற்றிப் பின்றங்கிவிபோட்டுக் கொண்டோம் அவளைத் திரும்பிக் காணோமையா வென்றார்கள் செட்டியாருட் அவளெங்கே போவாள் நமது அறைவீட்டைப் பாருங்களென்றார் அவ்விடத்திலேயுங் காணாமையால் அந்த வீட்டிலிருக்கிற பேழையைப்பார்க்க இதென்னபுதுமையா யிருக்கின்றது பூட்டுமில்லாமல் திறவுகோலுமில்லாமல் திறந்துகிடந்த இந்தப்பேழை திறக்கப்படவில்லையென்றார்கள்.

இவ்விடத்தில்வந்தவள் திறக்கப்படாமலிருக்க என்னவுபாயஞ் செய்தாளோவென்று கோடாலியைக்கொண்டு பிளந்து பாருங்களென்றார் அவர்களப்படியே கோடாலியாலே வெட்டக் கோடாலிவாய் மடிந்ததேயல்லாமல் பேழையின்பேரிலே கோடாலித்தழும்பு படாமலிருக்க அதைச்செட்டியார் பார்த்து இதென்னகாரணமென்று நானாவிதமான தந்திர உபாயங்கள்செய்து பார்க்க அதனாலப்பேழையைத் திறக்க சக்தியற்றவனாய் என்னவுபாயஞ்செய்வோம் கணக்கப்பிள்ளையானவன் தேடிவருவானவன் வருகிறதற்குமுன்னமே அந்தவீட்டை நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டால் தேடிவந்தபேருக்குக் கூலிக்காக அந்த அறைவீட்டிற் போனவளிறந்தாளென்று சொல்லுவோமென்று யோசித்து அந்தவீட்டைக்கொளுத்தஅந்தவீடும்வெந்துபேழைமாத்திரம் வேகாமலிருக்க இதுவரையில் ஒருவருந் தேடிவரவி[illegible]யே ஆகையாலினி என்னதந்திரஞ் செய்வோமென்று பேழை

யையெடுத்து வரசொல்லிப்பார்க்க முன்னிருந்த மாசுதீர்ந்து முன்னிலும் பிரகாசமாக இருப்பதைக்கண்டு செட்டியானவன் மிகவும்பயந்து கைகால் நடுக்கமுற்று வாய்வறண்டு நாவுலர்ந்து ஒன்று நினைக்க ஒன்றுமுடிந்ததே இனியென்ன செய்வோமிந்தப் பேழையிலே அவசியமிருக்கிறாள்.

இந்த இராசசிம்மாசனத்திலிருக்கிற ராசன கேள்விப்பட்டால் ஆக்கினைசெய்வான் இந்தாவிலே வீட்டைப் போக்கடித்ததுமல்லாமல் பொருளும் சேதப்பட்டுப்போய் பொல்லாத காலமாயிருக்கிறதென்று இப்பேழைக்குக் கருங்கல்லைக் கட்டிசமுத்திரத்திலே போட்டால் ஓர் விலங்கமில்லையென்று நினைத்துக்கொண்டு அந்தமானென்கிறதீவுக்குப் பிரயாணமாகவிருக்கிற கப்பலிலே பேழையையேற்றித் தானுங்கப்பலிலேறிப்போய் வெகுதூரஞ்சென்று அந்தப் பேழையைக் கப்பலைவிட்டுத் தண்ணீரிலே போடுகிறதற்கு எடுக்கும்போது ஓ-ஓ செட்டியாரே பணம்சமுத்திரத்திலே போடுகிறீர் போட்டாலும் மை விடப்போகிறதில்லை உனக்கொரு சேதமுண்டு அதுமுடிவதற்கு வழுவாவருஷஞ்செல்லும் அது தெரியாமல் பொல்லாத நினைப்பு நினைத்தீர் நோன்புமுடிகிறவரையில் ஒருவர் முகம்பார்க்கவொண்ணாது ஆகையாலப்படிபிரதிக்கினை செய்துகொண்டேன் நோன்புமுடிந்த காலத்திலே பேழை தானே திறக்குமென்று ஜெயப்பிரதைசொல்லவே அதைப்பருந்தவகோடி நாராயணசெட்டியார் நோன்புமுடிய வெகுநாட்செல்லுமவளுயிருடனிருந்தால் பார்த்துக்கொள்ளுவோம் இல்லாவிட்டால் சமுத்திரத்திலே போட்டுவிடுவோமென்று தன்மனதைத்தானே ஒருவாறாகத்திடப்படுத்திக்கொண்டு அந்தமானென்கிற தீவுக்குப்போய்க் கப்பலைவிட்டிறங்கி அக்கரைசேர்ந்து கனகசபத்திலொரு உப்பரிகைகட்டி அதிலே பேழையை வைத்துக்கொண்டு மிகசாக்கிரதையோடு நித்தியமந்தப் பேழையினிடத்தில்வந்து சுவாசமுண்டாயிருக்கிறது மில்லாததும் பார்த்துக்கொண்டு தன்னுடைய சொந்தவர்த்தகத்தைச்செய்துகொண்டிருந்தனென்று ஸ்ரீவேதவியாசர் சொல்லத் தருமராஜன் அந்தப்புரூரவச்சக்கிரவர்த்தியும் பிள்ளைகளுமெவ்வாறாகப்போனார்களென்று கேட்க வேதவியாசர் சொல்லுகிறார் வாராய்குருகுலோத்தமனே புரூரவச்சக்கிரவர்த்தியாகிய கணக்கப்பிள்ளை தன்பிள்ளையைப் பாதுகாத்துக்கொண்டு அந்தக்குடிசையிலிருக்கிற வேளையில் கணக்கப்பிள்ளையினுடைய இடதுபக்கத்துக் கண்கள் துடித்த[illegible] தாக்குணத்தைக் கண்டு இதென்ன விபரீதமாக விருக்கின்ற[illegible]

குறள். "ஊழிற்பெருவலி யாவுளமற்றொன்று
சூழினுந்தானமுந் துறும"

என்று தியானித்துக்கொண்டு நம்முடைய நாடுஇராச்சிய முதலானதும்விட்டு இவிடத்தில்வந்து கூலியாளருக் காளானதும போதாமலினைறைக்கு இத்தகைதுறகுணங் கண்டதினாலே என்னவிபரீதம் விளையப்போகுதோ கூலிவாங்கப் போனவளின்னம் வரவில்லையே நம்மையொரு கூமைப்போதாகிலும் விட்டுப்பிரியாதவள் ஒருஜாமமட்டும் வாராமலிருக்கிறது நம்மைச சூழ்ந்தவினையென்று எண்ணிக்கொண்டு செட்டியார் வீட்டுக்குப்போய் விசாரித்து வருவோமென்று இரண்டு குழந்தைகளையு மிரண்டுதோளி லெடுத்துக்கொண்டு செட்டியார் வீட்டிற்குவந்து அவ்விடத்திலே காவலாக நிற்கின்றபேரைக் கேட்குமிடத்தி லவர்கள் உம்முடைய பெண்சாதிவந்து கூலிகேட்டதற்கு நாங்கள் கொடாமையால் செட்டியார் உன்கூலியைமாத்திரம உடகட்டில் போட்டுவைத் திருக்கிறார் அதையெடுத்துக் கொள்ளென்று சொன்னோம் அவளுமப்படியே இரண்டாங்கட்டிற்குப் போனாள் வீடுதீப்பட்டு வெந்துபோச்சுது அந்தவீட்டில் அவளைக்காணோம் செட்டியார்வீடு வெந்துபோச்சுதென்று வியாகூலப்பட்டுக்கொண்டு அந்தமானென்கிற தீவுக்குப்போய்விட்டார் இதுதான் நாங்களறிந்தது என்றார்கள் கலைக்கப்பிள்ளையாகிய சக்கிரவர்த்தியுந் திகைத்து ஐயையோ இக்குழந்தைகளை யெடுத்துக்கொண்டு போகாமற் போய்விட்டாளே நானெப்படி காப்பாற்றப் போகிறேன் சிவசிவா இதற்கோ நான் சரீரமெடுத்தது.

வெண்பா. "இல்லாளகத்திருக்க யில்லாததொன்றில்லை
இல்லாளுமில்லாளே யாமாகில்-இல்லாள்
வலிகிடந்தமாற்ற முரைக்குமோவவ்வில்
புலிகிடந்ததூறாய் விடும்"

என்று பெரியோர்கள் சொன்னது பொய்யோ இந்தக் குழந்தைகளினுடைய வருத்தத்தாலிறக்கவும் முடியாதென்று மனங்கலங்கி பெண்சாதியையிழந்து வாழ்கிறதிலும பெருகிவருகிற ஆற்றிலே விழுகிறது நலமென்று கருதிக்கொண்டு ஒருமனதாய் அவ்விடம்விட்டு விழுந்தவிடம் சுடுகாடென்று ஒருகாட்டுவழியே நடந்துபோனார்.

அப்போது சனீஸ்வரபகவான் பிள்ளைகளைப் பிரிக்கவேண்டுமென்று நினைத்து மின்னலுமிருட்டுமாக யுகாந்தகாலம்போலே வருஷமல்ல பெய்து எங்கும் வெள்ளப்பிரவாகமாய் ஒரு காட்டாறுவரக்கண்டு சக்கிரவர்த்தி இருந்து இருந்து வருத்தப்படுகிறதிலு மிந்த

ஆற்றில் விழுந்து இறப்பதே நலமென்று மிகுதியுங் கிலேசப்பட்டுப் பிள்ளைகளாலே மனதைத் தேற்றிக்கொண்டு ஒரு செடியருகேபோய் ஒரு குழந்தையைக் கொடியினால் கட்டிப்போட்டுமற்றொருகுழந்தையை எடுத்துக்கொண்டு ஆற்றை நீந்தி அக்கரையேறி அந்தக்குழந்தையை அங்கொருசெடியருகே கொடியினாலே கட்டிவைத்து இந்தக் கரையிலிருக்கிற குழந்தையை யெடுக்கவருகிறபோது ஆற்றுச்சலம் பெருக்கெடுத்து அரசனையடித்துக்கொண்டு போகிறபோது ஆற்றில் மிதந்துவருகிற சட்டையைப் பற்றிக்கொண்டு நானென்னசெய்யப் போகிறேனிந்த வனத்திலிருக்கின்ற தேவதைகள்தானென் குழந்தைகளைக் காப்பாற்றவேண்டியது என்னைச்சூழ்ந்த வினையானது என் குழந்தைகளையும் ஒரு கரையிற்சேர்க்கவொட்டாமற் செய்துவிட்டது சகீஸ்வரன் மாய்கையென்று மகாதுயரத்துடன்சிவசிவாகயிலாசவாச பார்வதிசமேதா காலகண்டதிரிநேத்திரா பக்தவச்சலா வைகுண்டவாசா அகிலாதாரயனே என்பிள்ளைகள் உங்களடைக்கலமென்று வேண்டிக்கொண்டு ஆற்றிலே மிதந்துபோகையில் செய்தலமென்கிற பட்டணத்து இடையர் கண்டு ஆரோ ஒருவன் ஆற்றிலே மிதந்துபோகிறான் இடையரே வாருங்களென்று தொடர்ந்து போகும்போது அருகாமையாய் வருகிறதைப்பார்த்து உயிருடனிருக்கிறானென்று தங்கள் கையிலிருக்கிற துறட்டுக்கோலைப் பிடித்துக்கொண்டு கரையில்வர அவனுக்கு நடுக்கல் தீரும்படியாய் அக்கினியைப் போட்டுத் தெளியச்செய்து அவனைப்பார்த்து நீ யாரென்றுகேட்கக் கணக்கப்பிள்ளையாகிய சக்கிரவாத்தி சொல்லுகிறார்.

நானொரு இடையனுக்கு ஆடுமேய்த்துக்கொண்டிருந்தேனதிலே ஆடுங்குட்டியும் பிரிந்துபோச்சுது அதைத்தேடிவருகிறவழியிலே ஆற்றுவெள்ளத்திலகப்பட்டேனென்று கூற இடையருமிவன் நல்லவனென் றுணர்ந்து அருகே வைத்துக்கொண்டு உன்பெயரென்னவென்றுகேட்க என்பெயா ஆனாந்தக்கோனனென்றான் இடையரும்மகா சந்தோஷப்பட்டு ஆற்றிலேபோகிற உன்னையெடுத்துவிட்டோம் எங்களுக்கு ஆடாவது குட்டியாவது மேயத்தால் வயிற்றுக் கன்னங்கொடுக்கிறோ முனக்குச்சம்மதியா வென்றுகேட்டார்கள் நல்லதென்று சம்மதிக்க அவர்கள் ஒரு கம்பிளியுங் கொடுத்துத் தங்களுக்கு வந்த அன்னத்தில் கொஞ்சம் பகுந்து அப்பா நீ ஆட்டின்பிறகே திரியமாட்டாய் குட்டிகளை மேய்த்துக்கொண்டுவந்து தொழுவத்திலடைத்து அருகே சயனித்துக்கொண்டிரு வென்றுகூற அப்படியே நல்லதென்று குட்டிகளை மேய்த்துக்கொண்டு இடையர் கொடுத்த அன்னத்தைப் புசித்து,

குறள். காலங்கருதி யிருப்பர்கலங்காது
ஞாலங்கருது பவர்.

என்பதுணர்ந்து இதுவுங் கர்த்தாவின் செயலென்று இருந்தார்.

அது நிற்க ஆற்றின்கரையில் கட்டியிருந்த குழந்தைகளை ஓர் இடைச்சி தயிர்விற்பனை செய்துவிட்டு அவள் வீட்டிற்குப்போகும் போது செடியருகே ஒரு குழந்தையழுகிற சத்தங்கேட்ட மாத்திரத்தில் அவள் புத்திரபாக்கியமில்லாதவளாகையால் புத்திராபேக்ஷையாலந்தப் பிள்ளையைக் கண்டவுடனே எடுத்துக்கொண்டு ஒருவருங் காணுமற் போகவேண்டுமென்று குழந்தையையெடுக்க அக்குழந்தையை கொடியிலே கட்டியிருப்பதைக் கண்டு இந்த குழந்தைக்குத் தாய்தகப்பன் செடியினருகே கட்டிவைத்துப் போனார்களோவென்று சுற்றிலும்பார்க்க ஒருவரையுங் காணுமையால் நாம் எடுத்துக்கொண்டுபோய் வைத்திருந்தால் தேடிவந்தவர்களுக்கு கொடுப்போமென்று ஓர் பனதாய்க் கொடியையறுத்து அக்குழந்தையைத் தயிர்ப்பானையில் வைத்துக்கொண்டு ஆறுகடந்து அக்கரை போய் அங்கிருந்தகுழந்தையையுமெடுத்துக்கொண்டு இதுவும்தெய்வச்செயலென்று பேரானந்தத்தை யடைந்து அக்குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு இரண்டு குழந்தைகளுக்கும் நானுவிதமாகப் பிரியவசனங்களால் தேறுதலை சொல்லித் தானிருக்கிற இடத்திற்குக் கொண்டுவந்து அந்தக்குழந்தைகளுக்கு ஸ்நானஞ்செய்வித்துத் திருநீறுமிட்டுக் கலத்திலன்னமிட்டுப் பசுவின்பாலைவார்த்துப் பிசைந்து அமுதூட்டி வாயைச்சுத்திபண்ணி அக்குழந்தைகளைச் சயனிக்கச்செய்து தானும் அருகே சயனித்திருந்தாள் மறுநாட்காலையில் அக்குழந்தைகளை யாராகிலும் பார்க்கப் போகிறார்களென்று அறைவீட்டில் வைத்துத் தானுமவர்களைவிட்டுப் பிரியாமல்வளர்த்துக்கொண்டு வருகையிலக்குழந்தைகளுக்கு ஐந்துவயதானபின்பு இடைச்சி யக்குழந்தைகள் கையில் கோலைக்கொடுத்து மாடுகன்னு ஆடுமேய்க்கச் சொல்லியனுப்ப அந்தப்பிள்ளைகள் கோல்களைவீசியெறிந்துவிட்டு தங்களுக்குள் தாங்களே ஒருகொடுவாளாலே சிறுகோல்களாகவெட்டிகையிற்பிடித்துக்கொண்டு இதுவில்லென்றுமம்பென்றும் ஆயுதங்களென்றும் ஒருவர்க்கொருவ ரதுவேவிளையாட்டாகவிளையாடிவருகிறதை இடைச்சிகண்டு இவர்கள் இராஜகுமாரர்களென்று பதித்து அக்குழந்தைகளைச் சிலம்பத்துக்குவிடவேணுமென்று நினைத்து ஒருஆசாரியனைத்தேடிஅதற்குச்செய்யவேட்டிய கிரியைகளுஞ்செய்து அப்பிள்ளைகள்சிலம்பத் தொழில்முதலான ஆயுதபரிட்சைகளும்குதிரையேற்றமும் இன்னம்அநேகவிதமானவித்தைகளும் கற்றுக்கல்வியிற்

றந்தவர்களாகவும் தங்களுக்குத்தாங்களே சமானமென்று ஓர் அரசனைப்போல இடைச்சிவீட்டில் இரண்டுபிள்ளைகளும்வளர்ந்துகொண்டு வருகிறார்கள்

அவர்களப்படியிருக்க செய்தவபுரமென்கிற பட்டணத்தில்செய்தவனென்கிற அரசனிராச்சிய பரிபாலனஞ்செய்துகொண்டு வருகிற காலத்தில் சநீஸ்வரபகவான் ஒருகன்னமிடுகிறவனைப்போலவேடம் பூண்டுகருங்கச்சையிடுப்பில் கட்டிக்கொண்டு அனேகங்கன்னமிடுகிறவர்களைச்சேர்த்துக் கன்னமிடுகிறவர்களுக்குப்பெரியவனென்றுபெயர்வகித்துக்கொண்டு செய்தவபுரமென்கிற பட்டணத்திற்குவந்திடையனாகியபுரூரவச்சக்கிரவர்த்தியைத் திருடனாகச் செய்யவேணுமென்று நினைத்துச்சநீஸ்வரன் சமயம்பார்த்துக்கொண்டிருக்கிறசமயத்திலொருநாள் இடையன் வீட்டிலிருக்கிற புரூரவச்சக்கிரவர்த்தியாட்டுக்குட்டியின் சமீபத்தில் நித்திரைசெய்திருந்தார் காலையிலெழுந்திருந்து ஸ்நானஞ்செய்து நியமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு அன்னம்புசித்துப்பின்பு ஆட்டுக்குட்டிகளைக்காட்டிற்கொண்டுபோய் மேய்த்துக்கொண்டிருக்கையிலவ்வனத்தில் வாசஞ்செய்கின்ற அன்னப்பட்சிகளையும் மயில்களையும் பார்த்து நீங்களினம்பிரிந்தவர்களைக்கண்ணிலேபார்க்கவொண்ணாதோவென மனந்துயரைச்சொல்லிக்கொண்டு ஆட்டுக்குட்டிகளை ஓட்டிவந்து தொழுவத்திலடைத்துவிட்டு அனுஷ்டானத்தைமுடித்துக்கொண்டிடையன் கொடுத்த அன்னத்தைப்புசித்துப் பின்பு ஆட்டுக்கடாவினருகே நித்திரைசெய்யவேணுமென்று கச்சங்கத்தைக்கட்டிப்போட்டு சயனித்துக்கொள்ளப்போகச்சே அவிடத்தில் ஒருகௌளிசொல்ல அதனைச்சக்கிரவர்த்தியாகிய இடையன்கேட்டு இன்றையதினம் நமக்குப்பெரிதாகிய இக்கட்டுவருமென்று சொன்னபடியால் நம்முடையநாடு இராச்சியமுதலானதுகளையும் பெண்சாதிபிள்ளையுமிழந்து ஆட்டுக்குட்டியை மேய்த்துக்கொண்டு அரையில்கட்ட வஸ்திரமில்லாமலிருக்கிற என்னை என்னசெய்யப்போகிறது செய்கிறதெல்லாம் கண்ணாலேபார்ப்போமென்றுநினைத்துக்கொண்டு.

குறள்.

"எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்."

என்று சொன்னதுபோலே இனப்பகையினத்தேடுபேறிற்றும் வினைப்பகையனுபவித்துத்தான் தீரவேண்டுமென்னவிருத்துவெந்தபோதிலும் நாமேயனுபவிக்க வேணுமென்று சிந்தித்துக்கொண்டு நித்திரைபோகச்சே அன்றையதினம் இராத்திரிகன்னக்காரனாகிய சநீஸ்

வரபகவான் செய்தவனென்கிறவரசன் அரண்மனைக்குட்சென்று அர
சன் பெண்சாதியாகிய திலர்த்தவதியாள் நித்திரைபண்ணுகிற அந்த
ப்புரத்திக்குப்போயவளுடைய இரத்தினுபரணங்கள் வைத்திருக்கிற
அபரஞ்சிப்பெட்டியை யெடுத்துக்கொண்டு போகும்போது அரசன்
தேவி நித்திரைதெளிந்து அரவத்தைக்கண்டு தன்னுபரணப் பெட்
டியைப் பார்க்குமிடத்தில் காணமையாலுடனே யரசனுக்குத்தெரிவி
க்க அரசன்நகரத்துக்குக் காவலாகவிருக்கிற பேயரையழைத்து நம்
முடைய அரண்மனையிலே இரத்தினபூஷணப் பெட்டியைக் கன்னக்
காரர்களெடுத்துக்கொண்டு போனார்களாகையால் அதைக்கொண்டு
போன திருடனை இப்போது கொண்டுவந்தாலாச்சுது இல்லாவிட்டா
லுங்களுக்கு தக்கினைநேரிடுமென்று அக்கியாபிக்க உடனேகாவற்கா
ரர்கள் தீவட்டியைப் பிடித்துக்கொண்டு திருடன்போனவழி தொடர
கன்னக்காரர்கள் பேழையைப் போட்டுவிட்டாலும காவற்காரர்கள்
நம்மை விடார்களென்று நினைந்து அட்டுக்குட்டியினருகே நித்திரை
செய்கிற சக்கிரவர்த்தியாகிய இடையனருகில் வைத்துப்போட்டுக் கன்
னக்காரர்கள் மறைந்துவிட்டார்கள் பின்தொடர்ந்துவந்த காவற்கா
ரருமடியைவிடாமல் தொடர்ந்துபோகையில் சூரியனுதயமாகிறசமை
யத்தில் அட்டுக்குட்டியினருகே சூரியப்பிரகாசத்தைப்போற் பிரகா
சித்துக்கொண்டிருக்கிற இரத்தினபூஷணப் பெட்டியைக்கண்டு நடக்
கசக்கியற்றவனைப் பெட்டியையருகே வைத்துக்கொண்டு நித்திரை
செய்கிறவனைப்போலவிருக்கிறானென்றுசமீபத்தில்வந்தெழுப்ப அரச
ன்திடுக்கென்றுவிழித்துக்கொண்டுதிகைத்தாப்போல்நின்றானப்போ
து காவற்காரர்களிவன்தான் திருடனென்று கட்டி அப்பேழையை
யெடுத்துக்கொண்டு நகரத்திற்குவரும்போது வேடிக்கையாய்ப் பார்
ப்பவர்களிவன் திருடனல்ல இவனைப்பார்த்தாலரசனைப்போலிருக்கிறா
ன் இக்தருணத்தில் பரதேசிகாவற் செட்டியாருமில்லை யென்பாரும்
அவர்முன்னொருதிருடனை அக்கினைசெய்ய வொட்டாமல் விடுவித்தா
ரென்பாரும் செட்டியாரிவனைக்கண்டாலாக்கினைபண்ணமல் செய்வி
ப்பாரென்பாரும் அவருமூரிலில்லை யென்பாரும் அதுவும் இவன்பண்
ணின புசாபலமென்பாரும் வேறொருவிடத்துக் களவுமல்லவே அர
சன்தேவியிருக்கிற அந்தப்புரத்திற்குப்போய்க்கன்னமிட்டவனுக்கும
ன்னிப்புண்டோ வென்பாரும் இப்படிப்பட்டவன் முகத்தில்விழிக்க
க்கூடாதென்பாரும் இப்படிதிருடினவனைக் கண்டதில்லை யென்பாரு
ம் கோட்டைகடந்தரண்மனைக்குள்ளேபுகுந்து சித்திரமாளிகையிலி
ருந்த ஆபரணப்பேழையை யெடுத்தவன் கன்னக்காரர்களுக்கெல்லாம்
பெரியவனென்பாரும் இவனையரசனென்ன செய்வாரோவென்பாரு

ம் இவனைப்பார்த்தால் ஸ்திரிகள்மயங்கி யிவன் மன்மதனோ வென்பா
ரும் இப்படிப்பட்டபுருஷனைக் கண்டதில்லையென்பாரும வினைந்து
சூழ்ந்ததைப் பார்ப்பாரும இப்படியாகப் பட்டணத்தி லுண்டா
ன ஜெனங்களும் பலபலவிதமா யவரவர்களுக்குத் தோன்றினபடி சொல்
லுகின்ற வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு நம்முடைய வினையின்ப
யனிப்படி நடந்ததென்று மகாபரிசுத்தமான மனதுடனேவீதிவழி
யேபோகிறபோது காவற்காரர்கள் முன்னும்பின்னுமாக அரசசமுக
த்திற் கொண்டுபோக அத்தருணத்தில் மந்திரிகள் பிரதானிகள் பு
ரோகிதர்கள் வித்வசிரோமணிகள் மற்றுமுள்ளபரிசனங்கள் சூழ்ந்த
சிங்காதனத்தில் அரசன் பூர்ணசந்திரக்குடை நிழற்ற உபயவெண்சாமரம்
வீச அநேகபெண்கள் நடனம்பண்ணிக் கொலுசிங்காரம்பண்ணிக்
கொண்டிருக்கிற சமையத்தில் தூதரும்போய்ச் சுவாமி கட்டளையின்
படி திருடனைக்கொண்டுவந்தோ மென்றுசொல்ல அரசனு மவனைக்
கொண்டுவரும்படி கட்டளையிட அப்படியே யரசன்முன் கொண்டு
போய் விட்டனர்கள் அரசனிவனைப்பார்த்து இவனல்லோ நம்முடை
ய அந்தப்புரத்தில் திருடினவன் இவனுடனே கூடித் திருடினவர் ஆ
ராகிலுமுண்டோ அவர்களெல்லாமோடிப் போய்விட்டார்களோ இவனகப்படா
மல் அகப்பட்டுக்கொண்டானோ திருடுகிறதற்கு வல்லவன் அகப்பட
மாட்டான் நீங்கள்நம்முடைய ஆக்கினைக்குப்பயந்து ஒருவனைக்கொ
ண்டுபோயிந்தவேளைக்குத் தப்பித்துக் கொள்ளுவோமென்று இவனைப்பி
டித்துக்கொண்டு வந்தீர்களோ திருடனையொளித்துவைத்து ஏழைப
ரதேசிகளை நீங்கள் பிழைக்கும் பொருட்டு பிடித்துவந்தீர்களோ இ
வனைப்பார்க்கும்பட்சத்தில நம்மிலும் மகாசுந்தரமாகிய தேஜோவந்தியுட
னே யிருக்கிறான் அதுவுமல்லாமல் முடிதரித்த இராசாக்களுக்குண்
டாகிய லட்சணங்களுமிருக்கின்றது இவனுங்களுக் கென்னகுறைசெ
ய்தானோ அவனைத்திருடனென் றென்முன் கொண்டுவந்தீர்கள் இவ
னிருக்கிற லட்சணத்தைப் பார்த்தால் திருடனென்றுசொல்ல மனம்
வரவில்லை உள்ளபடிநடந்ததைச் சொல்லுங்க ளென்றரசன்கேட்கவே
வுகாரர்கள் சுவாமி அரண்மனைமனிதர்களும்கன்னமிட்ட வாசல்முதலா
கச்சோதித்துக்கொண்டு அடிகண்டுபிடித்து அடியின்பின்னே தொ
டர்ந்து போனோம்அடிமற்றொருவிடமும் பிசகாமல் தொடர்ந்துபோ
கும்போது சூரியவுதய மாகிறவேளையில் இவனொருச் சத்தியற்றவனா
ய்ப் பெட்டியைக்கம்பளியாலே மறைத்துக்கொண்டு இடையனைப்
போல ஆட்டுக்குட்டியருகே படுத்துக்கொண்டிருந்தான் நாங்கள்
போய்ப் பிடித்துக்கொண்டோ மென்றுசொல்லி ஆபரணமிருக்கிற
அபரஞ்சிப்பெட்டியை அரசன்முன்வைக்க அரசனும் திருடனைப்பார்த்

த்து அடாதிருடா நம்முடைய அரண்மனையில் கன்னமிட்டவன் நீதா னோ வேறேயுண்டா அனுமானமுண்டானால் சொல்லென்று கேட்கப் புரூரவச்சக்கிரவர்த்தியான திருடன்.

குறள். இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

என்று தியானித்துக்கொண்டு இனிநாம் திருடனல்லவென்றால் திருடனென்கிற வல்லமையும்போ யிழிவாகிய துன்பம் நேரிடுமென் றெண்ணிக்கொண்டு ஒருவனதாய் நான்திருடினவன் அங்கசாதனத் துடனே களவு அகப்பட்டிருக்கச் சந்தேகப்படுகிறதேது சந்தேகப்ப ட்டா லுமக்குத் தோன்றினபடிசெய்யுங்களென்றுசொல்லக் காவலா ளிகள் அரசன்முகத்தில் திருடினவனே திருடனென்று சொல்லக்கே ட்டு அரசன் சபையாரைப்பார்த்து இவனையறிந்தபேர்க ளுளராவென் றுகேட்க நாங்கள் ஒருவருமிவனை யறிந்திருக்க மாட்டோமென்று சொன்னார்கள் அரசன் மந்திரிகளையும் சாஸ்திர பண்டிதர்களையும் பார் த்து நம்முடையபேரில் நிந்தையான குற்றங்க ளுண்டாயிருந்தால் சொல்லுங்களென்று அரசன்கேட்க அங்கசாதனத்துடனே அகப்ப ட்டிருக்க அவனை ஆக்கினைசெய்கிறதற் கென்னயோசனையென்று அ வர்கள்சொல்ல அதற்கரசன் இவனுக்கென்ன ஆக்கினைவிதிப்பதுசொ ல்லுங்களென்றுகூற அதற்குச் சாஸ்திரிகள் தர்மசாஸ்திரப் பிரகாரம் சூத்திரர் ஆக்கினைசெய்ய வேண்டுமென்றார்கள் அரசனும் கொலையா ளரை யழைப்பித்துத் தன்கையிலிருக்கிற கணையாழிமோதிரத்தை ய வர்கள்கையிற்கொடுத்து இவனை ஒருகாலும் கையும் வாங்கிப்போடு ங்களென்று கட்டளையிட அக்கொலையாளிகள் அந்ததிருடனைப் பிடி த்துக்கட டிக்கொண்டு கொலைசெய்கிற விடத்திற் கொண்டுபோய் அ ஸ்தமிருக்கிறதருணத்தில் ஒருகாலையும் ஒருகையையும் துண்டித்துப் போட்டு அரச சமூகத்திற்குவந்து திருடனுக்கு ஆக்கியாபித்த பிர காரம்செய்துவிட்டோமென றுவிண்ணப்பஞ் செய்தனர்.

பின்பு இவிடத்தி லொருகாலும் கையுமிழந்த இடையனை பு ரூரவச் சக்கிரவர்த்தியானவர் சிவசிவாபார்வதிசமேதா திரிபுரதகனா மங்கைபாகா மனஇடை யவருத்தம் உமதுதிருவுளத்துக் கே பாங்கெ ன்று தன்பிள்ளைகளையும் பெண்சாதியையும் நினைத்துக்கொண்டு கவ லையாய்விழுந்து சிறிதுநேரஞ் சென்றுதெளிந்து.

"வைக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்கடாந்தலை வந்தக்கால்
நீக்கிநிறாஉமுரவோரே நல்லொழுக்கம்
காக்குந்திருவத் தவர்

என்று தியானித்துக்கொண்டு இன்னம்வருகிறதுன்பமெல்லாம்வரட்டும்இதுகளெல்லாம் ஆண்டவனது திருவிளையாட்டென்றுபஞ்சாட்சரத்தைச் செபித்துப் பின்பு சரஸ்வதியம்மனை நினைக்கச்சரஸ்வதியானவள் ஒருமுக்கறைச்சியைப்போல வடிவுகொண்டு கையில்எண்ணெயும் எலுமிச்சம்பழமுங் கொண்டுவந்து காயத்துக்கு ஒத்தடமிட்டுத் தான் கொண்டுவந்த தேவாமிர்தத்தை ஊட்டிவிட்டுப் பின்பவனைச்சயனிக்கச்செய்து தானுமருகேயிருக்கச் சரஸ்வதியம்மனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

குறள். நில்லாதவற்றை நிலையினவென்றுணரும்
புல்லறிவாண்மை கடை.

தாயே இன்னமும் உயிருடனிருந்து வாழவேண்டுமோ இந்த துன்பத்தினால் உயிர்போகாமற்போய்விட்டதே அம்மாநீர் ஆர் தெரியச் சொல்லவேண்டுமென்று கேட்டதற்கு நான்முன்செய்த தீவினையினால் முக்கறுபட்டவள் என்பேர்முக்கறைச்சி உம்மைப்போல ஆக்கினைக்குட்பட்டவரைக் காப்பாற்றுகிற கடமையாகையாலும்மிடத்திற்கு வந்தேனென்றுகூற சக்கிரவர்த்தியானவர் சரஸ்வதியென்றுணர்ந்து தாயே என்வேதனையைத் தீர்க்கும்படியால் நீயே சரஸ்வதியல்லாமல் வேறில்லையென்றுகூற சரஸ்வதியம்மன் என்னைப்பிள்ளையில்லாதவளென்று சொல்லுகிறதேயொழிய சகலருமென்பெயரைச்சொல்லிக்கொண்டு பிழையாததேயில்லை ஆகிலும்நீர் எனக்குப்புத்திரன்தான் வேறொன்றுக்கும் ஆலோசனைவேண்டியதில்லை உமக்குவேண்டியவற்றைக் கேளும் நானேகொண்டுவந்து கொடுக்கிறேனென்றாள் சக்கிரவர்த்தி சரஸ்வதியைப்பார்த்துத் தாயே ஆக்கினைப்பட்டவனென்கிற அபகீர்த்தியென்னைவந்து அடைந்தபோதே சீவன்போகாமலிருக்கலாமோவென்று கேட்டதற்குச் சரஸ்வதியானவள் வாரும்பிள்ளாய் விதிதப்பாது ஆதிபிரமனுக்கு மெத்தகுறையுண்டு தக்கன்தலையிழந்தான் சந்திரன்கலைகுறைந்தான் அக்கினிகையிழந்தான் ஆதித்தன பல்லிழந்தான் சுக்கிரன்கண்ணிழந்தான் சரஸ்வதிமூக்கிழந்தாளிப்படிப் பின்னப்பட்டிருந்தாலுமவர்களுக்குக்குறையுண்டோவென்றுசொல்லினள் சக்கிரவர்த்தி அதுகளைக்கேட்டு விசனப்படசரஸ்வதிவாராய் மகனே இத்தனையும் ஈசுவரபகவான் மாய்கையால் உன்காலும்கையும் வருகிறபோது தானேவரும் இன்னம் சிறிதுகாரணம் நடக்கப்போகிறது நீயொன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லையென்றுகட்டளையிடத்தாயே என்னுடைய அங்கம்பழுதானாலும் நான் சொன்னவாக்கு பழுதாகாமலும் சிவசிந்தனையும் லோகதரிசனமும் காலாகாலம் [illegible]ப்பவும்புத்தியும் தரவேண்டும் ஆதிசத்தியென்று தெண்டனிட்டான்

அதற்கு அப்படியே உண்டாகக்கடவதென்று வரங்கொடுத்து உனது காரியம் நிறைவேறுகிறபரியந்தம் உன்னைவிட்டுப் பிரியாமலிருப்பேன் நீயொன்றுக்குமஞ்ச வேண்டாமென்று சொல்லிவிட்டு அந்தரத்தானமானாள்.

அப்போது சூரியனுதயமானான் பின்புமுடவனாகிய புரூரவச்சக்கிரவர்த்திக்கு நோயானது எவ்விதமாகவிருந்ததென்றால் நித்திரை செய்தவன்கண்ட கனவுஎப்படியோ அப்படிபோலவும் சலத்திலமுழுந்திக்கிடந்தவன்கரையேறினாற்போலவும் ஆக்கினைப்பட்ட வருத்தமுமந்த வருத்தத்தை அர்த்தராத்திரியில் சரஸ்வதியம்மன்வந்து தீர்த்ததுவுமவர்க்கு வரங்கொடுத்ததுவுங் கனவுகண்டதுபோற் றோற்றிச்சுகமாகவிருந்தார்.

அப்படியிருக்க அந்தப்பட்டணத்திலுண்டான ஜனங்கள் நேற்றையதினம்திருடனென்று ஒருவனைப்பிடித்துக்கொண்டு போனார்களே அவனைப்பட்டணத்திற்குக் கிழக்கேஒருகாலும் ஒருகையும்வாங்கிவிட்டார்களே அவனெவ்விதமாக இருக்கிறானோ போய்ப்பார்த்துவருவோமென்று சிறிதுபேர் தாம்பூலங்கொண்டுபோவாரும் சிறிதுபேர் தாகத்துக்குக்கொண்டுபோவாரும் சிறிதுபேர் எண்ணெய் எலுமிச்சம்பழங் கொண்டுபோவாரும் சிறிதுபேர் இவன்நேற்றையதினம்ஆக்கினைப்பட்டவன் அலவென்பாரும் இவன்மற்றொருவனைப்போலிருக்கிறானென்பாரும் இவனைப்பார்த்தால் தேவனைப்போலிருக்குதென்பாரும் ஆக்கினைப்பட்ட விடத்திலே உதிரங்கள்சற்றாகிலும் காணோமென்பாரும் அநேகநாளைக்குமுன்னே கைகாலறுபட்டவன்போலே இருக்குதென்பாரும் ஓர் இராத்திரிக்குள்ளே அவன்வேதனையை எப்படிதீர்த்துக் கொண்டானென்பாரும் இந்தத்திருடன் சற்றாகிலுங் கிலேசப்படாமலிருக்கிறானென்பாரும் இப்படியாக ஜனங்கள் அவரவர்களுக்குத் தோன்றினபிரகாரம் பேசிக்கொண்டு நிற்கிறதருணத்தில் அந்தப்பட்டணத்திலிராநின்ற பரதேசிகாவல் செட்டியாரென்பவர் அவருடைய கப்பலிலொன்று தீவு தீவாந்தரங்கள் போய்த்திசைதப்பி இரண்டுவருஷங்காணாமல் நேற்றையத்தினம்வெகுதிரவியத்துடன் வந்ததென்று கேள்விப்பட்டவுடனே அக்கப்பலைப்போய்ப் பார்த்துவருவோமென்று போய்ப்பார்க்க மனதிற்கு வெகுசந்தோஷமுண்டாகித் தானதருமங்கள் செய்யவேண்டுமென்றுபட்டணத்திற்குவரும்போது செட்டியார் இந்தவார்த்தையைக்கேட்டுநேற்றையதினமடைந்த சந்தோஷத்தைப்பார்க்கிலும் இன்றையதினங்கேட்ட துயரமானது மலைபோலிருக்கிறது சிவசிவாவென்று மனத்துயரடைந்து தெய்வசங்கல்பமின்றையத்தினம் இத்துயரத்தைக் கேட்

கவே நேற்றையதினம் சந்தோஷத்தையுண்டாக்கிப் பிரிந்துபோ
ட்டதென்று செட்டியார் வியாகூலப் பட்டுக்கொண்டு தன்வீட்டு
க்குப் போகாமல் ஆக்கினைப்பட்டவ னருகேபோனார் அந்தத்தி
ருடனாகிய சக்கிரவர்த்தியைச் சூழ்ந்திருக்கின்ற ஜனங்களை செட்
டியார்கண்டு ஐயையோ பரதேசிகாவற் செட்டியாரே நேற்றைய
தினம் நீர்வரிசிருந்தா லிவனுக்கு இப்பேர்க்கொத்த ஆக்கினைவ
ராது இவனுடைய வினையானது உம்மையிந்த வூரைவிட்டுப் பிரி
த்துப்போட்டதென்று ஜனங்கள் யாவரும் தோத்திரஞ் செய்யப் பர
தேசிகாவல் செட்டியார் ஆக்கினைபட்ட திருடனிடத்திற்கு வந்து
மனத்துயரடைந்து என்னுடையகிரகசாரம் உம்மைக்காப்பாற்றவொ
ட்டாமல்நேற்றையதினம் ஓர்சந்தோஷத்தை யுண்டாக்கிப்பிரிந்துவிட்
டதென்றுமிருகியுங் கிலேசப்பட-ச்சக்கிரவர்த்தியாரும் செட்டியாரே
உம்முடைய தயவினாலே எனக்கொரு துன்பமுமில்லை ஆக்கினைபட்
டவருத்தமும் கனவுகண்டதுபோலே யிருக்கிறது உம்மைக்கண்டமா
த்திரத்தி லென் துன்பமெல்லாம் நீங்கிப்போச்சுதென்று சொல்லச்
செட்டியார் சக்கிரவர்த்தியைத் தமது தண்டிகையின் பேரில் வைத்து
க்கொண்டு தன்னுடைய அரண்மனைக்கு கொண்டுபோய் நவரத்தின
கசிதமாயிருக்கிற அம்சதூளிகா மஞ்சத்தின்பேரிலிருக்க வைத்துச்
செட்டியார் கீழேயிருந்துகொண்டு சக்கிரவர்த்தியைப்பார்த்துத் தே
வரீர் ஆர் இந்தவினைவந்த காரணமேதென்று வினவச் சக்கிரவர்த்தி
யும் நாம் வந்த வரலாறு இன்னம் சிலநாளைக்குப் பின்பு உமக்கே
தெரியவரும் இப்போது எனக்கு ஒன்றுந்தோன்றவில்லையென்தாயார்
இன்னேரம் வருவாள் அவள்தானே சொன்னால் சொல்லுவாளல்லாம
ல்வலியக்கேட்டால் சொல்லுகிறவளல்லவென்று சொல்லினன்.

செட்டியார் மூடனாகிய சக்கிரவர்த்தியினிடத்தில் செலவு பெ
ற்றுக்கொண்டு அமுதுபுசிக்கிறதற்குப் போயிருக்கிறவேளையில் சர
ஸ்வதி மூக்கறைச்சியைப்போல வடிவுகொண்டு ஒருபொற்றாம்பாளத்
திலே அறுசுவைபதார்த்தங்களோடு செட்டியார் வளவிலே கொண்டு
வந்துமூடனாகிய என் பிள்ளையிருக்கிறானென்று உள்ளே நுழைந்
துபார்க்கும்போது சக்கிரவர்த்தியாகிய மூடனைக் கண்டு மெத்தவு
மாவலோடு கொண்டுவந்த தேவாமிர்தத்தை யூட்டிக்கொண்டிருக்
கிற தருணத்தில் வந்து இந்தப் பட்டணத்தில் நம்மையறியாத பேரி
ல்லை நாமுமறியாதபேரில்லை இவளாரோ புதிதாயிருக்கிறாளிவளை யா
ரென்று கேட்போமென்று சமீபத்தில் தாயே நீர் யாரென்று வினவ
ச்சரஸ்வதி நான் தெய்வீகபுரம் இவர் ஆக்கினைப்பட்டாரென்று சேதி
யறிந்து என் புருஷனுத்தாரப்படி யிங்குவந்தேன் இவருக்குப் [illegible]

வந்தபோது கண்காணவருவேன் மற்ற காலத்தில் மறைவாகத்தானிருப்பேனென்று கூறச் செட்டியார் நல்லது தாயே தாங்கள் கொண்டுவந்த அமுதில் கொஞ்ச மடியேனுக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று கேட்கச் சரஸ்வதியுஞ் சம்மதித்தவளாய் அந்த அமுதில் கொஞ்சங் கொடுக்க அதைச் செட்டியார் அமுதம்போ லிருக்கிறது இதற்குச் சமானமான அன்னம் இவ்விடத்தில் கிடையாதென்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் சரஸ்வதியும் போய்விட்டாள் பின்பு சக்கிரவர்த்தியும் செட்டியாரும் வேதாகமபுராணசாஸ்திரங்களைப் பிரசங்கஞ்செய்துகொண்டு காலதேசவர்த்தமானங்களைப்பேசி பொழுதுபோக்கிக் கொண்டிருக்கிற வேளையில் ஒருநாள் உபரிஷரென்கிற மகாரிஷியானவர் செட்டியா வளவிலே சக்கிரவர்த்தியைப் பார்க்கவேண்டுமென்று வர அந்த மகாரிஷியைக் கண்டு மூடவணுகிய சக்கிரவர்த்தியும் செட்டியாரும் சாஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து நமஸ்காரம் பண்ண அந்தரிஷியானவர் அவர்களுக்கு ஆசீர்வாதஞ் செய்து ஆசனத்திலிருந்தனர்.

அப்போது சரஸ்வதியும சக்கிரவர்த்திக்குப் பசியாற்றவேண்டி மூக்கறைச்சிவேடம்பூண்டுவந்தனள் அவளைக்கண்டு திரிகாலங்களையுமறிந்த உபரிஷரென்கிற ரிஷி எழுந்திருந்து நமஸ்காரம்பண்ணி இரண்டு கைகளையுஞ் சிரசின்பேரில் வைத்துக்கொண்டு அம்மா சரஸ்வதிதேவி சகலருக்குந் தாயானவளே வேதாகம புராணங்களுக்கு முதன்மையானவளே கீதநாதப்பிரபந்த வித்தியாவினோதை சகலமந்திரரூபி அகண்டபரிபூரணி எல்லாருக்கு மெண்ணெய்போலெங்கும் வியாபித்திருக்கப்பட்டவளே அடியேனை இரட்சிக்க வேண்டுமென்று தோத்திரம் பண்ணும்போது மூடவணுகிய சக்கிரவர்த்தியும் செட்டியாரும் சரீரம்புளகாங்கிதமாய் ஆனந்தபரவசராய் தேவியை தோத்திரஞ்செய்து கூத்தாடி இரண்டுகைகளையுஞ் சிரசின்பேரில் வைத்துக்கொண்டு நின்றார்கள் அப்போது சரஸ்வதி மகாரிஷியைப்பார்த்து உட்காருமென்று கட்டளையிடப் பின்பு சக்கிரவர்த்தியும் செட்டியாரையும் உட்காருங்களென்று சொல்லி மூடவணுகிய சக்கிரவர்த்தியைப் பார்த்து ஆயாசமாயிருக்கிறது வமுதபானம் பண்ணுமென்று தன் கரத்தாலூட்டிவிட்டு அந்தரத்தானமானாள் அப்போது செட்டியார் அந்தரிஷியைப்பார்த்து இவர் ஆர் இவருக்கு அன்னங்கொடுத்து வருகிற மூக்கறைச்சியாகிய தேவதையார் அவருக்கிப்படி வந்தகாரணமேது சொல்லவேண்டுமென்று கேட்க மகாரிஷியானவர் வாரும்பரதேசி காவற்செட்டியாரே இப்போ இவருடைய சரித்திரம் வெளியாகமாட்டாது இன்னம் மூன்றுவருஷஞ் சென்றபின்பு இவருடைய பெண்சாதியும்

பிள்ளைகளும் கூடுவார்கள் சகல தேவர்களும் வந்து காட்சிகொடுப் பார்கள் அப்போது இவருடைய சரித்திரம் தெரியவரும் இப்போது நடந்துவருகிற காரணங்களெல்லாம் நடந்துவரு மிவரே சங்கீதவித் தையில் வல்லவ ரிவருக்குச் சமானவர்க ளொருவருமில்லை என்று சொல்லிவிட்டுச் செலவுபெற்றுக்கொண்டு சென்றனர்.

அப்படியிருக்க சிறிது நாளைக்குப்பின்பு உபரிஷனனவர் பிள்ளை களை வளர்க்கின்ற செங்கமலமென்கிற இடைச்சிவீட்டிற்கு வந்துபிள் ளைகளைக்கண் டிடைச்சியை யழைத்து இந்தப்பிள்ளைக ளிராஜகுமாரர் களாகவேண்டும் இவர்களுக் குபநயன வுபதேசமுதலாகியதுங் கற்பி க்கவேணுமென்று கூற அதுகேட் டிடைச்சி வெகு திரவியங்களைக் கொடுத்தாள் அந்த உபரிஷரென்கிற ரிஷியும் அந்தப்பிள்ளைகட்கா சாரியராக விருந்து நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்திநாலுகலை க்கியானம் மனுவிக்கியானம் முதலானதுகளுங் கற்பித்துவருங்கா லிராசகுமாரர்க ளாசாரியரைப்பார்த் திந்த மனுவிக்யான சாஸ்திர ப்படி நடந்தவர்களுண்டோவென்றுகேட்க உபரிஷன் சொல்லுகிறார் அரிச்சந்திரன்-நளன் - முசுகுந்தன்-புரூரவன்-கார்த்தவீரியன் - இரகு நாயகன் - இவர்கள்-மனுநீதிதவறாமல் செங்கோல்நடாத்தி பரகதிய டைந்தார்கள்.

அதில் புரூரவச்சக்கிரவர்த்தியென்றொரு சக்கிரவர்த்தி மனுமு றைசிறிதும்தவறாமல் செங்கோல்நடாத்திவருகையில் சனீஸ்வரபகவா ன்வந்து தன்னுடையகாலமென்றுசொல்ல அந்தவுறுதியினாலே நாடு இராச்சியமுமிழந்து பெண்சாதிபிள்ளைகளையுமிழந்து தானும்வேறாய் படாதபாடெல்லாம்பட்டு கையுங்காலுமிழந்து தியானம்விடாமல் யி ருக்கையில் சரஸ்வதிவந்து அவனைக் காப்பாற்றிக்கொண் டிருக்கிறா ளென்று சொன்னார் அதற்கு அந்தப்பிள்ளைகளுடைய கண்களிலிருந் து தாரைதாரையாய்க் கண்ணீரொழுக மயிர்க்குச்செறிந்து இந்தப்பு ரூரவச்சக்கிரவர்த்தியினுடைய சரித்திரத்தைக் கேட்கச் சோபமாகு தென்று மயங்கிவிழுந்தார்கள் விழுந்தகுமாரர்களை எடுத்தணைத்து அ வர்கள்தாபசோபத்தைத் தீர்த்து அவர்களைப்பார்த்து ரிஷிசொல்லுகி றார், இந்தச்சக்கிரவர்த்தி எப்போதும்போலே பெண்சாதி பிள்ளைக ளையுங்கூடி இராச்சியபரிபாலனஞ் செய்வாரென்று அந்தப்பிள்ளைகளு க்குத் தேறுதலைசொல்லி அவர்களிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அப்படியிருக்க உபரிஷனனவர் ஒருநாள் அந்தமானென்கிற தீ வுக்குப்போய் நவகோடிநாராயணனென்கிற செட்டியாரைக்கண்டு சீர்வாதம்பண்ணச் செட்டியாரும் ரிஷிக்கு நமஸ்காரஞ்செய்

ழையினருகாமையில் பொற்பீடமளித்திருக்கச்சொல்லிப் பின்புசுவாமி தேவரீர் எந்தவூர் எந்ததேசம் இங்குவந்தகாரணமேதென்று கேட்க, காம்பரதேசி நாம்லோகமாதியந்தமுந் திரிவோம் நமக்கொருபதியுண்டோவென்று கூறச்செட்டியாரானவர் நீங்கள் திரிந்து சஞ்சாரஞ்செய்துவந்த பட்டணத்தில் புதுமைகளேதாகிலுமுண்டோ சொல்லுங்களையாவென்றுகேட்டதற்கு, அந்தமகரிஷியானவர் நான்கண்ட பட்டணத்திலே புரூரவச்சக்கிரவர்த்தியினுடைய பட்டணம்போல பட்டணமில்லை அவரைப்போல தருமசிந்தையுள்ள சக்கிரவர்த்தியுமில்லை அவர்பட்ட அவதியைப்போல் ஒருவரும் பட்டதில்லையென்றார், செட்டியாரும் அவர்யார் அவருடைய சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்றுகேட்க, உபரிஷியானவர் சொல்லுகிறார்.

அந்தச் சக்கிரவர்த்தி சனியீஸ்வரனால் நாடு இராச்சியமு மிழந்து பெண்சாதிபிள்ளைகளுடனே வெளிப்பட்டுக் கூலியாளரிடத்திலே கணக்கெழுதிக்கொண் டிருக்கையில் பெண்சாதியை யிழந்து பிள்ளைகளையும் ஆற்றங்கரையிலேயிழந்து இடையருக்காளான காலத்திலே கள்ளனென்று காலுங்கையும் அறுப்புண்டு நொண்டியாகவிருக்கிறார் பிள்ளைகளையும் ஒரிடைச்சி வளர்த்துக்கொண்டு வருகிறாளென்று சொல்லிவிட்டுச் செட்டியாரிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டார். இதுகளையெல்லாம் பேழையிலிருந்த அரசன்மனைவிகேட்டுமெய்நடுங்கி ஐயை என்பத்தாவுக்குச்சரீரங்குறைவுபடநான்பார்ப்பேனோ இன்னமு முயிருடன்வாழ்வேனோ ஆனாலென்ன பழுதுபட்டதிருமேனியானாலும் உயிருடனே யிருக்கிறாரென்று கேட்டோம் நாம் உயிர்விடுகிறது தருமமல்ல இன்னஞ்சிலகாலத்திற்குப்பின்பு என்நாயகனைக்காண்பேனே யல்லது காணாமற் போகிறதில்லையென்று துயரத்தை ஒருவாறாகத் தேற்றிக்கொண்டாள். செட்டியார் அந்தரிஷிசொன்ன காரியங்களையெல்லாம்கேட்டோம்ஆகையினாலேஇனிநமக்கொரு ஐயமுமில்லை நம்முடைய தேசத்திற்குப் போகலாமென்று யோசனைபண்ணிக்கொண்டு தான்கொண்டுவந்த சரக்குகளைவிற்று மறுசரக்கேற்றிக்கப்பலேறிப் பாய்விரித்துநடக்கிற சமயத்தில்திசைதப்பித்தன்பட்டணஞ்சேராமல் தூரத்தில் ஒருதிட்டினருகில்வந்துசேர்ந்தது. அந்ததிட்டுக்கொருபக்கம் கடலும் ஒருபக்கம்மலையும் ஒருபக்கம் ஆறும் சூழ்ந்திருந்தது. அந்தத்திட்டில் கப்பலைவிட்டிறங்கி இதுநமக்கு வர்த்தகத்திற்குத்தகுதியான இடமென்று நிச்சயித்து அந்தத்தீவில் மேடுபள்ளங்களில்லாமல்திருத்தி ஒருஅரண்மனைகட்டி அதில்வர்த்தகஞ்செய்துகொண்டு சுகித்திருந்தார்.

கேளும் தருமநந்தனு அவர்களப்படியிருக்க இவ்விடத்தில் பரதேசியானவர்காவற்செட்டியார் வீட்டிலிருக்கிற புரூரவச்சக்கிரவர்த்தி ஒருநாள்சூரியனஸ்தமித்தபிறகு அவருடைய யெமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு வாணிபூசைசெய்து கையில் வீணையையெடுத்துக்கொண்டு சந்தோஷமாகச் சந்திரோதயவேளையில் தென்றல்வீச வெகுவிநோதமாக விரகாக்கினியினாலே மதனகீதமென்கிற கீதத்தைப் பாடிக்கொண்டிருக்கிற காலத்தில் தேவபுரத்தையாளுகின்ற செய்தவனென்கிற இராஜாவுக்குப் புத்திரனில்லாமையால் அநேகவிரதங்களையனுஷ்டித்துப் பலனில்லாமல் பின்பு சாம்பவமூர்த்தியாகிய பரமசிவத்தை நோக்கித்தவஞ்செய்து அத்தவத்தால் ஒருபெண்குழந்தை மகாசுந்தரமாகப்பெற்றான் அப்பெண்ணுக்குப் புட்பாஞ்சலியென்று நாமகரணமிட்டு மிகஅருமையிலும் அருமையாக வளர்த்துக்கொண்டுவந்து ஐந்தாம்வயதில்பள்ளியில்வைத்து ஆறுசாஸ்திரம் நாலுவேதம் அறுபத்துநாலுகலைக்கியானங்களிலும்சங்கீதசாகித்யத்திலும் இவளுக்கிணையாக ஒருவருமில்லையென்றுசொல்லக் கற்பித்து அப்பெண்ணுக்கோர் கன்னியாமாளிகையுமியற்றிசிலதாதியருடனே அந்தமாளிகையிலிருக்கவைத்தான் அப்பெண்ணை ஐம்பத்தாறுதேசத்து இராஜர்களும் விரும்பிக் கேட்டகாலத்தில் தேவதாபுரத்தையாளுகிற செய்தவனென்கிறராஜா யாதாமொருவர் சங்கீதத்தினாலே பட்டமரந்துளிர்க்கவும் கல்லுருகிவிழவும் அந்தரப்பட்சி வரவும் இப்படிப்பாடின பேருக்கென் குமாரத்தியாகிய புஷ்பாஞ்சலி மாலையிடுவாளென்று சொல்லினர்.

அப்படிப் பாடத்தக்கின பேரில்லாதபடியினாலே யரசர்களெல்லாம் வலிமையினாலே யாகிலும் இவன் கோட்டையை வளைத்து அந்தப் பெண்ணைக் கொண்டுபோவோமென்று தங்கள் தங்கள் ரஜகதுரகபதாதிகளோடு வந்து தண்டிறங்கி உயுத்தம்பண்ணி எதிர்நிற்கமாட்டாமல் முறிந்தோடிப்போனதைப் பார்த்துப் புஷ்பாஞ்சலி மிகுந்த வியாகூலத்தை யடைந்து இந்தப் பூமியினிடத்தில் தன்னுடைய சவுந்தரியத்திலும் சங்கீதத்திலும் தனக்கெண்மடங் கதிகமான புருஷன் கிடைப்பானோ வென்று சோதிடபண்டிதர்களை வரவழைத்துக்கேட்க அவர்களின்னம் சிறிதுநாளையிலிந்தப்பட்டணத்திலுன்னிலுமெண்மடங்கதிகமான சவுந்தரியமுள்ள புருஷன் இரவிலோர்கீதம் வாசிப்பான் அந்தக் கீதமானது உன்செவிக்கு விநோதமாகக் கேட்கும் அந்தக் கீதம்பாடினவனிடம் உன்மனம் பொருந்தும் அவனுக்கே நீ மாலையிடுவாயென்று சொல்லிப்போயினர்.

சோதிட சாஸ்திரிகள் சொன்ன சொற்கேட்டுப் புஷ்பாஞ்சலி இன்னம் எத்தனைகாலஞ் செல்லுமோவென்று தனது உப்பரி

மேடையின்பேரில் சயனித்துக்கொண்டிருக்கும் போது காமவிகார மேறிக்கொண்டு அருகிலிருக்கிற உயிர்த்தோழியைப் பார்த்து இந் நாள்வரைக்கு மிந்தக் காமவிகாரமென்கிற தெப்படியோ வறியேன் இன்றைக்கு ஏதோ காமவிகார மேற்கொண்டிருக்கிறதென்று சொல் லிக்கொண்டிருக்கிற சமயத்தில் ஓர் கீதநாதத்தினுடைய தொனி இவள் செவிக்குக் கேட்டமாத்திரத்தில் அவளணிந்திருக்கிற சுட்டி யிலிருந்த பச்சைக்கல்லானது உருகி விழுந்ததைக்கண்டு மெய்சோர் ந்து தெளிந்து இதுவரையில் இந்தக் கீதநாதம் பாடத்தக்கவர்கள் இந்த அரசாட்சி யெல்லையிற் காணோம் ஆகையால் தன்னருகிலிருக் கிற தோழி முகத்தைப் பார்த்து நீ இந்த சப்தத்தின் வழியேபோய் பார்த்துவரவேண்டுமென்று அனுப்ப அவள் நல்லதென்று நூலே ணிவழியா யிறங்கி வெளிப்பட்டுவந்து கீதநாதத்தினுடைய சப்தத் தைக் கேட்க இந்தச் சத்தமானது இந்தப் பட்டணத்தில் பாடுகிற சப்தந்தானென்று நிச்சயித்து இவ்விடத்தில் பாடுகிற தொனியென் று அவள் புத்திக்குத் தோன்றாமையால் பட்டணமெங்குந் தேடித் திகைத்து மயங்கி விழுந்தாள் அம்மயக்கந்தெளிந்து பின்பு அச்சப்த த்தின் வழியேசென்று பரதேசி காவற்செட்டியார் அரண்மனைக்குப் போய் இவ்விடத்திலே கீதம்பாடுகிற பேர்களாரென்று வினவ அவ் விடத்திலிருந்த பேர்கள் இராஜாவினரண்மனையிலே பொக்கிஷப்பெ ட்டி [illegible]னென்று கைகால் வாங்கிப் போட்டார்களே யவன் [illegible]கிறானென்று சொல்ல [illegible] காதுங் கையுமறுப்புண்டவ ன் ப[illegible]னென்று மிகுந்த கிலேசப்பட்டுக்கொண்டு இராஜாவின் குமாரத்தியாகிய புஷ்பாஞ்சலியினிடத்திற்கு வந்து இந்த சமாசாரத்தை தெரிவிக்க அவள் தாதியைப்பார்த்து அவனெப்படிப்பட்டவனாகிலும் அவனுக்கே நான் மாலையிடுவேனென்றும இல்லாவிட்டால் என் பிரா ணனை விடுவேனென்றாள் அதற்குத் தாதியானவள் எல்லாம் நாளைய தினம் சொல்லுகிறேன் பயப்படாதேயென்று தோழியானவள் சயித் திய உபசாரத்துடன் சொல்லிவிட்டுத்தாதி இவள் தலைவிதியோ முட வனுக்கு மாலையிடலாச்சுதென்று வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும போது இராஜகுமாரத்தி காமவிகாரத்தினால் அன்னம் புசிக்காமல் படுக்கையும் பொருந்தாமல் அதிகவிரகாக்கினியினால் மெய்வெதும்பி ப்பசலைபூத்தாச சரீரம் வெளுத்து ஆபரணங்களும் சுகந்தாதிகளுமறந் திருக்கிறதைப் பாங்கியர்கள் கண்டு இராஜாவின் தேவியான திலக வதியாளிடத்திற்கு வந்து புஷ்பாஞ்சலியினுடைய விரகதாபத்தை தாதியர்கள் சொல்லக்கேட்டுக் மனவருத்தமுற்றுத் திலகவதியாள் இராஜாவின் சமீபத்திற்குப்போய்த் தன் குமாரத்தி புஷ்பாஞ்சலியி

னுடைய சவிஸ்தாரங்களையெல்லாந் தெரிவிக்க அரசன் அவரவர்களுக்குக் காலம் வந்தால் தடைபண்ணக்கூடுமோ கூடாது அதற்கேற்பப்படி ஆலோசனை செய்யவேண்டுமோ அப்படிச் செய்கிறேனென்று சொல்லிவிட்டுப் பின்பு தன் கொலுமண்டபத்திற்கு வந்து மந்திரி பிரதானிகள் புரோகிதர்கள் இவர்களை யழைப்பித்து இந்தவசந்தகாலத்தில் என் குமாரத்தியாகிய புஷ்பாஞ்சலிக்கு விவாக முகூர்த்தஞ் செய்யவேண்டும் அதற்குப் பொருந்தின திதி-வாரம்-யோகம்-கரண நக்ஷத்திரம் இதுகளைப்பார்த்து முகூர்த்தநாள் ஒன்று நிச்சயப்படுத்துங்களென்று கட்டளையிட்டார்.

அப்படியே அவர்கள் சோதிட சாஸ்திரங்களையெல்லாம் பரிசோதித்து ஓர் முகூர்த்தநாள் நிச்சயித்து இந்த சுப முகூர்த்தத்தில் விவாகம நடக்கவேண்டியதென்று அரசனுக்குச் சொல்லினர் அரசன் மிகவுஞ் சந்தோஷப்பட்டு மந்திரியைப்பார்த்து தேவபுரத்தையாளுகின்ற செய்தவமகாராஜன் குமாரத்தியாகிய புஷ்பாஞ்சலிக்குச் சுயம்வரமநாட்டி யிருப்பதால ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும் வரவேண்டுமென்று திருமுகமெழுதித தூதுவாகையில் கொடுத்தனுப்புங்களென்று கட்டளையிட்டான்.

அப்படியே மந்திரியானவர் தூதுவாகையில் திருமுகமெழுதி யனுப்ப அத்திருமுகத்தைப் பார்த்த அரசர்கள் தங்கள் தங்கள் இரதகஜ துரகபதாதிகளோடு வருகிறதை அரசன் கண்டு அவர்களை எதிர்கொண்டுபோய் உபசாரஞ் செய்து அழைத்து வந்து அவரவர்களுக்கு விடுதிகளும் விட அரசர்களெல்லாம் வெகு சம்பிரமத்துடனேயிருந்தார்கள் அப்படியிருக்கச் செட்டியார் திலச்சரிபட்டணத்தில் நடந்துவருகிற அதிசயங்களை யெல்லாம் முடவனுகிய புரூரவச்சக்கிரவர்த்தியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

கேளுமையா இந்தப்பட்டணத்து இராஜாவின் குமாரத்தியைமுன்னொருதரம் ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களும் கேட்டபோதுகொடுக்கச் சம்மதி யில்லாமலிருக்க அரசன் இப்போது அவர்களை வலியமணமோலை யெழுதியழைப்பித்திருக்கிறன் அந்தப்பெண்யாருக்குமாலையிடுவாளோ தெரியாதென்று சொல்லப் புரூரவச் சக்கிரவர்த்தியும் பிரமன்கட்டளைப்படி முடியுமென்று சொல்லிவிட்டுத் தனிமையாக இராக்காலத்தில் வீணையையெடுத்துக் கொண்டு பாடிக்கொண்டிருக்க, இந்தக் கீதநாதத்தினுடைய சப்தமானது உப்பரிகை மேடைமேலிருக்கிற இராஜ குமாரத்தியானவள் கேட்டு மெய்மறந்து பூமியில்விழுந்துகளைதெளிந்து யெழுந்திருந்து தோழியைப்பார்த்து இப்படிப் பட்ட கீதம்பாடுகிற பேர்களைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை இந்

தக்கிதோதப்பிரபந்தம் நானறிந்ததல்ல இதுவேகீதம்போ லிருக்கிற துஆகையால் நீர்போய்ப் பரதேசிகாவற் செட்டியார் வீட்டிலேபாடுகி றவரார் அவருக்கிப்படிவந்த காரணமயாதென்று விசாரித்துவாவென் றுஅனுப்பப் பாங்கியும்நல்லதென்று ஆண்டிச்சிவேடம் பூண்டுகொ ண்டு செட்டியார் வீட்டிற்குவந்தாள்.

அங்கே இவனைப்போல ஆண்டிச்சிகளனேகம பேரிருந்தாக ள் அவர்களுடன் கூடியிருந்து சகலகாரியங்களையும் விசாரித்துக்கொ ண்டு மறுபடியு மிராஜகுமாரத்தியின் சமீபத்தில்வந்து சொல்லுகிறார் கள், அம்மா செட்டியார்வீட்டிலே இருக்கிறவரைப்பார்த்தால் அரச ர்களுடைய ராஜலக்ஷணங்க ளெல்லாமிருக்கிறது ஒருமூக்கறச்சிவந் துஅன்னமூட்டுகிறாள் செட்டியார் தாம்பூலமடித்துக்கொண்டு அரு கேயிருக்கிறார் அவரைப்பார்த்தால் முன்னமேல நம்முடைய அரண்ம னையிலே பூஷணப்பெட்டி திருடினனென்று கட்டிக்கொண்டு போய் க்கையுங் காலையும சேதித்தாகளே அவர்போலிருக்கிற தென்று சொல்லினள். இந்த வார்த்தையைக் கேட்டபுஷ்பாஞ்சலி மிகுதியுஞ் சந்தோஷப்பட்டு நமக்குமணஞ்செய்வது மெய்யானால் சுயம்வரமண் டபத்திலே ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும் வருவார்களே அவர் களையெல்லாம் நானறிந்தவள்தானே இப்போதும்வருவார்கள். செட் டியார் வீட்டிலிருக்கிறவர் இந்தச்சபையில்வருவாரோ அல்லவென்று நமக்கென்னகாரியம் நாமேன் போகிறோமென்று இருப்பாரோ வந் தாலும் இராஜகூட்டங்களைக் கடந்து நடுமண்டபத்தில் வந்தாலல்ல வோ காண்போம் கண்டாலுமவர் அடையாளந் தெரியுமோ தெரியா து மற்றுமுள்ள ராஜாக்களெல்லாம் மணக்கோலங்கொண்டு மண வறையில் வருவார்களே அவர்முடவனானபடியால் என்னமாய்வரப் போகிறார்ஒருவர் அன்னமூட்டுகிறார்களென்றபோதே கரமில்லையே அவரை முன்னம் பூஷணப்பெட்டி திருடினனென்று பிடித்துக்கொ ண்டுவந்து என்தகப்பன் சமுகத்தில்விட்டபோது நான்கண்டுஇச்சை கொண்டு இவர் நமக்குப் புருஷனாவாரோவென்று தடுத்துக் கலியா ணம்பண்ணிக் கொள்ளலாமென்று நினைத்தே னுலகத்தார் திருடனு க்கு ஆசைகொண்டவள் இவளுமொருதிருடியென்று சொல்லுவார்க ளென்று விழித்தேன் இப்போது நானினைத்தபடி விதிகூடினால் நான் செய்தபாக்கியந்தான் அவரும் செட்டியார்வீட்டைவிட்டுக் கலியாண மண்டபத்திலே வேடிக்கையாகிலும் பார்க்கவேண்டுமென்று அனே கவிதமாகத் தங்கள் குலதெய்வத்தைத் தோத்திரஞ்செய்து அவருக் கே நான்பூரியாகக் கட்டளையிடவேண்டிப் பிரதிக்கினைபண்ணிக்கொ ண்டு வியர்வைத்துட னிருந்தாள். அப்போதுமுகூர்த்தநாள்சமீபித்த

தென்று ஐம்பத்தாறுதேசத்திராஜாக்களு மவரவர் ரதகஜதுரகபதாதிகளோடு வருகிறதைக்கண்டு செய்தவனென்கிறராஜா தனதுபரிவாரங்களோடு எதிர்சென்று அழைத்துவந்து சபாமண்டபமாகிய சுயம்வரமண்டபத்தில் அவரவர்களுக்குஞ் சிம்மாதனமளித்துச்சோடசோபசாரங்களுடன் உட்காரச்சொல்லி கட்டளையிட்டனன்.

கேளும் தருமநந்தனா இப்படியிருக்கிறபோது சரஸ்வதியம்மன் செட்டியார் வீட்டிலிருக்கிற முடவனாகியபுரூரவச் சக்கிரவர்த்திக்கு தேவாமிர்தத்தை யூட்டிவிட்டுப் போகும்போது அப்பா இன்றைக்கு இந்தப்பட்டணத்து ராஜாவின் குமாரத்தியாகிய புஷ்பாஞ்சலிக்குவிவாகம். அவளைநாடி ஐம்பத்தாறு தேசத்துராஜாக்களும்முன்னம்தோற்றுப்போயினர்கள் அவர்களிப்போது அரசனுடைய மணவோலையினால் வந்திருக்கிறார்கள் ஆகையால் அவர்களில் ஒருவருக்காவது அவள்மாலையிடப் போகிறதில்லை அவள்உனக்கே மாலையிடப்போகிறாள் உன்னையல்லாமல் உயிர்வாழமாட்டாளென்று சொல்லிவிட்டுச் சரஸ்வதியம்மனும் போயினள்.

பின்புமுடவனாகிய புரூரவச்சக்கிரவர்த்தி இதுவுமொருபெண்பாவம் வரவேண்டுமோ நாமேன் கீதநாதம்பாடினோம் அதனாலல்லவோ இப்படிவந்து முடியலாச்சுது வினையிப்படியிருந்தால் என்ன செய்யப்போகிறேன் இதற்கொரு யோசனையுமில்லையே சரஸ்வதியம்மன் சொன்னவாக்குத்தப்பாதே கலியாண மண்டபத்திற்குப்போகாமலிருந்தாலும் நம்மைநாடியிருக்கிறபெண் என்னபாடு படுவாளோ நமக்கு இதுவுமொரு வினைவந்து லபிக்குமா இந்தமுகூர்த்தத்துக்குமணக்கோலத்துடனே வந்தபெண்முகூர்த்தந்தப்பிப்போனால் என்னமாய்முடியுமோ நம்முடைய வினைப்பயன் இப்படியிருக்க அப்பெண்ணினுடைய வினைப்பயனுமிப்படியாக முடியவேண்டுமோ வென்று நானாவிதமாக நினைத்துக்கொண்டிருக்கிறபோது செட்டியார் அந்தமுடவனாகிய புரூரவச்சக்கிரவர்த்தியைப்பார்த்து வாருமையா, இந்தப்பட்டணத்து ராஜாவின் குமாரத்திக்குக் கலியாணம்; நாம்போய் வேடிக்கைபார்த்து வருவோமென்று சொல்லி அவனைச்சிவிகையின் பேரில் வைத்துக்கொண்டு தாமொரு சிவிகையின்பேரிலேறிக்கொண்டு கலியாணமண்டபம்வந்து ஓரிடத்திலிருந்தார்கள்.

அப்படியிருக்கச் செய்தவராசன் புரோகிதரைப் பார்த்து முகூர்த்தந்தப்பாமல் பெண்ணையழைத்துவாருங்களென்று கட்டளையிட அவர்கள்தாதியருடனே சொல்ல அவர்கள் அப்பெண்ணுக்குக் கங்கை முதலானதீர்த்தங்களால் ஸ்நானம்பண்ணிவைத்து ஈரங்களைத்து[illegible]க்கறுத்து-இழையாயிரம்பொன்பெற்ற ரத்தினச்சருக்குச் சேலையை

ட்டி-நவரத்தினமிழைத்த குச்சுகுப்பிசடைப்பில்லையணிந்து-மல்லிகை முல்லை-இருவாட்சி-செண்பகம்-குருவேர்-மருக்கொழுந்து முதலாகிய புஷ்பங்கள்முடித்து-கண்களுக்கு மையிட்டு-நெற்றியில் திலதமிட்டு வாசனையுடைத்தாகிய திவ்வியசந்தனம்பூசி நவரத்தினமயமான சரிகைரவிக்கையைத்தரித்து மூக்குத்தி-சிந்தாக்கு-நெற்றிப்பட்டம்-ரத்தினவாளிரத்தினவோலை அள்த்தகடகம்-வன்னசரம்-முத்துமாலைமாணிக்கப்பதக்கம் - சரப்பளி - சூடம் - சரிவளை - ஒட்டியாணம் - காலாழி-பீலாழி சிலம்பு-தண்டைகொலுசு முதலான ஆபரணங்களெல்லாம் விதம்விதமாகத் தரித்து அலங்காரம்பண்ணியது எப்படியிருந்ததென்றால் சிவரத்தினத்தைத்தழுவி யொப்பமிட்டால் எப்படியோ அப்படிப்போலே ஒப்புமைக்கடங்காமல் தானே தனக்குச்சமானமான திவ்வியசொரூபத்துடனேவிளங்குகிறதைத் தேவகன்னியர்கள் பார்த்துஇப்படிப்பட்ட சவுந்தர்யமுள்ளபெண் தெய்வலோகத்திலு மில்லையென்று பார்த்தகண்கள் மாறுபல்இவைகொட்டாமலிருக்க இந்த பூலோகத்து மனிதர்படும்பாடுஒருவராலே சொல்லக்கூடுமோ இவ்விதமாக அலங்காரம் பண்ணிக்கொண்ட பெண்செம்பஞ்சூட்டியபாதத்திலே ரத்தினாதிகளிழைத்த பாதசரங்கள்-சிலம்பு-தண்டைகள் கலீர்கலீரென்ன-அரவின்படம் போன்ற அல்குல்-மண்டலத்தின்பேரில் கட்டிய மேகலாபரணமும்உடைதாரமும்ஆர்ப்பரிக்க அளகபாரத்திற்சொருகிய ஆபரணங்கள் இன்னதுஇன்னதென்று நிர்மிக்கப்படாதபடி அலங்காரஞ் செய்து - கையிற் பூச்செண்டு பிடித்துக்கொண்டு சிறிதுபெண்கள் முத்தாலாத்திப்-பவழாலாத்திமுதலியனவும், சிறிதுபெண்கள்-வெண்சாமரமும்-சிறிதுபேர்- காளாஞ்சியுமேந்திச்-சிறிதுபேரெச்சரிக்கைசெய்துவர-சிறிதுபெண்கள்- பொற்பிரம்புகொண்டு ஜனங்களைவிலக்கிவர- இத்தியாதிவைபவத்துடனே அந்தப்புரங்கடந்துவரச்சே-தோற்கருவி - துளைக்கருவிகஞ்சக்கருவி-நரம்புக்கருவிமுதலான வாத்தியங்களுமுழங்கச் சமுத்திரகோஷ்டம் போலவோசையும்-ஆசீர்வாதவோசையும்-வேதகீதவோசையும் - மங்களவாழ்த்தும் சங்கீதத்தொனியு முழங்க நடந்துவந்து சபாமண்டபத்தி லிருக்கின்ற தந்தையின் பாதத்தி லடிபணிந்துநின்றனள்.

அப்படிப்பணிந்துநிற்கின்றபெண்ணைப்பார்த்துச்சந்தோஷப்பட்டுப்பாங்கியரைப்பார்த்து இவ்விடத்தில்வந்திருக்கிற அரசர்களுடைய சாம்பிரதாயங்களுங்களுக்கல்லவோதெரியவரும் ஆகையால்அவரவர்களைக்காண்பித்து மாலையிடச்சொல்லென்று பாங்கியர்பிறகேதன்குமாரத்தியைக்கூட்டிக் கையிலேமணமாலையுங் கொடுத்தனுப்பஅப்படியே அவர்கள் இராஜகுமாரத்தியைச் சுயம்வர மண்டபத்திற்கு

அழைத்துவந்துநிற்கையில்அரசர்களெல்லாம்அப்பெண்ணைப்பார்த்து இவள்-ரதியோ-இந்திராணியோ-மேனகையோ-தேவகன்னியோ வென்றுபாதாதிகேசபரியந்தம் பார்த்து இப்படிப்பட்டபெண்ணை எங்குங் கண்டதில்லை யென்றுமெய்மறந்து-எழுதிவைத்தசித்திரம்போலே பார்த்தகண்கள் மாறாமல் பார்த்திருந்தார்கள் அப்போ தாதியும்-அரசர்களுடைய-பராக்கிரமமும் - வண்மையும்பொறுமையும்- தயவு-தாக்ஷிண்ணியமும்-அழகும்-வித்தையும்- அவரவர்கள் தேசத்திலிருக்கு மதிசயங்களை எடுத்துச்சொல்லக்கேட்டும் இராஜகுமாரத்தியாகிய புஷ்பாஞ்சலி இவர்களைநாமறியோமோ முன்சங்கிதத்துக்குத்தோற்றுப்போன அரசர்களல்லவோவென்று யோசனைபண்ணிக்கொண்டு அவர்களைக்கடந்து அவ்விடத்தில் நானுவிதமான வருணத்திலுள்ள செனங்களும் சபையில்வந்திருக்கிறபடியினாலே அவர்களைப்பார்க்க முடியாமல் திகைத்துநின்றனள்.

கேளுந்தருமநந்தனா ஆகாயவீதியிலே மேகமண்டல மளவாய் தேவர்களிருந்துகொண்டு பிரமதேவரைப்பார்த்து ஏதையா இந்தப் பெண்ணானவள் இராஜசபையில்வந்து அரசர்களைவிட்டு இதரமான செனங்களிருக்கின்ற இடத்தில்வந்தும் திகைத்தாற்போ லிருக்கிறாளே இவளாருக்கு மணமாலையிடப்போகிறாள் அதுவும்மையல்லாமல் வேறொரு காரணமு நடவாது அதைஎங்களுக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டுமென்று கேட்டதற்குப்பிரமதேவரும் இன்னம் இரண்டுநாழிகையில் ஒருமுடவனுக்குமாலையிடப்போகிறாள் பார்த்திருங்களென்று கூறினன்,அதைத்தேவர்களறியவேண்டுமென்றுஆகாயவீதியிலிருக்கும்போது இவிடத்தில் இராசகுமாரத்திக்குத் தாதியர்கள் அரசர்களுடையசரித்திரங்களை எடுத்துச்சொல்லக்கேட்டு மலர்களைக் கண்ணினாலேபார்த்தும் தன்மனதுக்கொவ்வாதபடியினாலே அவள்மனதில் நிச்சயித்துக் கொண்டிருக்கிற புருஷனைக்காணாமல் வருத்தமுற்று எந்தவேளையில் இந்தமணமாலையையெடுத்துக்கொண்டு புறப்பட்டேனோவென்று தாதியர்களைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

அடிதாதிகளே நானினைத்திருக்கிற புருஷனுக்கு இன்றையத்தினம்மாலையிட்டாலாசசுது இல்லாவிட்டால் பிராணத்தியாகம் செய்துகொள்ளுகிறதே நலமென்று நயனபாஷையாகச்சொல்லிவிட்டு ஓர்நினைவாகத் தன்குலதெய்வத்தைத் தியானித்துநான் கற்புடையது மெய்யானால் நானினைத்தகாரியம் பொய்யுறாமல் நானினைத்தபுருஷனே எனக்குப் பத்தாவாகவேண்டுமென்று தியானித்துக்கொண்டிருக்கிற தருணத்தில் அருகிருக்கிற உயிர்த்தோழியானவள் இராஜகுமாரத்தி

யைப் பார்த்து நானொருவினோதமான கதைசொல்லுகிறேன் அதை கவனமாகக்கேளுமென்று சொல்லுகிறாள்.

விசாலநகரமென்றொரு பட்டணமுண்டு அதில் விசாலபூபதியெ ன்றொரு அரசன்நீதிவழுவாமல் செங்கோல் நடாத்திக்கொண்டு வரு கிறகாலத்தில் அவ்வரசனுக்குப் புத்திரபாக்கியமில்லாமல் கனவருத்த முற்று அனேகதானதருமங்கள் செய்தும் பயனில்லாமல் சாக்ஷாத் காரமாகிய பரமசிவனை நோக்கித்தவஞ்செய்ய அத்தவத்தாலவருக் கொரு பெண்குழந்தைபிறந்தது அதைநாளொரு மேனியாகவளர்த்து ஐந்தாம்வயதில் பள்ளிக்குவைத்துச் சகலசாஸ்திரங்களையுங் கற்பித் துப் பொதும்பைப்பருவம் வந்தவுடனே அரசன்குமாரத்திக்கு ஒருஉ ப்பரிகைகட்டி அதில்குமாரத்தியைச் சிலதாதியர்களுடனிருக்கும்படி கட்டளையிட்டனர் அப்படிசிலகாலம் தாதியர்களுடன் கூடிவிளையாடிக் கொண் டிருக்கும்போது ஒருநாள் அரசன்தேவி யரசனிடத்திற்குவந் து நம்முடையபெண்ணை என்தம்பிபிள்ளைக்கு விவாகஞ்செய்து கொ டுக்கவேண்டுமென்று கூறினள்.

அதற்கரசன் பெண்ணைநான் என்தமக்கை பிள்ளைக்கு விவாக ஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று நிச்சயித்து ஐம்பத்தாறு தேசத் துராசாக்களுக்கும் மணவோலைபோக்கி மணவறைப்பந்தல் அலக்கார ஞ்செய்திருக்கிற காலத்தில் உன்தம்பிபிள்ளைக்கு விவாகஞ்செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டால் நான் முன்னமே நிச்சயார்த்த ஞ்செய்து அரசர்களுக்கும் மணவோலைபோக்கி மணவறைப்பந்தல்க ளு மலங்காரஞ்செய்ததால் நீநினைத்தகாரியம் முடியாதென்று சொல் லிவிட்டனர் அதையரசன் தேவிகேட்டு என்தம்பிபிள்ளைக்கு விவாகஞ் செய்துகொடுக்க உமக்குமனமில்லாத படியால் உம்முடைய தமக்கை பிள்ளைக்கு எப்படிவிவாகஞ் செய்துகொடுக்கப் போகிறீர் அதைப்பா ர்ப்போமென்று சொல்லிவிட்டு அந்தப்புரஞ்சென்றனள்.

இதுகளையெல்லாம் ஆகாயவீதியில் சஞ்சரித்துக் கொண்டிருக் கிற தேவர்களுணர்ந்து தேவேந்திரன் முதலாகிய தேவர்களும் அஷ் டதிக்குப்பாலர்களும் மற்றுமுண்டான ரிஷிகளும் கூடியிருக்கிற தே வசபையிற்சென்று பிரமதேவனைப்பார்த்து விசாலதேசத்தரசனுக் கும் அவன்தேவிக்கும் விரோதப்பட்டு ஒருவருக்கொருவர் சபதஞ்செ ய்துகொண் டிருக்கிறார்கள் அப்பெண்ணையாருக்குப் பாரியாளாக்க நினை த்தீரதை யெங்களுக்குத் தெரியச்சொல்ல வேண்டுமென்று கேட்டத ற்குப் பிரம்மதேவர்.

குறள்.

"உள்ளிய தெள்ளிய ரயினு மூழ்வினை
பைய துழைந்து விடும்"

என்பதுபோல ஒருமுடவன் குஷ்டரோகியாய் ஒருமலையடிவார த்தி லிருக்கிறானவனுக்கு மாலையிடுவாளென்றார் அதைக்கேட்ட தே வர்க ளிவையறிய வேண்டுமென்று கருடனையழைத்து ஓய் கருட னே அந்தமலையடிவாரத்தி லிருக்கிற முடவனாகிய குஷ்டரோகியை ஒரு நிமைநேரத்தில் மகம்மேரு பருவதத்தின் பேரில் ஒளித்துவை த்து வாருமென்று கட்டளையிட அப்படியே நல்லதென்று கருடபக வான்வந்து அந்த முடவனை யலாக்கெடுத்துக் கொண்டுபோய் மகமே ருபருவதத்தின்பேரில் ஒருசுனையில்வைத்துவிட்டுப் புறப்படும்போது முடவனாகிய குஷ்டரோகி ஐயா என்னைக்கொண்டுவந்து மனிதர்கள் சஞ்சாரஞ்செய்யாத விடத்தில் ஓர்குகையில வைத்துவிட்டுப்போகிறீ ரோ உமக்குத்தருமமா எனக்குமிகவு மாயாசமாக விருக்கின்றது நா னென்னசெய்வே னையாவென்று முறையிட அதற்கு கருடபகவா னும நல்லதென்று வெளியில் புறப்பட்டுவருகையில் பட்ட ணத்தில் இராஜாவின் கலியாணவீட்டில் அரசனுக்கு மாசன்தேவிக்கும் விரோ தப்பட்டுக்கொண்டிருக்கிற தருணத்தில் அரசன் தேவியானவள் தன் குமாரத்தியை ஒருபேழையில்வைத்து அந்தப் பெண்கையில் திரும ங்கிலிய மும மாலையுங்கொடுத்துச் சிறிது கசாயமுடைய பேழையில்வை த்துப்பெண்ணைப்பார்த்து அம்மா இந்தப்பேழையைத் திறந்தவன் கையில் இநதமங்கிலியத்தைக் கொடுததுத் தரித்துக்கொள்ளென்று சொல்லிவிட்டு அப்பேழையைப்பூட்டி ஒருமனிதன் தலையின்பேரில் வைத்துத தனதாய விட்டுககனுபபினள்.

அவள் தன்தாயின் கட்டளைப்படியே யப்பேழையை யெடுத்துக் கொண்டு போகையில் கருடபகவானவர் பார்த்து இது ஜாலகாரப் பேழையென்றுவந்து அதைநதெடுத்துக்கொண்டு பறந்து மகமேருப ருவதத்திற்குக் கொண்டுபோய் முடவனாகிய குஷ்டரோகியருகில் வைத்துப்பேழையில் உன்பசிக்குவேண்டிய திருககிறது அதை நீயெ டுத்துப்புசித்துப் பசியாறிச்சுகத்தி லிருவென்று சொல்லிவிட்டுப் பா றையையெடுத்து மூடிவிட்டுத் தேவர்களிடத்திற்குவந்து அந்தமுடவ னாகிய குஷ்டரோகியை ஒளித்துவைத்து வந்தேனென்று சொல்லிவி ட்டுச் சென்றனர்.

இங்கேமுடவனாகிய குஷ்டரோகி மிகுந்த பசியானபடியினால்பே ழையைத்திறக்க அதிற்கோடிசூரியப் பிரகாசமாயிருக்கின்ற ஒருபெ ண்ணிருப்பதைக்கண்டு பிரமித்திருந்தா னப்போதப் பேழையிலிருந் தஇராஜகுமாரத்தி தன்கரத்திலிருக்கிற மங்கலியத்தை அவன்கையி ற்கொடுக்க முடவனாகியகுஷ்டரோகி யதைவாங்கிக்கொண்டு திகைத் தாற்போல் நிற்கையி லப்பெண்ணானவள் நடந்தகாரணங்களை யெல் லாஞ் சொல்லிவிட்டுத் தன்தாய்சொன்ன வாக்குத்தப்பாமல் அப்பா

ணியாகிலு மாகட்டும் உன்னுடைய கையிலிருக்கிற மங்கிலியத்தை என்கழுத்தில் கட்டுமென்று சொன்னவுடன் முடவனாகிய குஷ்டரோகி தன்கையிலிருக்கிற மங்கிலியத்தைக்கட்டி மாலையுந்தரித்துப் பலகாரங்களுஞ்சாப்பிட்டு கெந்தபுஷ்ப தாம்பூலமுமணிந்து இருவருங்கூடி விளையாடிச் சுகித்திருந்தாகள்.

கேட்டீரோ தருமநந்தனை கலியாணவீட்டில் பெண்ணைக்காணாமல் ஒருவருக்கொருவர் சண்டைசெய்துகொண்டு பெண்ணை நீ யொளித்து வைத்தாயென்று அரசன்கோபிக்க அதை யந்தரவாசிகளாகிய தேவர்களறிந்து பிரமதேவரிடத்திற்குவந்து இந்த முகூர்த்தத்தில் அப்பெண்ணுக்கு விவாகநடக்குமென்று சொன்னீரே அந்தமுகூர்த்தந் தப்பிப்போய்ப் பெண்ணைக்காணோமென்று சண்டையிடுகிறார்களென்று கேட்டதற்குப் பிரமதேவர் கேளும்தேவர்களே அந்தமுகூர்த்தத்தில் முடவனாகிய குஷ்டரோகிக்கு விவாகம்நடந்துவிட்டது நீங்களொளித்துவைத் திருக்கிறவிடத்திற்குப் போய்ப்பார்த்து வந்தீர்களேயானால் உண்மை வெளிப்படுமென்று கூறினர்.

தேவர்களதைப்போய்ப்பார்த்துவருவோமென்று புறப்பட்டுமகமேருபருவதத்தின் சமீபத்திற்போய் மலைக்குகையில் பாறையை வைத்து அடைத்திருந்ததைத்திறந்துபார்க்குமிடத்தில்அவ்விடத்தில் பெண்ணும்பிள்ளையும் இருவருமாகச் சந்தோஷத்துட னிருப்பதைப் பார்த்து மகாசந்தோஷமுண்டாகிக் கருடனையழைத்து முடவனாகிய குஷ்டரோகியை ஒளித்துவைக்கும்படி சொன்னோமே யவ்விடத்தில் நடந்தவற்றைக் கூறென்றுகேட்கக் கருடனும் நானொளித்துவைத்துத் திரும்பும்போது முடவனாகியகுஷ்டரோகி இந்தக் குகையிலெனைக் கொண்டுவந்து விட்டீரே எனக்குமிகவும் ஆயாசமாகவிருக்கிறது ஏதாகிலும் தின்பண்டங்கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென்றுகேட்க அதற்கேதாகிலும் கொண்டுவந்து கொடுக்கலாமென்று புறப்பட்டுவரும்போது வழியிலிந்தப் பலகாரப் பேழையைக்கண்டு எடுத்துக்கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுப் பாறையையெடுத்து மூடிவிட்டுவந்தே னிதிலிப்படி யிருந்தது நானறியேனென்று சொல்லத்தேவர்களும் பிரமலபி தப்பாதென்று சந்தோஷித்துப் பிரமதேவரிடத்திற்குவந்து தெய்வ அரம்பைக் கொப்பானபெண்ணை இச்சப்பாணிக்கு மாலையிடக் கட்டளையிட்டீர் அவனையெங்களுக்காகமன்மதசொரூபமாகக் கட்டளையிட்டு ரட்சியுமையா வென்றுகேட்கப் பிரமதேவருமப்படியே யுங்கள் கருத்தின்படி செய்கிறேனென்று அவன் திவ்வியதேகமுறும்படி அனுக்கிரகித்து ஒருநகரத் தரசனாகமகுடஞ்சூட்டிஅனேகவரங்களையுங் கொடுத்தனர். அதைப்பெற்றுக்கொண்டு இல

காலம் நீதிவழுவாமல் அரசாட்சி செய்துகொண்டிருந்து இராச்சியசம்பத்துகளை யனுபவித்துப் பின்பு சாம்பவமூர்த்தியை நோக்கித் தவஞ்செய்து அத்தவத்தால் சாம்பவமூர்த்தியினுடைய அனுக்கிரகம்பெற்றுச் சாயுச்சிய பதவியையடைந்தனர்.

ஆகையால், விதிவசம்தப்பாதென்று செவிலித்தாயானவள் கதைசொல்லி முடித்தனள்.

பின்பு இராசகுமாரத்தியாகிய அதிரூப புஷ்பாஞ்சாலி செவிலித்தாயினிடத்திலிருக்கிற மணமாலையைத் தன்கரத்தில் வாங்கிக்கொண்டு தனதெண்ணத்தின்படியே முடிக்கவேண்டுமென்று பரமசிவத்தைத்தியானித்து தன்கையிலிருக்கிற மணமாலையைச் சுழற்றி ஆகாயவீதியிலெறிந்து கும்பிட்டுக்கொண்டு நின்றாள். அந்தமாலையானது சுழன்றுகொண்டே வந்து அநேக தூரத்திலேயிருக்கிற முடவனாகிய புரூரவச் சக்கிரவர்த்தியினுடைய கழுத்திலேவிழுந்தது விழுந்த மாத்திரத்தில் ஓவென்றசப்தமாய் பிரம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரரென்று சொல்லப்பட்ட நான்குவருணத்திலுள்ள சனங்களும் கைகொட்டிநகைத்து ஓஹோ இராஜாவின்குமாரத்திக்குவந்தவிதியைப்பார்த்தீர்களோ வென்பாருட, இராஜாக்களிருக்க அவளுக்கென்ன தெரியாதோ வென்பாரும் தெய்வமிப்படி செய்யவேண்டுமோ வென்பாரும், திருடியறுப்புண்ட சப்பாணிக்கு மாலையிட்டாளென்பாரும், இராஜாக்களையெல்லாம் மோட்டனம் பண்ணபடியால் சங்கீதம்வாசிக்கப் பட்டவர்களுக்கு இப்படிதான் வாய்க்கவேண்டுமோ வென்பாரும், ஆனாலென்ன இன்னமொருதரம் தனக்குச் சரியானபேருக்கு மாலையிடுவாளென்பாரும், இவ்விதமாக அவரவர்கள் சொல்லுகின்ற வார்த்தைகளைப் புஷ்பாஞ்சலிகேட்டு நானினைத்தபடியே எனதெண்ணம் பலித்ததே நான்தொழுததெய்வமே தெய்வமென்று அதிக ஆவலுடனே செட்டியாரருகிலிருக்கின்ற சப்பாணியாகிய புரூரவச் சக்கிரவர்த்தியினருகே போய்நின்றுகொண்டு என்பத்தாவானவர் இவரோவென்றுசந்தோஷித்துக் கைகட்டிக்கொண்டு நின்றாள்.

அப்போதிந்த வர்த்தமானமெல்லாம் தகப்பனாகியசெய்தவராசன்கேட்டு மெய்மறந்துசிங்காதனத்திலிருந்து மூர்ச்சையாய்கீழேவிழ அருகில்நிற்கின்ற மந்திரிபிரதானிகளெடுத்தணைத்துமூர்ச்சை தெளியசயித்திய வுபசாரங்கள் செய்ய மயக்கந்தெளிந்து தன் பெண் சப்பாணிக்கு மாலையிட்டதை நினைத்துப் புலம்பி மகா துயரத்துடனிருக்கும்போது அந்தப்புரத்திலிருக்கிற அரசன் தேவியானதிலதவதியாள் இதனைக்கேட்டு என் பெண் முடவனுக்கு மாலையிட்டாளோவென்று ஓ வென்ற சத்தமாயடியற்றமரம்போல பூமியில் தொப்பெ

ன்று விழுந்து மூர்ச்சையாய்க்கிடப்பதை யருகிலிருக்கிற தாதியர்களநேக சயித்தியோபசாரங்கள் செய்து மனம் பொறுத்து முடியாமல் சமுத்திரகோஷம் போல அரசனிருக்கிற சபாமண்டபத்திற்கு வந்து நாம் புத்திரபாக்கியமில்லாமல் தபசுபண்ணி பெற்ற பெண்ணுக்கு இப்படி லபிக்குமோவென்று அரசனிடபாதத்தில் விழுந்துபுரண்டழுகிறபோது அருகிலிருக்கிற தாதியர்களெடுத்து மார்புடன் சாத்திக்கொண்டு அந்தப்புரத்திற்குக் கொண்டுபோய்விட்டார்கள்.

அரசன் மந்திரியைப்பார்த்துதிருடிஆக்கினைப்பட்டவனுக்கு மாலையிட்டாளென்கிற வார்த்தையைக்கேட்டும் உயிருடனிருப்பது நலமல்லவென்று உயிரை மாய்த்துக்கொள்ளப்போகிற சமயத்தில் குலகுருவாகிய வசிஷ்டமுனிவர் வந்து கையைப் பிடித்துக்கொண்டு இப்படியும்செய்வார்களோ பேய்கொண்ட அரசனே அவள்விதி இப்படியிருந்தால் நாம் செய்வதாவதேதுவலியஉயிரை மாய்த்துக்கொண்டால் பசாசத்துவமணுகும் அதனாலே நரகமுண்டு அப்பெண்ணினுடைய அருமையைப்பாராமல்அவள்புருஷனுடனே கூட்டி அடவியில் போகச் சொல்லுகிறதே நலம் அதற்காக மனங்கலங்குவார்களோவென்று சொல்லினர் அரசன் அருமையாய்ப் பெற்றுவளர்த்தபெண்ணைக் காட்டிற்குப்போகச்சொல்லி எப்படி சுகித்திருப்பேனென்றார் அதற்குக் குலகுருவாகிய வசிஷ்டர் ஜனக சக்கிரவாத்தியினுடைய பெண்ணாகிய சீதாபிராட்டியார கலியாணம் பண்ணினவுடனே காட்டிற்குப்போகவில்லையா அவளை மறித்தபேருண்டோ அப்படிப்போலவே இதுவுமொரு காரணத்துக் கேதுவானபடியால் இவ்விதமாக முடிந்ததென்றார்.

அரசனிதுகளை யெல்லாங்கேட்டு அந்தப்புரஞ்சென்று தன்தேவியாகிய திலதவதியாளிடத்தில் குலகுருவாகிய வசிஷ்டர் சொன்னபிரகாரஞ் சொல்லினர், திலதவதியாரும் குருவாக்கியமே பெரிதாகையால் அப்படிச்செய்வது நலமென்றான் உடனே அரசன் ஊழியக்காரர்களை யழைப்பித்துத் தன் குமாரத்தியை யழைத்துவரச்சொல்லி கட்டிக்கொண்டு கதறி அம்மா உன்னுடைய கலியாணத்தின் இழிவு இவ்வளவென்று சொல்லி முடியாது முன்னமே அரசர்கள் வந்து கேட்டபோது அவர்களுக்குக் கொடுக்கச் சம்மதிக்காதபடிச்செய்து வைத்தது விதியேயல்லாமல் வேறல்லவென்று வருத்தப்படுகிறபோது, புஷ்பாஞ்சலி அரசனைப் பார்த்து என் பத்தாவைவிட்டு இவ்விடத்தில் வந்து நெடுநேரமாச்சுது நீரும் வசைபொறுக்கமாட்டீர் நீரிவ்விடத்திலிருக்கச் சொன்னபோதிலும் நானிவ்விடத்திலிருந்து இகழ்ச்சியானவார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு இந்தப்பட்டணத்திலி

ருக்கமாட்டேன் நானுமென்னுடைய பத்தாவும் காட்டிலேபோய்க் கந்தமூலபலாதிகளைப் பறித்து அவருக்குங்கொடுத்து நானுமருந்தி என்பர்த்தாவுள்ளமட்டு மிருப்பேனென்றும் அவரிறந்த காலத்தில் நானுமிறப்பேன் இனி ஒரு நாழிகையாகிலும் இவ்விடத்திலிரேனென்று சொல்லினள்.

இவற்றையெல்லாம்கேட்டு அரசன்விசனக்கிரந்தனுயிருக்க புஷ்பாஞ்சாலி என் கணவனைத்தவிர வேறுபாக்கியம் வேண்டாமென்று சொல்லிதானணிந்திருந்த ஆபரணங்களையெல்லாம் கழட்டிபரதேசிகளுக்குஅரசன் முன்பாகக்கொடுத்துத் தகப்பனிடத்திலும் தாயினிடத்திலும்செலவுபெற்றுக்கொண்டுபுரோகிதருடனே தன்பத்தாவான புரூரவச்சக்கிரவர்த்தியின்சமீபத்தில்வந்து நின்றனள். முடவனாகியசக்கிரவர்த்தி புஷ்பாஞ்சலியைப்பார்த்து மெத்தவும் வியாகூலத்தையடைந்து முன்னாலே திருடிக் கைகாலறுப்புண்ட எனக்கு நீ மாலையிடலாமா இனிமேலாகிலும் உனக்குச் சம்மதியான பேருக்கு மாலையிடென்று கூறப் புஷ்பாஞ்சலி உமமிடபாதமேயல்லாமல் வேறு கதியில்லையென்று தலையிறங்கிக் கொண்டு நின்றனள்.

அப்போதருகிலிருந்த பரதேசிகாவற் செட்டியாரும் வாருமம்மா என்னுடைய அரண்மனையிலிருங்கள் உங்களுக்கு வேண்டிய பாக்கியத்தைத் தருகிறேன் சுகித்திருங்களென்றார் அதற்கு இராஜகுமாரத்தி நானிந்தப் பட்டணத்தில் நிமைப்பொழுதாகிலு மிருக்கிறதில்லை என்பத்தாவையும் நான்விட்டுப் பிரிகிறதில்லை யென்று கூறினள் சப்பாணியாகிய புரூரவசசக்கிரவர்த்தி பெண்ணே இன்றையதினம் பரதேசி காவற்செட்டியார் மனதின்படியிருந்து இவரிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு போகலாமென்று சொன்னதற்கு, அரை நிமிஷமாகிலு மிந்தப் பட்டணத்திலிருப்பது நலமல்லவென்று கூறினள் அந்தவார்த்தைகளைக் கேட்டிருந்தசெட்டியார் வெகுஉபசாரங்களுடனே இரண்டுபேரையும் பல்லக்கின்மேல் வைத்துக்கொண்டு பட்டணங் கடக்கக் கொண்டுவந்துவிட்டு முடவனாகிய சக்கிரவர்த்தியினிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு தாமிருக்கிறவிடத்திற்கு வந்துவிட்டார் இவர்களிரண்டுபேரும் ஒரு செடியருகே யிருக்கிறவேளையில் சப்பாணியாகிய புரூரவச்சக்கிரவர்த்தி தன்மனைவியைப் பார்த்து என் விதியிப்படி யிருந்தால் நீ தூங்குமஞ்சத்தின் மேரில்தோழிமார் சூழவிருக்கிற உனக்கு இப்படிவரவேண்டுமோ இதுவும் திருவுளச்செயலென்று விசனப்பட இராஜகுமாரத்தி அடியேனுக்கென்ன தேவரீர் திருமேனிவருந்தாமலிருக்களப்போதுகாண்பேனோ அடியேன்சனனமென்றைக்குயீடேறுமெனவிசனப்படமுடவனாகியசக்கிரவர்த்தி இவ

ள்வருத்தமும் வணக்கமுங்கண்டுசந்தோஷிக்க இவளேகற்புடைய ஸ்திரீயென்றுபதித்து இவளாலேநமக்குநல முண்டாகுமென்றெண்ணிக்கொண்டு புஷ்பாஞ்சலியைப்பார்த்து என்னைநீ முன்பின்னறிந்தவளல்லவே உனக்கு என்பேரில் இத்தனை தயவானதென்னவென்று வினவ, புஷ்பாஞ்சலி சுவாமி நான்வசந்தகாலத்தில் ஒருநாள்உப்பரிகைமேடையின்பேரில் தாதியருடன் விளையாடிக்கொண்டிருக்கும்போது தென்றல்வீச மனஞ்சகிக்காம லந்த மேடையின் பேரில் சயனித்துக்கொண்டு அருகிலிருக்கிற உயிர்த்தோழியைப் பார்த்துஇந்நாள் வரைக்கும் இந்தகாமவிகாரமென்கிறது இன்னதென்று அறியேன் இன்றைக்குஏதோகாமவிகாரமாக விருக்கிறதென்று சொல்லிக்கொண்டிருக்கிற காலத்தில்ஓர்கீதநாதத்தினுடையதொனி என்செவிக்குக் கேட்டமாத்திரத்தில் நானணிந்திருந்தசுட்டிலிருந்த பச்சைக்கல்லானது உருகிவிழுந்ததைக் கண்டு மெய்சோர்ந்து தெளிந்து அருகிலிருக்கிற உயிர்த்தோழியைப் பார்த்து இந்தகீதநாதம் பாடத்தக்கவர்களிந்த அரசாட்சியிலில்லையே ஆகையால்நீபோய் பார்த்துவாவென்று உத்தரவு செய்தேன் அவளவ்வாறேபார்த்துவந்து பரதேசிகாவற் செட்டியார் வீட்டிலிருக்கிறவர் அரண்பனையில் பேழைதிருடினவ ரென்று அரசன் ஓர்கையும் காலையும்வாங்கிப்போட்டாரே அவர்செட் டியார் வீட்டில் கீதநாதம்வாசித்துக் கொண்டிருக்கிறாரென்று கூறினள் அன்றுமுதற்கொண்டு எப்பாணியாகிலும்அவரேபதத்தாவென்று திருவிவுப்பாங்காக எண்ணியிருந்தேன் எனதுஎண்ணத்தின்படி முடிந்ததென்று சொல்லினள்.

அந்தவார்த்தைகளைக் கேட்டு மிகவுஞ் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிற தருணத்தில் சரஸ்வதியம்மன் இவர்களிருக்கிறவிடத்திற்குத்தேவாமிர்தத்தைக்கொண்டுவந்துநீங்கள்இராக்காலத்தில்தனியேயிருப்பீர்களோவென்று கேட்டதற்கு தாயேஉம்முடைய கடாக்ஷமுண்டாயிருக்க நாங்க ளெங்கேயிருந்தாலென்னவென்று மிகுதியுமன்புடனே வணங்கிச்சொல்லச் சரஸ்வதியம்மனும் ஒருஇரத்தினத்தை வைத்துப் பிரகாசமுண்டாக்கினள் அந்தப்பிரகாசத்தைக்கண்டமாத்திரத்தில் புஷ்பாஞ்சலி எழுந்து நமஸ்காரஞ்செய்ய சரஸ்வதியும் தீர்க்கசுமங்கலியாயிருக்கக்கடவையென்று வாழ்த்திதான்கொண்டுவந்த தேவாமிர்தத்தை இருவருக்கும் கொடுத்துவிட்டு அந்தவிடத்தில்விசுவகர்மனை அழைப்பித்துச் சொர்ணமயமான மாளிகையும்-இரத்தினகோபுரமும்-வெள்ளிமதிலும்-மாடமாளிகையும் - கூடகோபுரமும் உப்பரிகையு முண்டாக்கி அந்தமாளிகையில் இவர்களிருவரையுங் கொண்டுபோய்வைத்துச் சுகத்திலிருங்களென்று சொல்லிவிட்டுப் போயினள்.

கேளும் தருமபூபதியே அந்தச்சபாமண்டபத்தில் அபரஞ்சிமேடையின்பேரில் சிறிதுநாளிருக்கையில் தெய்வலோகத்திலேவிதியுமதியுமாகியதேவர்கள் இரண்டுபேரும் நீபெரியவன்நான் பெரியவனென்று ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக்கொண்டு இருவரும்தெய்வசபைக்குவந்து கூறினார்கள் எங்களுக்குத் தெரியாது பூலோகத்திலே மனுஷிக்கியானராஜனுக்குத் தெரியுமென்றுகூற, அவரெங்கேயிருக்கிறாரென்றுகேட்டதற்கு அவர்சனியீஸ்வரபகவான் சோதனையினால்வனத்தில்வாசமாகவிருக்கிறார் அவராலேஉங்களிருவருடையவழக்கு தீருமென்று சொன்னதைக்கேட்டு இருவரும் பூலோகத்திற்குப் போகலாமென்று பிராமணர்களைப்போல வேடங்கொண்டு சக்கிரவர்த்தியைக் கண்டு ஆசீர்வாதம்பண்ணி அட்சதையுங் கொடுத்தார்கள். புரூரவச்சக்கிரவர்த்தி அந்தபிராமணர்களைப்பார்த்து நீங்களெவ்விடத்திலிருந்து வருகிறீர்கள் உண்மை வெளியிடுங்களென்றுகேட்டதற்கு நாங்கள் தீர்த்தவாசிகள்வழிநடக்கும்போது விதி பெரிதென்றும்மதிபெரிதென்றும் ஒருவருக்கொருவர்சண்டைபோட்டுக்கொண்டு இவ்விடத்தில்தெய்வீகம்விளங்குகிறதாய் கேள்வியுற்று உமதிடத்திற்குவந்தோம் அதின்உண்மையைவெளியிடவேண்டுமென்று கூறினார்.

ஆனால் உங்களிருவருடைய வழக்கையும் சொல்லுங்களென்றார், இருவரிலொருவர் நான் விதிதப்பிப் பிழைத்தபேர்களில்லையோவென்றேன் அதற்கு மதி மார்க்கண்டனுக்கு விதி பதினாறுவயதாக பிரமதேவர்கட்டளைபண்ண அதைமார்க்கண்டரறிந்து மதியினாலே பரமசிவத்தினுடைய அனுக்கிரகப்படிக்குஎன்றும் பதினாறுவயதாகச்செய்துகொண்டாராகையால் மதியேபெரிதென்று சொன்னாரென்று கூறினார், சக்கிரவர்த்தி ஓப்பிராமணரே அப்படியுஞ் சொல்லுவார்களோ முன்மார்க்கண்டருக்குப் பதினாறுவயதென்றதும் பின்என்றும் பதினாறுவயதாகச்செய்துகொண்டதும் விதியானபடியினாலே அப்படிமுடிந்தது விதியைவெல்வதற்கு ஒருவராலுமுடியாது அதற்குத்திருஷ்டாந்தஞ்சொல்லுகிறேன், விதியினாலல்லவோசனியன் காகமேறினதும், மூதேவிகழுதையேறினதும், தேவேந்திரன் சரீரம்பழுதானதும், மாண்டவ்யரிஷி கழுவிலேறினதும், புரூரவச்சக்கிரவர்த்திக்குக் கையும் காலும் அறுப்புண்டுபோனதுமாகிய எல்லாம் விதியினாலல்லாமல் வேறல்ல.

நாலடியார்.

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றான்

விளங்காய் திரட்டினு ரில்லைக்
களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்"

என்று விதியேபெரிதெனச் சொன்னமாத்திரத்தில், அந்தரவாசிகளாகியதேவர்கள்சந்தோஷப்பட்டு புஷ்பமாரிபொழிந்து காட்சிகொடுத்துநீயே சத்தியவானென்று சொல்லிவிட்டு மறைந்தனர்கள் பின்பு இரண்டுபிராமணர்களுமிதுதகுதியானஉத்தரவென்றுஇருவரும்பேசிக்கொண்டுதங்களிருப்பிடஞ்சென்றனர்கள் அவ்வேதியர்கள்சென்றபின்பு சனிபீஸ்வரபகவான் புரூரவச்சக்கிரவர்த்தியினிடத்திற்குவந்து அரசனைக்கண்டுமுன்னாட்டம்மிடத்திற்குவந்தபோதுமுதுமைநலமோ இளமைநலமோவென்று கேட்டதற்கு நீர்இளமை நலமென்றுசொன்னீர் அன்றுமுதலாக இன்றையவரைக்கும் நான்செய்துவந்த கொடுமைகளையெல்லாம் பொறுத்தீரோ நீரோ சத்தியகுணசீலரென்றனுக்கிரகிக்கும்போது சிவபெருமான் மகாவிஷ்ணு பிரமதேவன்முதலானபேர்களும் பிரசன்னமாகவந்து அதிகபிரியத்துடனே முன்னிலுமதிக திவ்யசொரூபமான தேககாந்தியுற்று கைகால்வளர்ந்து உனதுவாக்குத் தப்பாமல் அரசாட்சிசெய்து முடிவில் தெய்வபக்தியும் பெற்று சாயுச்சியபதவியைப் பெறுவாயென்று ஆசீர்வதித்துப்போயினன்.

பின்பு அரசன்தேவியான புஷ்பாஞ்சலி தேவர்களைக்கண்டு கண்களிகூரச் சக்கிரவர்த்தி சனீஸ்வரபகவானைப் பார்த்து தமதுதிருவுளத்தினாலே சகலதேவர்களையும் காணப்பெற்றோமென்று தெண்டனிட்டு நிற்கையில் சனீஸ்வரபகவான் என்னுடையகாலம் இன்றுடனே சரியென்று சொல்லுகிறபோது சரஸ்வதியம்மன் சக்கிரவர்த்திக்குத் தேவாமிர்தங்கொண்டுவந்தபோது சனீஸ்வரபகவானைப் பார்த்து நீரெந்நாளுமிந்தச்சக்கிரவர்த்தியினிடத்திலிருந்து ரட்சியுமையா வென்றுகூறினள் அதற்குநல்லதென்று அங்கீகரித்துக்கொண்டு அநேகவரங்களைக்கொடுத்துவிட்டுச் சக்கிரவர்த்தியினிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு அந்தர்த்தியானமாய்ப்போய்விட்டார்.

கேளும் தருமநந்தன இதுகளையெல்லாம் பார்த்திருந்த புஷ்பாஞ்சலி மிகுந்த பேரானந்தத்தை யடைந்து முன்னிலுமெண்மடங்கதிகமாக நாயகனிடத்தில் பிரிவாற்றுமையை மேற்கொண்டிருக்கும்போது ஒருநாள்மனதில் புத்திரபாக்கியத்தின்பேரில் இச்சை ஜெனித்ததைச் சக்கிரவர்த்தியறிந்து அவள்மனதின்படி புத்திர அபேட்சையை நிறைவேற்ற வேண்டுமென்றுகருதி இருவரும் மதனசாத்திரத்தில் சொல்லியபடி கிரீடித்து ஓர்புத்திரனைப் பெற்றுச்சுகத்திலிருக்கு

ம்போது சரஸ்வதியம்மன் சக்கிரவர்த்திக்குத் தேவாமிர்தத்தைக்கொண்டுவந்து கொடுத்துவிட்டுக் காட்டின்வழியாகப்போகிறபோது அவ்விடத்திலெதிர்ப்பட்டவர்கள்பார்த்தம்மா விருத்தாப்பியமாக விருக்கின்றீர்களே எங்கிருந்து வருகிறீர்களென்றுகேட்க அப்பாநானிந்த வழிக்குமேற்கே ஒருநாழிகைதூரத்தில் தெய்வீகம்விளங்குகின்றது அவ்விடத்திலிருந்து வருகிறேனென்று சொல்லிப்போயினள் அவர்களந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு நாம்போய்ப் பார்க்குமளவிலந்த அம்மாள் சொன்னவார்த்தைகளுண்மைதானென்று பட்டணமெங்குமிருந்த தெய்வீகத்தினுடைய பெருமைகளைச்சொல்ல அதைக்கேட்டிருந்த பேர்கள் தங்கள்தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று தெய்வீகத்திற்சென்று அவரவர்கள் பெற்றுக்கொண்ட வரங்களையும் நகரமெங்கும் பிரசித்தமாகச் சொல்லிக்கொள்வதைக் கேட்டசெவிடு-குருடு-ஊமை-முடவா-குஷ்டரோகிகள் முதலானபேர்களு மவ்விடத்திற்குச்சென்றந்த தெய்வீகத்தைக் கண்டு தங்களுக்கு நேரிட்டிருக்கிற துன்பங்களைத்தேர்ந்தா அவரவர்கள் நினைத்துவந்தபடியே யத்துன்பங்கள் நீங்கக்கடவதென்று கட்டளையிட அவர்களுக் கந்நோய்நீங்கிந்து சுகமுற்றிருந்தனா. இவைகளையெல்லாம் பார்த்திருந்தமனைவியாகிய புஷ்பாருசனி சிவசிவா உமதுதிருவிளையாட்டோவென்று தியானித்துக்கொண் டிருக்கும்போது சக்கிரவர்த்திதன்தேவிக்குச் சிவகதைகளாகிய ஆகமபுராணங்களை யெடுத்தோதிச் சிலவிரதங்களை யனுஷ்டித்துவரும்படி கட்டளையிட்டுப்பின்பு வனங்களிலும மலைகளிலுமுண்டாகிய வதிசயங்களைந் தேவிக்குச் சொல்லிக்கொண்டு வருகையில அவ்வனத்தில் சஞ்சரிக்கின்ற ரிஷிகள் தபோதனர்களிவர்களைக்கண்டு வினவிச் சில ஞானப்பிரசங்கங்களைப் பேசிக்கொண் டிருக்கையிலே செய்தவராசன் தன்குமாரத்திக்குக் கல்யாணம்பண்ணின நாள்முதற்கொண்டு மனவருத்தத்தால் அரசாட்சி செலுத்தாமல் மனோவியாகூலத்துட னிருக்கும்போ திவ்விடத்தில் தெய்வீகம் விளங்குகிற சமாசாரத்தை மந்திரிகளரசனுக்குத் தெரிவிக்க அரசனும் மந்திரியும் ரதகஜதுரகபதாதிகளுடன் வனத்திற்குவந்துகாட்டிலேயிருக்கின்ற இருளர் மறவர்களைப்பார்த்து எனகுமாரத்தியையும் காட்டிற்குப்போகும்படி யனுப்பிவிட்டோமவர்களைக் கண்டபேருண்டோ வென்றுகேட்க அவர்கள்காட்டிலே வந்தநான்முதற்கொண்டு நாங்கள்பார்த்ததில்லை இப்போது இவ்விடத்தில் ஏதோ ஒருகோயில் நூதனமாக வுண்டாயிருக்கின்றது அதைப்பார்க்க ...
யிரஞ் சிரசைப்படைத்த ஆதிசேஷனுமேலப முடியாததாகவே ...

நருதுவருகளுாக ளவர்களெங்கு முலாவிப்போட்டு மறுபடியும
கோயிலுக்குள்ளேபோகிறார்கள் அவிடத்தில் தெய்வீகம்விளங்கு
சகல ஜெனங்களும் வந்து அவரவர்கள் நினைத்துவந்த காரியங்
அனுகூலப்படுகிறதென்றுசொல்லலிதுகளைக்கேட்டஅரசன் அந்த
வீகத்தைப் போய்ப்பார்த்து வருவோமென்று அரசனும் மந்தி
ாகச் சமீபத்தில்வந்து பார்க்குமளவில் சொர்க்கலோகத்திலு
ண்மடங்கதிகமாக விருக்கின்றதை நோக்கி ஆச்சரியமடைந்து
விடத்தில் நாம்முன் நாலைந்துதரம் வேட்டைக்கு வந்திருந்
ும் அப்போதிந்தப்புதுமைகளில்லை இப்போதேதோ நூதனமாக
ுக்கின்றது இதனுண்மையை விசாரியுமென்று கட்டளையிட மந்
அவ்விடத்திலிருக்கின்றபேர்களை யழைத்து இந்தஆலயத்திலிருக்
ற தேவதையாதென்றுகேட்க அவர்களெங்களுக்கொன்றுந் தெரி
தென்று சொல்லினர் அதை அரசனுக்குத்தெரிவிக்க அரசனும்ம
ிரியுமிந்தத் தெய்வீகத்தினுடைய உண்மை நமக்குத் தெரியவேண்
ாதலால் கொஞ்சநேரமிருந்து பார்ப்போமென்று நிற்கின்ற தரு
ாத்தில் முடவனைவ னந்தக்கோயிலுக்குள் நுழைந்ததைப்பார்த்
இருவருமிவனால் நமக்கு உண்மை வெளியாகுமென்று அவர்கள
னைப்பார்த்துக் கொண்டிருந்தனர்கள் அப்போது முடவனுக்குக்கா
ங்கையுமவளா வெளியில்புறப்பட்டுவருவதைக்கண்டு அரசனுட்மந்
ிரியுமவனைக்கேட்க அவன் இந்தக்கோயிலேபசுந்திருமேனியாகப்பர
மேஸ்வரனும் பார்வதியும்போலே திவ்வியசொரூபத்துடனே இரண்
பேர்க ளிருக்கிறாக ளவர்களைக்கண்டு தெண்டம்பண்ணிச் சுவாமி
தீரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு உன்கருத்தி
மென றனுக்கிரகஞ்செய்ய அப்படியே முடமுந்தீர்ந்து வந்
று சொல்ல வரசனிதுகளைக் கேட்டபடி தெய்வீகம்விளங்
லத்திற்குவந்து போகலாகாதென்றவ்விடத்தில் நடந்தவற்
ும அரசன தன்தேவிக்குச் சொல்லியனுப்பத் தூதுவர்க
அரசன்தேவியிடத்தில் இங்குள்ள வதிசயங்களையெல்லாம்
கேள்விப்பட்டு மிக ஆவலோடு புறப்பட்டு அரசனிடத்திற்
ன் மனைவியைப்பார்த்துப் பெண்ணே இவிடத்தில் தெய்

அப்போது புரூரவச்சக்கிரவர்த்தி அவர்களைப்பார்த்து இவ
நமதுமாமனும் மாமியுமென்றுணர்ந்து அவர்களிருவருக்கும்
கள் நமஸ்காரஞ்செய்து நின்றனர்அப்போது செய்தவராசன்
றவாகளைப்பார்த்து மிக ஆவலுடன் கேளுமையா சிலநாளைக்(
என்னுடைய குமாரத்தியையும் மருமகனையும்வனத்திற்குப் போ
படியனுப்பிவிட்டேன் அவர்களைக்காணுமல்தேடிவந்தோமானை
ஙகளுக்கு உண்மைவிளக்க வேண்டுமென்றும், அன்றிவந்தவி
ல் நீங்களிருவருமெங்களை நமஸ்காரஞ் செய்துகொண்டகாரண
யும் தெரிய வனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று வினவ அதற்
க்கிரவர்த்தி குறுநகைகொண்டு நீங்களொன்றுக்கு மஞ்சவேண்
தில்லை நாங்கள்தான் உம்முடையபெண்ணும் மருமகனுமென்று
ல்லினர் செய்தவராசன் அவர்க்குக் காலுங்கையுமில்லையே யெப்
மாக வளர்ந்ததென்று கேட்கச் சக்கிரவர்த்தி சாம்பவமூர்த்தி
டைய அனுக்கிரகத்தினுலே பழையபடிகாலும் கையும்வளர்ந்து
விடத்திலிருக்கிறேனென்றுசொல்ல இதுகளையெல்லாங்கேட்ட(
தவராசன்மிகவாச்சரியப்பட்டுச்சந்தோஷித்துக்கொண்டிருக்கிற
ணத்தில் சரஸ்வதியம்மனும் தேவாமிர்தத்தைக்கொண்டுவர அந்த
மனைக்கண்டு சக்கிரவர்த்தியும் புஷ்பாஞ்சலியும் நமஸ்காரம் பண்
நிற்கச் சரஸ்வதியம்மனு மிவர்களைப்பார்த்து இவர்களாரென்
கப் புஷ்பாஞ்சலி என்மாதாபிதாக்களென்று சொல்லினள்
ன்று வந்திருக்கிறவர்களுக்கு ஒருதளிகையன்னத்தைப் பர
டுத்துப்போயின ளிதைச் செய்தவராசனுணர்ந்து மருமகனு
தரத்தையும் தெய்விகத்தினுடைய உண்மைகளையுங்கண்டு
சந்தோஷமுண்டாகி இவ்விடத்தில் ஒருபட்டண முண்டாக்க
மென்று யோசனைபண்ணிக்கொண்டு இவிடத்தில் நடந்தமகி
யெல்லாம் பரதேசிகாவற்செட்டியாருக்குத்தெரிவிக்கச் செ
இந்த சமாசாரங் கேட்டவுடனே மிகுதியும் சந்தோஷத்துட
துகோயிலுக்குட்சென்று சக்கிரவர்த்தியையு மவர்தேவியை
ய்விகமாகப்பாவித்து நமஸ்காரம்பண்ணினர் அவரைச்சக்கி
யெடுத்து மார்புடனணைத்துக்கொண்டு ஐயாசாம்பவமூர்த்தி
யவனுக்கிரகத்தினுல் பழையபடி காலுங்கையும்வளர அனு

அதன்பின்பு செட்டியாரும்செய்தவராசனு மவர்தேவியு மந்திரியு மிவர்கள்கால்வருமொருபட்டணம் நியமிக்கவேண்டுமென்றுகருதி நக்காமெல்லைகளையெல்லாம் சீர்திருத்தி நல்லதிதிவாரயோககரணநட்சத்திரங்கள்கூடியசுபதினத்திலொருபட்டணம்கட்டி யதில்மாடமாளிகை கூடகோபுரங்களியற்றிப் பிர்மக்ஷத்திரியவைசியசூத்திரரென்று சொல்லப்பட்ட நான்குவருணத்தார்க்கும் வீதிகளும்தேவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் சந்நிதிவீதிகளும் யாகசாலை யக்யசாலைகளும் யோகசாலைகளும் அவ்வசாலைகளும கடைவீதிகளுங்கட்டி மற்றபேர்களுக்குச் சத்திரம்கட்டியமைத்து அந்தபட்டணத்திற்குத்தெய்விகபுரமென்று பெயரிட்டு அந்தபட்டணத்தைத் தன்மருமகனாகிய புரூரவச்சக்கிரவர்த்திக்கு மகுடந்தரிப்பித்துத்தெய்வீகராசனென்றுநாமகரணஞ்செய்ய மனுநீதிதவறாமல் செங்கோல்நடாத்திக்கொண்டு மந்திரி பிரதானிகள்சூழ ஆறிலொருகடமை வாங்கிக் குறைவில்லாமல் அரசுசெய்து வந்தான்.

அப்போதிவிடத்தில் தெய்வீகம்விளங்குகிறதென்றும்நூதனமாகாராணுவங்கள்வந்திருக்கின்றனவென்றும்தெரிந்துதேசாந்தரங்களிலிருந்துவந்தபேருக் கவரவர்களுக்குத்தக்கதொழில்களுங்கொடுத்து நடப்பித்து வருகிறகாலத்தில் சக்கிரவர்த்தியினுடைய பழைமையான மதிதீரனென்கிற மந்திரியானவன் தன்னுடைய அரசனும ராசபத்தினியும்பிள்ளைகளும் இரவிற்போனார்களே அவர்களைக்காணேமேயென்றுஅரண்மனையந்தப்புரங்களையெல்லாஞ்சோதித்துங்காணாமையால் என்னுண்டவனை எப்போது காண்பேனோ கண்டாலல்லது உயிர்வாழேனென்று ஆண்டிவேடம் பூண்டுகொண்டு பூமியெங்குந் தேடிக்காணாமையால் வியாகூலப்பட்டுக்கொண்டு அந்நகரத்திற்கு வருகிறபோது அவ்விடத்தில் தெய்வீகபுரமென்றும தெய்வீகம விளங்குகிறதென்றும் பேசிக்கொள்வதைக் கேள்விப்பட்டு அப்பட்டணமேவந்து அவ்விடத்தில் நடக்கின்ற புதுமைகளையும் பட்டணத்து அதிசயங்களையுங் கண்டு ஆச்சரியப்பட்டு நம்மிட சக்கிரவர்த்தியிருக்கின்ற நகரமானது இப்படிதானிருக்குமென்று நினைத்துக்கொண்டு கடைவீதிவர அவ்விடத்திலும்இந்த தெய்வீகம் விளங்குகிறதைக் குறித்துப் பேசிக்கொள்வதைக் கேள்விப்பட்டு மந்திரி நம்முடைய சக்கிரவர்த்திதானென்று நிச்சயித்து அரண்மனைக்குச்செல்லும்போது சக்கிரவர்த்தியானவர் கொலுச்சிங்காரமா யிருக்கிறதைக்கண்டு தன்னுடைய அரசனென்று மதித்து மந்திரியும் ஆண்டிவேடத்தை மாற்றிக்கொண்டு காவல்கடந்துபோய் சக்கிரவர்த்திக் கொலுச்சிங்காரமானவிட

த்திற்கு வந்து சக்கிரவர்த்தியைத் தரிசித்து இவரே நம்முடைய ஆண்டவரென்று சமீபத்திற் போய் தேவரீரிங்கே யிருக்கிறீரோ அடியேன் மதிதீரனல்லவாவென்று நமஸ்காரஞ்செய்ய சக்கிரவர்த்தியும் மந்திரியையெடுத்துத் தழுவிக்கொண்டு யிருக்கச்சொல்லிப் பட்டணம் விட்டு எப்போ புறப்பட்டீரென்று கேட்க மந்திரிதேவரீர் பட்டணம்விட்டுப் பிரிந்தநாள்முதல் அடியேனும் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு உலகமெங்குந்தேடி எங்குங்காணமல் இவ்விடத்திற் கண்டேனென்று சொல்ல சக்கிரவர்த்தி மந்திரியை ஸ்நானம் பண்ணிவரச்சொல்லி சகல வஸ்திராபரணங்களுங் கொடுத்து போஜனம் செய்வித்து ஆதிபத்தியமும் நடப்பித்துக் கொண்டிருக்கச் சொல்லித் தாம் பிரிந்தநாள் முதலாக இப்போது தன்னைக் கண்டநாள்வரைக்கும் தாம்பட்ட துன்பங்களையெல்லாம் மந்திரிக்குச் சொல்ல மந்திரியும் தான்போய்த்திரிந்த தேசங்களையெல்லாஞ் சொல்லிவிட்டுச் சக்கிரவர்த்தியைப் பார்த்து என் தாயாரையும் பிள்ளைகளையும் போய்த் தேடிவருகிறேனென்று கூறச் சக்கிரவர்த்தி அவர்களின்னம் சில காலத்திற்குப்பின்பு இவ்விடத்திற்கு வந்து சேருவார்களென்று சொல்லி மந்திரியைத் தனதருகில் இருத்திக்கொண்டனன்.

சிலநாள் சென்றபின்பு ஆயர்பாடியில் செங்கண்மாலென்கிற இடைச்சி வீட்டினில வளர்ந்துகொண் டிருக்கிற இரண்டு பிள்ளைகளும் தங்களை அருமையாக வளர்த்த தாயாரருகேசென்று அம்மா நாங்க ளிந்நாள்வரைக்கும் உன்னுடைய கை அன்னத்தைப் புசித்து வளர்ந்தோம் இப்போது தெய்வீகபுரத்தில்தெய்வீகராஜன் இராணுவங்கள் வைத்து அவரவர்களுக்குத் தக்க சம்பளம் கொடுக்கிறதாய் கேள்விப்பட்டோம் ஆகையால் எங்கள் குருசாமி சொன்னவார்த்தையானது அந்தவிடத்தில் விளங்கவேண்டும் நாங்கள் போய் எங்கள் சேவகத்தையுங் காண்பித்து எங்களுடைய குறைகளையுந் தீர்த்துக்கொள்ளவேண்டுமம்மா வென்று கேட்க இடைச்சி அப்பா உங்களுக்கென்ன குறை என்னிடத்தில் அளவற்ற பாக்கியங்களிருக்கின்றது இது உங்களுடைய பாக்கியந்தானே நீங்களேன் ஒருவரிடத்திற்குச் சேவகத்திற்குப் போகிறீர்கள் நீங்களொரு பட்டணமொன்றியற்றி யதில் சிலராணுவங்களை வைத்துக்கொண்டு அரசாட்சி செய்ய வல்லமையில்லையா அப்படிச்செய்தால்நலம் நீங்கள் ஒருவரிடத்திற்குச்சேவகத்திற்குப் போவது யுக்தமல்லவென்று மிக்கஅவலோடுகேட்டுக்கொள்ள இராஜகுமாரர்கள் தாயே நீங்களிந்தப்பட்டணத்தில் அரசாட்சி செய்துகொண்டு வந்தால் இந்தப் பட்டணத்தையாண்டு

கொண்டிருக்கிற அரசன் கேள்விப்பட்டால் ஆக்கினைநேரிடும் இதுக
ளெல்லாம் இராஜகுமாரர்கள் செய்யவேண்டியகாரியங்கள் அதுவும்
வருகிறபோது தானே வரும் இப்போதொன்றுஞ் செய்யப்போகாது
ஆகையால் நாங்கள்நூதனமாகச் சேவகத்தொழிலுக்குப்போகிறதை
த்தடைபண்ணவேண்டாம் பிள்ளைகளாய்ப் பிறந்தவர்கள்கீர்த்தியைச்
சம்பாதிக்கவேண்டும் இல்லாவிட்டால் இறப்பதே நலம் சரீரமே நீரி
ன்மேற்குமிழி இன்றைக்கோ நாளைக்கோ சற்றுநேரத்திற்கோ தெரி
யாது அதற்குமுன் வீரத்தினாலும், வித்தையினாலும், புத்தியினாலும்,
எவ்விததந்திரத்தினாலேயாகிலும்,

நாலடியார்.

"அறிவ தறிந்தடங்கி யஞ்சுவதஞ்சி
யுறுவ துலகுவப்பச்செய்து பெறுவதனா
லின்புற் றுவாழு மியல்புடையாரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்தலரிது"

என்பது போல உலகத்தில் சன்மார்க்கத்திற் கீர்த்திபெற
வேண்டும் அப்படி கீர்த்தி பெறாதவன் ஜென்மம் என்ன ஜென்
மம் ஆகையால் எங்கள் பேரில் அன்புகூர்ந்து தடைசெய்யாம
லனுப்புந்தாயே யென்று நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்ள இடை
ச்சியானவள் நமஸ்கரித்த பிள்ளைகளை யெடுத்தாசீர்வதித்து மிக
வும் ஆவலோடு ஆயுதசாலைக்குட் சென்று ஆயுதங்களைத் தன்
கையினால் எடுத்துக்கொடுத்து அப்பாநீங்கள் சேவகத்திற்குப்போய்
சுகசீவியாய் வாருங்களென்று வாழ்த்தியனுப்ப அந்தராசகுமாரர்கள்
இரண்டுபேரும் ஆயுதபாணிகளாக நல்ல சுபதினத்தில் புறப்பட்டு அ
னேகங்காடு மலை வனாந்திரங்களைக் கடந்து தெய்வீகபுரம்போய்ஒரு
ஔவையார்வீட்டில்வந்துதாங்கள்நடந்துவந்தஆயாசத்தைத்தீர்த்துக்
கொண்டுமறுநாள் உதயத்தில் எழுந்திருந்துதங்கள் நியமநிஷ்டைகளை
முடித்துக்கொண்டு சாப்பிட்டு ஆயுதபாணிகளாய் அரண்மனைக்குப்
போகவேணு மென்று யோசித்திருந்தனர்.

அப்படியிருக்க தெய்வீகராசனும் உதயத்தி லெழுந்திருந்து நிய
மநிஷ்டைகளைமுடித்துக்கொண்டு உயர்வெண்சாமரம் வீசகட்டியக்கா
ரர்கள் கட்டியஞ்சொல்ல அனேகம்பெண்கள் எச்சரிக்கைசொல்ல
கொலுமண்டபத்திற்கு வந்துசிங்காதனத்தில் வீற்றிருக்குந் தருண

த்தில்ஔவையார் வீட்டிலிருக்கின்ற இராசகுமாரர்கள் ராணுவங்கள் வைகுமிடத்திற்குவந்து அவ்விடத்தில்காவலாக விருக்கின்றபெயரைப் பார்த்துஇராசகுமாரர்களைப்போலிருக்குதென்றுணர்ந்துநீங்கள்சேவகத்திற்குவந்தீர்களேசம்பளமென்ன கேட்பீர்களென்றுகேட்க அவர்கள் நாங்கள் அரசன் சேர்வையாயிருப்போம் நிதம்இரண்டாயிரம் பொன் சம்பளங்கொடுத்தா லிருப்போமென்றுசொல்ல அவர்களதனைக்கேட்டு இது அரசனறிய நடப்பிக்கவேண்டிய காரியமென்று இரண்டுபிள்ளைகளையும் கொணுமுன்கொண்டுபோய் அரசனிடம்விட்டு அவர்கள் கூறியவற்றையெல்லாங்கூற அரசனப்பிள்ளைகளைப்பார்த்துக் கண்ணீர்ததும்பி.

குறள்.

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழார்வலர்
புன்கணீர் பூசறரும்"

என்பதுபோல நீங்களார் எண்பிள்ளைகளைப்போலிருக்கிறீர்களே யென்றுகேட்க அவர்கள் யோநாங்கள் இடைச்சிவளர்க்க வளர்ந்தோம் இப்போது சேவகத்துக்குவந்து தேவரீரைக் கண்டோம் எங்களுக்கு ஒருதொழிலைக்காட்டி லேற்றத்திலைநாங்களிருவருமிருப்போமென்றுசொல்ல அரசனும் நல்லதென்று அவர்களிரண்டுபேருக்கும் தினசரி இரண்டாயிரம்பொன் சம்பளம் நியமித்து தனதருகில் வைத்திருந்தான் இராசகுமாரர்களிரண்டாயிரம் பொன்சம்பளத்தில் தேமவர்கள் சாப்பிட்ட செலவுபோகமற்ற பொனனெல்லாவற்றையும் தானதருமம் செய்துசெலவிட்டு ஔவையார்வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு அரசனைப் பிரியாமலனுதினமுங் காத்துக்கொண்டிருந்தார்கள்.

இதுநிற்க ஒரு நாளந்தப்பட்டணத்திலிருந்துசிலமனிதர்கள்கடற்றுறையில் வர்த்தகம்பண்ணப் போனவர்கள் தெய்வீகம் விளங்குகிறசமாசாரத்தையும்தெய்வீகராசனுடைய நீதியையும்பேசிக்கொண்டிருக்கும்போது இதுகளையெல்லாங் கேட்டிருந்த நவகோடி நாராயணசெட்டியார்நீரிலுநெருப்பிலும்ஆயுதத்திலும் சலனமில்லாமலிருக்கிற இப்பேழையை அந்த தெய்வீகனிடத்திலேயாகிலும் கொண்டுபோய்த்திறந்துகொண்டுவருவோமென்று அப்பேழையைப் பல்லக்கின் மீதுவைத்து தானுமொருபல்லக்கிலேறிக்கொண்டு தெய்வீகராசனுக்

குக்காணிக்கைமுதலானதுகளை யெடுத்துக்கொண்டுதன்பட்டணமுங் கடந்து தெய்விகபுரம்வந்து அரண்மனைக்குச் சென்றுதெய்விகம் விளங்குகின்றசபையில் அந்தப்பேழையையும் காணிக்கைமுதலானதுகளையும் வைத்துநமஸ்காரம் பண்ணிநிற்கையில் தெய்விகராசன் செட்டியாரைப் பார்த்து இப்பேழையேது இப்பேழையில் திவ்யசொரூபத்துடன் விளங்குகின்ற பெண்யாரென்று கேட்க செட்டியார் இது தெய்விக மென்பதற்குச் சந்தேகமில்லைநாமுண்மையைவெளியிடவேண்டுமென் றுகைகட்டிக்கொண்டுமகாபயபக்தியுடனேசொல்லுகிறன் சுவாமி இந்தப்பேழையிலிருக்கிறவர்கள் கூலியாளுக்குகணக்கெழுதினவன் பெண்சாதி அவள்கூலிவாங்க வந்தபோது அவளுடைய ரூபசவுந்தரியத்தைப்பார்த்து இச்சைகொண்டுஇவள் ஏழையல்லவோ இவளுக்கு அன்னவஸ்திரத்திற்குக் குறைவின்றிநடப்பித்தால் நம்முடையவார்த்தைக்குள் ளாவாளென்று பொல்லாதநினைப்பு நினைத்துக்கொண்டுகூலியை அறைவீட்டில் வைத்துகாவற்காரரிடத்தில் கணக்கப்பிள்ளை பெண்சாதி கூலிவாங்கவந்தால் நீவராமையால் செட்டியார் உன் கூலியைமாத்திரம் அந்தப்புரத்தில் அறைவீட்டில் போட்டுப்போனர் நீபோய் எடுத்துக்கொள்ளென் றுசொல்லுங்கள் அவளந்தப்புரத்திலந்த அறைவீட்டில் புகுந்தபின்பு கபாடபந்தனம் செய்யுங்களென்று கட்டளையிட அவர்களுமப்படியே செய்தார்கள் அதன்பின்பு நான் அந்த அறைவீட்டில்வந்து பார்க்குமளவில் காணமையால் அந்தவீட்டிலிருந்த பேழையைத் திறக்கப்போனல் திறக்கக்கூடவில்லை கோடாலியால்வெட்டிப்பார்ப்போமென் றுவெட்ட அதற்கு மசையாமலிருக்கக்கண்டு அப்பேழையிருந்த வீட்டைமாத்திரம் கொளுத்த அப்பேழைமாத்திரம் வேகாமல் வீடுவெந்துபோனதைக்கண்டு அந்தநகரத்தரசனுடைய ஆக்கினைகிடைக்குமென்று பயந்து அந்தமானென்கிற தீவுக்குப்போகிற கப்பலில் இப்பேழையை வைத்துக்கொண்டு போய்சமுத்திரத்தில்போட்டு வருவோமென் றுகருதி எடுக்கும்போது இப்பேழையிலிருக்கிற பெண்ணனவள் ஓ செட்டியாரே என்னையேன்சமுத்திரத்திற் போடப்போகிறீர் போட்டாலும் உம்மைவிருதாவில் விட்டுப்போகிறதில்லையெனக்கொருநோன்புண்டு அந்த நோன்பு ஏழுவருஷம்செல்லுகிறவரையில் ஒருவர்முகத்தையும்பார்க்கவொண்ணது ஆகையால் நோன்புமுடிந்தவுடனே இப்பேழைதானேதிறக்கப்படுமென்று சொல்லினள். அதற்குச் சந்தோஷப்பட்டு அந்தமானென்கிற தீவுக்குப்போகிறகப்பலில் வைத்துக்கொண்டுபோய் அவ்விடத்தில் ஒரு உப்பரிகைகட்டி அதில் அப்பேழையைவைத்துப் பாதுகாத்துவருகிறநாளில் ஒருநாள் உபரிஷரென்னும் ரிஷியானவர்

வந்தார் அவரைக்கண்டு நீங்களாரென்றுகேட்க நான்தேசசஞ்சாரம் செய்கிறவனென்று சொல்ல நீங்கள்வாசஞ்செய்து கொண்டுவந்தபட்டணங்களில் ஏதாகிலுமதிசயங்களுண்டாவென்று கேட்டதற்கு அவர்தேசங்களினுடைய மகிமைகளையும் கீர்த்திகளையுஞ் சொல்லிவிட்டுப்பின்பு விதர்ப்பதேச மென்றொரு பட்டணமுண்டு அந்தப்பட்டணத்தை யாண்டுகொண்டிருந்த சக்கிரேஸ்வரனாகிய புரூரவச்சக்கிரவர்த்தியினுடைய கீர்த்தியை என்னொருநாவினால் சொல்லிமுடியாது அப்படிக்கொத்த சக்கிரேஸ்வரன் சனிபகவான் சோதனையினால் மிகவுருத்தப் படுகிறானென்று சொல்லினர் அதைஅநுகியோடந்தமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டதற்கு அந்தரிஷிசொல்லுகிறார் அவர் ஐம்பத்தாறுதேசத்துக்கும் சக்கிரேஸ்வரனாகவிருந்து சனிபகவான் சோதனையினால் நாடிழந்து பட்டணத்தைவிட்டு மறுபட்டணத்திற்சென்று கூலியாளருக்காளாகிப் பெண்சாதியையிழந்து பிள்ளைகளையிழந்து பின்பு தானும்வெள்ளத்தில்கப்பட்டு இடையருக்காளாகி ஆட்டுக்குட்டிமேய்த்துக்கொண் டிருக்கையில் திருடனென்று கட்டிக்கொண்டு போய் அந்தநகரத்தரசனுக்கிணைப்படி ஒருகையுங்காலும வாங்கிவிட்டார்களென்று சொன்னவுடனே இப்பேழைசற்றேயசைய அதுகண்டுநான் இவனின்னமுமுயிருடனிருக்கிறானென் றறிந்தந்தரிஷியீஸ்வரருக்குச் செலவுகொடுத்தனுப்பிவிட்டு இப்பேழையைப் பாதுகாத்துக் கொண்டுவந்தேன்.

அப்படி சிறிதுகாலம பாதுகாத்து வரும்போது தெய்வீகபுரத்தில்தெய்வீகம் விளங்குகின்றதாய்கேள்விப்பட்டுயகாசந்தோஷத்தையடைந்து இவ்விடத்திலாவது கொண்டுபோய் பேழையைத்திறந்துகொள்ளலாமென றெண்ணங்கொண்டு வந்தேன் சுவாமியென்றநேகவிதமாய்த் தோத்திரம்பண்ணி நிற்கையில் தெய்வீகராஜன் இவன் நம்முடைய பெண்சாதிதானென் றறிந்துகொண்டு அருகிலிருக்கிற ராஜகுமாரர்களைப்பார்க்க அந்த இராஜகுமாரர்கள் ஆச்சரியமுற்று நம்முடைய குருசாமிசொன்ன வாக்குக்கும் இப்போதுசெட்டியார் சொல்லிக்கொண்டு வந்ததையும் யோசித்தால் நம்முடையதாயாகவேண்டுமென்று நினைத்துக்கொண்டு மௌனமுற்றிருக்கத் தெய்வீக ராஜனருகி லிருக்கிறவர்களைப் பார்த்து அப்பேழையைக் கோடாலியாலேயாவது மற்ற எந்தவிதத்தினாலாவது திறவுங்களென்று கட்டளையிட்டான் அவர்களப்படியே கோடாலியாலே வெட்டியும் அப்பேழையின்மீதில் ஒருதழும்புபடாதிருப்பதைக்கண் டாசனிடத்தில்

தெரிவிக்க அரசன் மறுபடியும் பேழையை ஆணிக்கும் அசைவுபடா தகருங்கல்லைக்கட்டி ஆழமான ஆற்றில்கொண்டுபோய்ச் சலத்தில்விட்டு அழுத்திவிட்டு அவ்விடத்தில் சிறிதுபேரைக்காவலாக விருக்கச் சொல்லிக்கட்டளையிட அவர்களக்கட்டளைப்படி சிறிதுநாள் காவலாயிருக்கும்போதுகோட்டலிக்கும நெருப்புக்கு மறைவுபடாமலிருக்கிறவள் தெய்வமோ அல்லது பூதமோ ஏதோவொன்று புறப்பட்டு நம்மைக்கொன்றுபோடுமோ தெரியாதென்றுபயந்து அரசன்சமுகத்திற் சென்று ஐயா அங்கேருக்குப் பயங்கரமாயிருக்கின்றபடியால் நாங்களப் பேழைக்குக்காவலாகவிருக்க மாட்டோமென்று தினசரி ஆயிரம்பொன்வாங்குகிற சேவகரைக்காக்கச்சொல்லுங்களென்று விண்ணப்பஞ்செய்துகொள்ள அரசனதைக்கேட்டு அந்த ஊருக்கிலிருக்கிற பிள்ளைகளைப் பார்த்து நீங்கள் ஒருவரும் அறியாலிருக்கிற பேழையினிடத்திற்குப்போய்க்காவலாகவிருங்களென்று பூசியாபிக்க அப்பிள்ளைகளப்படியே மறுநாள்போய்க் [illegible] இரண்டுபேரும் ஒருநாள் ராத்திரியில் [illegible] ஆற்றில் மூழ்கிக்கிடக்கிறபேழை [illegible] கையில் [illegible] தலையணைப்பாது [illegible] பயங்கரமாக விருக்கின்றதென்று சொன்ன தம்பியைப்பார்த்து அப்பா பேழையிலிருக்கிறவள் நம்முடைய வமசத்தை [illegible] பல்லாயல்லவோ [illegible] நீயொன்றுக்கும் பயப்படவேண்டாமென்று கூறினான் தம்பி தமையனைப் பார்த்து [illegible] இருக்குமானால் ஒருகதைசொல்லவேண்டுமென்று [illegible] சரித்திரமே ஒருகதையாகவிருக்கின்றது அதை மறந்துவிட்டுச் சொல்கிறேனென்று சொல்லுகிறான்.

அப்பா சகோதரனே இந்திரபுரமென்றொரு பட்டணமுண்டு அந்தப்பட்டணத்தை யரசாட்சிசெய்துகொண்டு வந்தமனுவிக்கியான ராஜனென்றும் புரூரவச்சக்கிரவர்த்தியென்றும் இரண்டுநாமதேயத்தைப்பெற்ற சக்கிரவர்த்தியானவர் செங்கோல்நடாத்தி வருகின்றகாலத்தில் சனீஸ்வரபகவான் சோதனையினால் நாடுவிட்டுகாடுசேர்ந்து மறுதேசம்போய்க் கூலியாளருக்காளாகி நமமுடைய தாயையும் நம்மையுமிழந்து காணும் ஆற்றுவெள்ளத்திலகப்பட்டு இடையருக்காளாகி ஆட்டுக்குட்டிகளைமேய்த்துக்கொண்டிருக்கிறகாலத்தில்திருடனென்று ஓர்காலுங்கையு மிழந்து சரஸ்வதியம்மன் கிருபையினால் பரதேசி காவற்செட்டியார் வீட்டிலிருக்கிறரென்று நம்முடைய குருசாமி சொன்னார் அதுவுமல்லாமல் ஆறறங்கரையிலடித்துக்கொண்டுபோன

தெனக்குத்தெரியும் நானறிந்தமட்டு முனக்குத் தெரிவித்தேனென்று சொல்லினன்.

இப்படி கதை சொல்லிக்கொண்டிருக்கிற தருணத்தில் அப்பேழையிலிருக்கின்ற பெண்ணானவள் இவர்கள் நம்முடைய பிள்ளைகள் இல்லாவிட்டா லானைக்குமசைவுபடாதகல்லையும் இழுத்துக்கொண்டுபேழைமிதந்து வருமோவென்று மகாசஞ்சலப்பட்டு மனமுருகிச் சொல்லுகிறாள் அப்பாபிள்ளைகளே இப்போது சொல்லிக்கொண்டுவந்த கதையை இன்னமொருதரம் சொல்லவேண்டு மென்றுகேட்க அவர்களப்படியே ஆதியோடந்தமாக நடந்தவற்றையெல்லாங் கூறினர் அப்போ அப்பேழையி லிருக்கின்ற பெண்சாதி நீங்களாரென்றுகேட்க நாங்களிடைச்சி வளர்த்தபிள்ளைகள் அப்போதெங்கள் குருசுவாமியார் இக்கதையை எங்களுக்குச் சொன்னாரென்று கூறினர்கள் அதுகேட்டு பேழையிலிருக்கின்ற பெண்மணி அப்பாபிள்ளைகளே இப்போது சொல்லிக்கொண்டுவந்த கதையைநாளையதினம் அரசசமுகத்தில் அரசனறியச் சொல்லவேண்டுமென்று கேட்க அதற்குநல்லது தாயேயென்றனர்கள் மறுநாள்சூரிய னுதயமானபின்பு நவகோடிநாராயணசெட்டியார் ஆற்றங்கரையருகே வந்துபார்க்குமளவி லப்பேழைகரையருகே யிருக்கக்கண்டு அரசன்சமுகத்திற்சென்று அரசனே அப்பேழைக்குக் காவலாகநல்லசேவகர்களைவைத்தீர்கள் அவர்களப்பேழையைக் கரையருகில்வைத்துக் கொண்டிருக்கிறார்களென்று கூறினர் அரசன் ஆனைக்கு மசைவுபடாத கருங்கல்லையவர்க ளிழுக்கமாட்டுவார்களோ அதையொருவனோடிப் பார்த்துவாருங்க ளென்றார் அப்படியே ஒருவன் சென்றுபார்த்து கரையருகே பேழையானதிருக்கிறதென்று அரசனிடம்சொன்னான்.

அரசனிது வென்னபுதுமையோ வென்று காவலாகவிருக்கின்ற தனபிள்ளைகளை யழைத்துக்கேட்க அவர்கள்நாங்கள் காக்கவேண்டுமென்று ஆற்றங்கரை யருகேபோனோம் அப்போது பேழையானது நடு ஆற்றிலிருந்து கல்லுடனே மிதந்துகொண்டு நாங்களிருக்கிற கரையருகேவருகையில் அதைக்கண்டு என்தம்பியச்சமுற்றனன் மற்ற சேதிகளெல்லாம் பேழையிலிருக்கின்ற தெய்வீகத்தைக் கேட்டால் சொல்லுமென்று சொன்னார்கள் தெய்வீகராசன் அப்பேழையைஎடுத்துக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டன னப்படியே யவர்கள்போ யாற்றங்கரையி லிடத்திலிருக்கின்றகல்லை யவிழ்த்துப்போட்டுப் பேழையைமாத்திரம் இராஜசமுகத்திற் கொண்டுவந்துவைத்து

அப்பிள்ளைக ளப்பேழையைப்பார்த்து நாங்களுன்னைக் கரையருகில் மூத்தோமே அல்லது நீயேகரையருகில் வந்தாயோ உண்மையை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அப்பேழையிலிருக்கின்ற பதிவிரதையானவள் அப்பா நேற்றையதின மிராத்திரிநீங்களிருவரும் சொல்லிக்கொண்டிருந்த கதாப்பிரசங்கத்தைச் சொல்லிக்கொண்டு வாருங்களென்று சொல்லப் பிள்ளைகளக்கதையை ஆதிமோடந்தமாக நடந்தவற்றையெல்லா மரசன்சமுகத்தில் விண்ணப்பஞ்செய்ய அரசனதுகளையெல்லாங் கேட்டுமனங்கலங்கி மதிதீரனுகிய மந்திரியைப்பார்க்க மந்திரியானவர் அரசனைப்பார்த்து அப்பிள்ளைகள் 'சொல்லியவைகளெல்லாம் உண்மைதானென்று சொல்ல அத்தருணத்தில் சரஸ்வதியம்மனவள் சகலதேவர்களையும் ஆகாயத்தில் நிறுத்திவிட்டு அரசனண்டையில்வந்து ஓய்சக்கிரவர்த்தியே இவர்களிரண்டுபிள்ளைகளுமும்முடையபிள்ளைகள். இப்பேழையி லிருக்கிறவள் உம்முடைய பெண்சாதிதான் அவளுடைய பிள்ளைகளாகையால் அப்பேழையானதுகரையருகே மிதந்துவந்தது நீருக்கும் நெருப்புக்கும் கூர்மைபொருந்தியகோடாலிக்கும் அசைவுபடாமலிருக்கின்ற பேழையை நீர்தொட்டமாத்திரத்தில் அப்பேழைதானே திறக்கவேண்டுமென்று சாபமிட்டுக்கொண்டனள்.

ஆகையால் நீரிப்போதப் பேழையைத் தொட்ட மாத்திரத்தில்திறக்குமென்று சொல்லிவிட்டுப் பின்னையுஞ் சொல்லுகிறாள் அப்பா இந்நாள்வரைக்கும் பாதுகாத்துக் கொண்டிருந்தசெட்டியார் அவளுக்கு முன்செனனத்தில் பிள்ளையாகவேண்டும் நீஎவ்வளவுஞ் சந்தேகப்படாமல் பேழையைத்தொடு வென்றுசொல்ல அந்தவார்த்தையை இராஜாவானவர் அங்கீகரித்துக்கொண்டு நல்லதுதாயேயென்று பஞ்சாட்சரத்தைமனதில் தியானித்துக்கொண்டு அப்பேழை யருகிற்சென்று தன்கையினுற் பேழையைத்தொடப் பதிவிரதையிருந்தபேழையானது படீரெனத்திறந்து வெளியில்வந்ததைத் தேவர்கள்முதலானபேர்கள்கண்டு புஷ்பமாரிவருஷிக்கவுங் கீதங்கள்முழங்கவும் தேவகன்னிகள் நடனம்பண்ணவும் அப்சரஸ்திரீக ளுபயவெண்சாமரைபோடவும் இப்படியாக மகாவைபங்களுட னிருக்கிறபோதுதெய்வீகராஜன்கண்டு உம்பர்கள் பரவியவுயர்கயிலாச அம்புஜபாதா-அடியவர்நேசா - பார்வதிமனோகரா - திரிபுரதகனு - அனுதரட்சகா - பக்தவச்சலா - திரிநேத்திரா சரணஞ் சரணமென்றிராசனும் தேவிமார்களும்பிள்ளைகளுந் தோத்திரஞ்செய்து நமஸ்காரம்பண்ண.அப்போதுபரமேஸ்வரனும்பார்வதியும் தேவர்களும்அதிசயித்து அரசனைப்பார்த்து

மிக அன்புடனே உனது மனுநீதியையும் உரிமையுங்கண்டு வெகுசந்தோஷமாச்சுது இனிமேல் உம்முடைய அரசாட்சிக்குச்சென்று இராச்சியபரிபாலனம் பண்ணிச்சுகமேயிருந்து முடிவில்நம்முடைய பதவியைச் சேருமென்று சொல்லிப்போயினர்கள்.

அந்தவேளையில் சனிபகவான்வந்து உமக்குநிகரான சக்கிரவர்த்தியிவ்வுலகின்கண் ணொருவருமில்லைஉமக்குவேண்டிய வரங்களைக்கேளுமென்றுகூற அரசன் உமதுகாலமுள்ளளவும் என் சரித்திரத்தைச் சொல்லுகிறவர்களுக்கும வாசிக்கிறவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் தேவரீர் துன்பப்படுத்தாமல னுக்கிரகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அப்படியேயனுக்கிரகஞ்செய்தோமென்றுசொல்லிதமதிருப்பிடத்திற்குச்சென்றனா அதன்பின்பு பிள்ளைகளாகிய இராஜகுமாரர்களும் தேவியுமாக அரசனது பாதத்திற் பணிந்து நிற்கையிலப்போது இளையாளாகிய புஷ்பாஞ்சலி மூத்தாள் பாதத்திற்பணிந்து சொல்லுகின்றாள், அம்மா உமது கற்புக்கழிவில்லை உமது கற்பினால் யானும் பத்தாவும் பிள்ளைகளும தெய்வதரிசனம் பெற்றோமென்று இறுகத்தழுவிக்கொண்டு அந்தப்புரஞ்சென்று ஸ்நானஞ்செய்து நியமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு தேவாலயங்களைத் தரிசித்துத் தானதருமம் பரோபகாரஞ் செய்து சுகத்திலிருந்தார்கள்.

அரசனும் சூரியோதயத்தில் எழுந்திருநது ஸ்நானம்பண்ணி அனுஷ்டான முதலாகிய ஜெபதபங்களை முடித்துக்கொண்டு சகல சாமபிராச்ய வைபவங்களுடனே கிரீடாதிபதியாய் சிங்காதனத்தில் வந்திருந்தபோது பிராமணாகள் ஆசீர்வதித்து மந்திராட்சதையுங் கொடுக்கப் பெற்றுக்கொண்டு நித்தியதானங்களுஞ்செய்து பூலோகத்திலே தேவேந்திரனைப்போல அரசாட்சி நடத்திவருகிறநாளில் ராஜராஜாக்களுந் திறைகொண்டு வந்துவணங்க அவர்களைச் சக்கிரவர்த்தியானவர் கையமர்த்தி யிருக்கச்சொல்லி அவர்களுக்குத் தக்கபடி வெகுமானங்கள் பண்ணிவிட்டுத் தன்னுடைய பிள்ளைகளாகிய சத்தியதரனையும் தருமசீலனையும் அருகேவைத்துக்கொண்டு கண்ணிழந்தவாகளுக்குக் கண்வந்தாலெப்படியோ அப்படிப்போல பிள்ளைகளைப் பார்த்து,

குறள்.

"மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு."

என்பதுபோல உங்களை வளர்த்த இடைச்சியை அழைத்து வாருங்களென்று கட்டளையிட அப்பிள்ளைகளப்படியே அழைத்துவந்து இராஜசமுகத்தில் விட அரசனந்த இடைச்சிக்கு வேண்டிய உபசாரமான வார்த்தைகளைச்சொல்லி அனேக ஆடையாபரணங்களுங் கொடுத்துப் பிள்ளைகளைப்பார்த்து நமஸ்காரம்பண்ணிக் கொள்ளுங்களென்று சொல்ல அவர்களுமப்படியே நமஸ்காரம்பண்ணித் தங்கள்தாயாருகே யழைத்துவந்து தாயே இந்தம்மாள்தான் எங்களைவளர்த்த தாயென்று கூறினார்கள் செயப்பிரதையவளை ஆலிங்கனஞ்செய்து கொண்டு அடியம்மா இந்தப்பிள்ளைகளை நான்பெற்றேன் நீ அவர்களைவளர்த்து இதுவரையிலவர்களுக்கு வேண்டிய உபசாரமுதலானதுகள் செய்து பாதுகாதது வந்தபடியால் நீயே அப்பிள்ளைகளுக்கும் எங்களுக்குந் தாயென்று அனேக உபசாரமான வார்த்தைகளுஞ் சொல்லி சகல ஆபரணங்களுங் கொடுத்து சிலநாளருகே வைத்திருந்து அவளுடைய நகரத்திற்கு அனுப்பிவிட்டனள்.

சிலகாலஞ் சென்றபின்பு இராஜசபைக்கு பரதேசி காவற்செட்டியார் வரவைக்கண்டு சக்கிரவர்த்தி எழுந்திருந்து தமதருகில் வைத்துக்கொண்டு சில தருமசாஸ்திரத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிற ராஜசபைக்கு நவகோடி நாராயணசெட்டியார் காலுடகையும் நடுங்கிவந்து தெண்டனிட்டு நிற்கையில் சக்கிரவர்த்தி மிக அவலோடு அவரைப் பார்த்து ஐயா நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் எனது மறுமைக்குத் தவறுதல வராமல இன்னாள்வரைக்கும் பாதுகாத்து வந்தபடியால் நீரே பிள்ளையென்று அனேக உபசாரங்களும் அனேபணிதிகளும ஒரு பட்டணமுங்கொடுத்து அனுப்பிவிட்டார்.

கேளுந் தருமநந்தனு முன்னால் இந்திரபுரத்தை அபகரித்துக் கொண்ட அரசர்கள் இந்த சமாசாரங்களெல்லாம கேட்டுப் பயந்து காணிக்கை முதலானதுகளை யெடுத்துக்கொண்டு புரூரவச சக்கிரவர்த்தி யிருக்கின்ற தெப்விகபுரத்திற்குச் சென்று சக்கிரவர்த்தியும் கொலுச்சிங்காரமாகவிருக்கின்ற தருணம் பார்த்து அரசர்கள் பலரும் கூடிக்கொண்டு சக்கிரவர்த்தியைக்கண்டுதெண்டனிட்டு தேவரீர் அரசாட்சியை தேவரீரே ஒப்புக்கொள்ளும் நாங்கள் இன்றையவரைக்கும் பாதுகாத்துக்கொண்டிருந்தோம் இனிமேல் எங்களால் முடியாதாகையால் தங்களுடைய அரசைத் தாங்களே ஒப்புக்கொண்டு அரசாட்சிசெய்யவேணுமென்று அனேக உபசாரத்துடனே நமஸ்கரித்துச் சொன்னார்கள் சக்கிரவர்த்தியானவர் அவர்களுக்கு நன்மை

யான வசனங்களா லனேக உபசாரங்கள் செய்து வெகுமதிகளுங்கொடுத் தவர்களை யனுப்பிவிட்டுப் பின்பு சக்கிரவர்த்தி சகலபரிவாரங்களுடனே புறப்பட்டு இந்திரபுரத்திற்குச் சென்று வெகுகாலம் புத்திரகளத்திராதிகளுடன் சகல மதிமண்டலங்கள் எல்லாம் ஒரு கவளச் சக்கரத்தின் நிழலின்கண் செங்கோன் முறைமை வழுவாமல் மகா தருமசத்திய சீலராய்ச் சகலபிராணிகளுந் துதிக்கும்படி நடத்திவருங்காலத்தில் சக்கிரவர்த்தியாகிய புரூரவச்சக்கிரவர்த்தி தமது சேஷ்ட புத்திரனாகிய தருமனுக்குத்தான் அரசாட்சி செய்துகொண்டிருந்த இந்திரபுரத்துக்குச் சக்கிரவர்த்தியாகப் பட்டங்கட்டிவைத்து இளைய குமாரனாகிய தருமசீலனுக்கு தெய்வீகபுரத்தை அரசாட்சி செய்யும்படிப் பட்டங்கட்டிவைத்துப் பின்பு இளையாளாகிய புஷ்பாஞ்சலியினுடைய குமாரனாகிய குணபத்திரனுக்குப் பாட்டனாகிய தேவராஜன் அரசாட்சிசெய்துகொண்டுவந்த தெய்வபுரத்தை அப்புத்திரனுக்குப் பட்டங்கட்டிவைத்து இம்மூன்று பிள்ளைகளும் அரசாட்சி நிலைமை செய்துவருகிற வல்லமைகளைக்கண்டு மகா சந்தோஷத்தையடைந்து சிறிதுநாள் சுகத்திலிருந்தனர். இப்படிச் சிறிதுகாலஞ் சுகத்திலிருக்கும்போது ஒருநாள் புரூரவசக்கிரவர்த்தி.

நாலடியார்.

"நரைவருமென் றெண்ணி நல்லறி வாளர்
குழவியிடத்தே துறந்தார் புரைதீர
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
யின்னாங் கெழுந் திருப்பார்."

என்பதுணர்ந்து ஊர்வசியைத் தியானித்துக்கொண்டு வனத்திற்பிரவேசித்து முன்பு தாபத்திரியமாய் ஸ்தாபித்துவைத்திருந்த அக்கினிஸ்தாலியை வந்துபார்க்குமளவில் அதனிடத்தில் சமீகறிபஜாதநாமதேய அசுத்தவிருக்ஷமானது முளைத்து விருத்தியடைந்துகொண்டிருப்பதைப்பார்த்து ஆச்சரியமடைந்து யோசித்து இவருக்கு தெய்வீகமாகிய ஒருபுத்திரன் ஜெனித்து அம்மகாவிருக்ஷசாகைகளைக்கொண்டு இரண்டு அரணிகளைக்கற்பித்து அவைகளைக்கடைய ஒருதண்டைத்தையுங் கற்பித்துமுன்னதாகிய வரணிதானாகவும் பின்னஞ்ரணி ஊர்வசியாகவும் அவ்வரணிகளைக்கடையவும் தண்டமானது சந்ததிகளாகவும் தியானித்துத் தானந்தபுண்யலோகத்தை யடையும்படி வேதமந்திரங்களைச் சொல்லிக்கடையும்போது அவ்வேதங்களும் தனது இருதயத்தில் மூன்றுபாகமாகத்தோற்றி வேதஜோதி தருமமார்க்கங்களும்மூ

ன் றுவிதங்களாகப் பிரகாசித்து
க்கியயாகாதி சத்கருமபராளுக்
ரார்த்தமாகவும் ஜாதவேதனெ
ணிஸ்வரூபர் சம்பவித்தனர் அந்த
தி மூன்றுரூபங்களை வகித்து இந்
யலோகத்தை யடையச்செய்யு
ந்து அதில்உலகங்களுக்கு மிவ்வ
ளிதில் பலசித்தப் பிரயோசனங்
ங்கினர்.

வாரீர் பாண்டவகுலோத்த
தியானவர் வேதமயமாகி அக்கி
திடங்களாகிய வேதங்களை மூ
ளாவசியினுடைய புண்ணியலோ
தமராகிய ஸ்ரீ அக்கினிபகவானுக்
ருவவுலகமும் யோகபங்களை யடை
ரீதியாய் சிலயாகங்களையும் தனது
த்தியடைந்து தனக்குப்புத்திர ம
க்கினிபகவான் திருப்தியடைந்து
க்குறித்து சிலயாகங்களையுஞ் செ
டிய ஏகாக்ஷரப்பிரணவ மந்திரத்
அம்மூன்று அக்ஷரங்களுக்கும் மு
தும் யாவருக்குஞ் சுலபமாக அறிந்
ரேதாயுகாதியில் சருவலோகபுண்
யும் தன்மனோபீஷ்டப் பிரகாரமந்
ஞ்செய்கின்ற புண்ணியலோகத்தை
வாசஞ்செய்து பின்பு சாயுச்ய பத
யாசர் தருமபுத்திரருக்குச் சொல்ல
புண்ணிய கதையைக்கேட்டுப் பர
யைப்போலொத்த கதையைநாங்கள்
கதையாயிருக்கின்றது இப்பேர்ப்பட
வேறுபடாமலிருந்த சக்கிரவர்த்தியி
ல்லக்கேட்டு நாங்கள் கிருதார்த்த ர
ஞ்செய்தனர்.

ஸ்ரீவேதவியாசரும் தருமராஜனை
முடைய சகோதரனாகிய அர்ச்சுனன்